Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලප
மார்ச்.31–ஏப்.06,199

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 147



## குப்பைக்குள் குண்டு வந்தது எப்படி?

## ஆட்சிக்குள் பூசல்

## நாரதரின் துருவல்

## உளவு பார்க்கும் எதிர்க்கட்சி

## ரம்பாவின் இரகசியம்

## நடிகைகளான அழகிகள்

## கலகலப்பான காதிலபூ

# முரசம்

## நடுவர்களை நாடலாம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

சென்ற வருட இறுதியில்
சூரியக்கதிர்!
இந்த வருட ஆரம்பத்தில்
கிரிக்கெட் உலகக்கிண்ணம்!

இரண்டிலுமே
தலை நகர வீதிகளில்
வெற்றிக்களிப்பு
வழிந்தோடக் கண்டோம்!

உலகக் கிண்ண வெற்றியின்
களிப்பும். பெருமிதமும் நியாயம்தான்!
இலங்கை மட்டுமல்ல,
தென்னாசிய மக்களும்
பெருமை கொள்ளத்தக்க விஷயம்தான்!

ஆனால், ஒரே ஒரு உறுத்தல்
என்னவென்றால்;
வெற்றிக்களிப்புக்கள்
பசியால் வாடும் குழந்தைக்கு
வானவில் காட்டுவதாக
மாறிவிடுகிறதோ என்பதுதான்!

உலகக் கிண்ணப் போட்டிகள்
நடைபெற்ற காலகட்டத்தில்
நாட்டின் மிக முக்கிய பிரச்சனைகளில்
கவனம் செலுத்தாத அளவுக்கு
நிலமை மாறியிருந்தது.

அடுத்து
சிங்கர் கிண்ணப் போட்டிகள்
சிங்கப்பூரில் நடக்கவுள்ளன.
மறுபடி மக்களின் கவனம்
சிங்கப்பூர் நோக்கித் திரும்பும்!

கிண்ணங்களை கைப்பற்றுவதால்
நாட்டின் புகழ்
உலக அரங்கில் உயரலாம்.
ஆனால், நம் எண்ணங்களில்
பரந்ததன்மை தோன்றி
பொதுப்பிரச்சனைகளுக்கு
தீர்வுகாணத் தவறிக்கொண்டிருப்பதால்
விளையாட்டில் பெறும் புகழையும்
மனித உயிர் விளையாட்டால்
தொலைத்துக் கொண்டிருப்போம்!

கிரிக்கெட் போட்டிகளுக்கு
சர்வதேச நடுவர்களின்
தீர்ப்புகளை ஏற்றுக்கொள்வதுபோல
இனப்பிரச்சனை தீர்வுக்கும்
சர்வதேச நடுவர்கள்
தேவையெனில் அழைக்கலாம்.

அதில் தவறில்லை!

சிறந்த நடுவர்கள்
கிடைக்காமல் போனதால்தான்
அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில்
இலங்கை அணி தோற்றது.
சிறந்த நடுவர்கள் கிடைத்தமையால்
உலகக் கிண்ணத்தை ஜெயித்தது.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கும்
அந்த அனுபவம் பொருத்தமாகலாம்.
நம்பகமான நடுவர்கள் முன்பாக
நேர்மையான பேச்சுக்களை
ஆரம்பித்து முன் செல்லலாம்!

ஒருவர்மீது ஒருவர்
குற்றம் சொல்லாமலிருக்கவும்,
உறுதியான முடிவொன்றைக் காணவும்
சர்வதேச மத்தியஸ்தம் உதவலாம்!

சர்வதேசத் தலையீடு
நமக்கு அவமானம் என்று
யாரும் சொல்ல முடியாது.
ஏனெனில், இன்றைய யுத்தத்தில்
தெரிந்தும், தெரியாமலும்
சர்வதேசக் கரங்கள்
இரு தரப்புக்கும்
ஏதோ ஒரு வகையில் உதவுகின்றன.

அடிபட்டுக்கொள்ள
அந்நிய உதவி பெறுவதைவிட
அணைபட்டுக் கொள்ள
அந்நிய ஒத்துழைப்பைப் பெறுவது
எத்தனையோ மேல்!

உலகக் கிண்ணவெற்றியில்
கவனித்த மற்றொரு விஷயம்,
இலங்கை அணிக்கு வரவேற்பு
மற்றும் விருந்துபசாரங்களில்
எதிர்க்கட்சியைக் காணவில்லை!

பாகிஸ்தானுக்கு அமைச்சர்கள்
படையெடுத்தார்கள்;
எதிர்க்கட்சித் தலைவரை
அழைத்ததாகத் தெரியவில்லை.

கிரிக்கெட் வெற்றியை
தமது ஆட்சிக்காலச் சாதனையாக்க
அரச தரப்பு முயல்வதையும்,
வெற்றியை மனம் திறந்து
வியந்து வரவேற்றால்
ஆளும் தரப்புக்கு சாதகமாகுமோ
என்று எதிர்கட்சி நினைப்பதையும்
கவனிக்க முடிகிறது.

விளையாட்டுப் போட்டிகளில் கூட
விட்டுக்கொடுப்பில்லாத அரசியல் போட்டி,
இனப்பிரச்சனை தீர்விலா
இறங்கிவரப்போகிறது?!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்

## ஆன்மீக தாகம்



ஆன்மீக தாகத்தினால் நம் உள்ளம் தேவனைத். தேடுகிறது. வாழ்க்கையில் சந்தோசம் இல்லை. உள்ளத்தில் சமாதானம் இல்லை. மனதில் நிம்மதி இல்லை. 'உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்' (யாக் 5:13) என்று வேதம் சொல்கிறது. சோர்வான சமயங்களில் நாம் வேதாகமத்தை படித்து தியானம் செய்து ஜெபம் செய்கிறோம்.

மனிதனுக்கு இரண்டு வித தாகங்கள் உண்டு. ஒன்று சரீர பிரகாரமான தாகம். மற்றது ஆன்மீக தாகம். 'தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும் வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன்' (ஏசா 43:3) என்று நம் ஆண்டவர் சொன்னார்.

நாம் சரீரத் தாகத்தை தீர்க்க தண்ணீர் அருந்துகிறோம். ஆனால் இயேசுவோ நமது பாவம் கழுவப்பட்டாலொழிய ஒருவனுடைய ஆன்மீக தாகம் தீராது என்று நமக்காக தமது இரத்தத்தை சிந்தினார். எங்களுடைய பிரச்சனைகள் பெருங் காற்றைப்போல சீறி அடிக்கிறது. பாவப் பாரம் நெஞ்சை அழுத்துகிறது. சரீர பலவீனம், வியாதி எங்களை வாட்டி வதைக்கிறது.

நாம் என்ன வந்தாலும் எந்த நிலைமையிலும் நமக்காக நொருக்கப்பட்ட இயேசுவை நம்புவோம். 'என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்.' (யோ 6:35)

ஆர். தேவராஜ், கட்டுகஸ்தோட்டை.

## அச்சமூட்டிய மூன்று விடயங்கள்

எனது உம்மத்தினர் மீது எல்லாவற்றையும் விட மூன்று விடயங்களைப் பற்றித்தான் எனக்கு அதிகமாக அச்சம் ஏற்படுகிறது என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

ஒன்று இவ்வுலக செல்வங்கள் அதிகமாக கிடைத்ததின் காரணமாக அதன் மூலம் ஒருவருக்கொருவர் பெருமை கொள்ளுதல்.

மற்றொன்று ஆலிம்களிடம் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகள் பேணப்படாது அவர்களை அலட்சியப் படுத்தல்.

இன்னொன்று குர் ஆன் ஷரீபின் கருத்துக்களை ஒவ்வொருவரும் தங்கள் அபிப்பிராயப்படி விளங்கிக் கொண்டு அதனை மக்கள் மத்தியில் பரப்பிவிடுதல். மனித குலத்திற்கு அனுப்பிய மாமறையின் பூரணமான கருத்துக்களையும், அர்த்தங்களையும் அல்லாஹ் ஒருவனே அறிந்தவனாவான்.

அண்ணல் நபியை அச்சமூட்டிய அந்த மூன்று விடயங்களும் எம்மவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கட்டும்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல-144

### பரிசுக்குரிய கவிதை



#### யார் கண்டோம்?

வேரற்ற மரமானோம்
புயல் ஒன்று வருமென்று
யார் கண்டோம்?
போகின்றோம்;
திரும்பவும் கூடு சேரக்கூடுமோ
யார் கண்டோம்?
காலன் கைப் பூமாலையாய்
வாழ்க்கை நடுத்தெருவில்.....!

வே.கங்காதரன், பண்டாரிக்குளம், வவுனியா.

### இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

#### பயணம்

வாழ்க்கையோ ஒட்டை வண்டி!
நாளெல்லாம் யுத்தப் புயல்!
காலடியில் மனித இரத்தம்!
நெஞ்சு பொறுக்காமல்
பிஞ்சுமக்களோடு
வெந்த புண்ணில் வேல் தாங்கி
போறாளே அகதித்தாய்!

நிஸ்னா பேகம்-கல்முனை-02.

#### விதியும் சதியும்

விதி என்றிருந்தேன்
சதி கொண்டு போனது
புயலுக்குப் பயந்தேன்
புக்காரா வந்துபோனது.
கண்ணா!
எங்களுக்கோர்
குடையாவது தா

ரோஜா ஆனந்தராஜா-ராகலை.

#### தேடுதல்...

"பின்னுக்கு பாராதே தம்பி!
யாழ்ப்பாணம்
தெரியும்!"
"முன்னுக்கு பாரம்மா!
கிளிநொச்சி
தெரியுதோண்டு.....!"

பாலகமலன்-வவுனியூர்.

#### அகதிகள்

பொஸ்னியாவின் புரட்சிக்கவிதை
சோமாலியாவின் சோக கீதம்
பங்களா தேசின் நாட்டார் பாடல்கள்
இலங்கையின் தேசியகீதம்!

இ.கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழகம்.

#### அழிவுதான் எங்கும் மிச்சமடா!

ஒட்டிய உறவால்
உலகில் உதித்தேன்;
ஆசைக் கொன்று
ஆஸ்திக் கொன்றாய்
அளவுடன் பெற்றேன்-மகனே!
அப்பாவும் இங்கு இல்லையடா
ஆஸ்திக்கும் இப்போ தொல்லையடா! -போர்
அழிவுதான் எங்கும் மிச்சமடா!!

காரைதீவூர் சிவம்-குருக்கள்மடம்.

#### அகதி

முகவரியைத் தொலைத்துவிட்டு
முகாம் வழியே அலைகின்றனரோ?!

தேன்மொழி-கொழும்பு.

#### அங்கும் அதுதானோ?

புளிச்சோறு கிடைக்குமென்று
புலம்பெயர்ந்து போனவரை-அங்கும்
இளித்தவாய் இனமென்று
இகழ்ந்து விரட்டினரோ?

ச.மகாலிங்கம்-வெலிமடை.

#### இதுதான் வாழ்க்கையா?

காகிதஓடக் கடல் அலை வாழ்வாய்
கலங்குதல் வாழ்க்கையா?
துடுப்பிழந்த மரக்கலமாய்
துரத்தியதோ போர்க்கரங்கள்!
உங்கள் பின்னால் நாளை
நாங்களும் தான்......!

எஸ். பத்மினி, மட்டக்களப்பு.

#### பகடைகள்

அதிகாரமும் ஆயுதமும்
வதிவிடத்தையே
ஆடுகளமாக்கியதால்,
நிகழ்காலம் நிர்க்கதியில்
எதிர்காலம் கேள்விக்குறியில்!

வை.சித்திக்கிருஷ்ணா,
பாண்டிருப்பு.01.

#### பிழை

முன்னோரின் பிழையதனால்
முளைத்ததிந்த சோகக் கதை!
எண்ணற்றோர் உயிர் குடித்தும்,
இன்னுமிது முடியவில்லை!
கண்ணற்றோர் உள்ளவரை
காலன் இவர்களை விடுவதில்லை!

என்.கேசவன், வத்தளை.

#### சந்தர்ப்ப அநாதைகள்

எங்கள் கண்முன் தெரிவது
சமாதானப் பாதையோ
இலட்சிய வேட்கையோ
அல்ல
பட்டினியும் சோகமுந்தான்!

சுபாவரன், கண்டி.

## கவிதைப் போட்டி இல-147



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.04.1996.

—முகவரி—

கவிதைப் போட்டி இல: 147. தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

* ப. செல்வசீலன், காரைதீவு.
* மொஹம்மட்டஷ்மீர், குறிஞ்சாக்கேணி-03
* ஜெ. ஜெகதீஸ்வரி, திருகோணமலை.
* அ.ஜ.இப்திகார் பானு, கந்தளாய்.
* வி. சகாதேவன், கொழும்பு-09.
* கே. புவனலோஜினி, இறக்குவானை.
* எம்.ரிஷான் ஷெரீப், மாவனல்லை.
* ஸீபியா ஹஸன், மாத்தறை.
* வதனி சிவலிங்கம், சீனக்குடா.
* க.யோகேஸ்வரன், கஹகல்லையூர்.
* மு.தா.மு.அமீன், ஹாலி-எல.
* வி.தயாளன், சுவிற்ஸர்லாந்து.
* திருமதி. நிஸாயா பாயிஸ், அளவத்துகொட.
* ரஸீஸா யாசீன், அக்குறணை-07.
* ரி. பிரியதர்ஷினி, பசறை.
* மோகனா ராமச்சந்திரன், கோட்லோஜ் எஸ்டேட்.
* செ. கலாவேணி, இறக்குவானை.
* எம். மொஹமட் நிலுஜான், பாணந்துறை.
* எம்.ஏ.எம். றினோஷ், கிண்ணியா-03.
* ஆர் கிருஷ்ணன், கொழும்பு-13
* மூ.மு. பைஸல், நிக்கவெவ.
* நிஸானா. ஏ. லெத்தீப், கிண்ணியா-05.
* எம்.கே. பல்ஹீல் இல்மான், ஹேனமுல்ல.
* ரா. சுதர்ஷினி, கொழும்பு-06.
* ப.ஜெ. பிரகாஷ், பசறை.
* எம். ஆனந்தக்குமார், அவிசாவளை.
* ஏ.எஸ். மாலன், வவுனியா.

# வாசக(ர்) சாலை

**காலையில் படித்ததும்–மாலையில் கேட்டதும்**

வெள்ளிக்கிழமை காலையில் தான் முரசு என் கரம் கிடைத்தது. எக்ஸ்ரே ரிப்போர்ட் பார்த்தேன். 'கடற்புலிகள் பதிலடியில் இறங்கலாம்' என்று நாரதர் கோடிட்டுக்காட்டியிருந்தார். வெள்ளிக்கிழமை மாலையில் வானொலிச் செய்தியைக் கேட்டபோது அதிர்ச்சி, கடற்படையினரும் கடற்புலிகளும் சண்டை, என்று செய்தியில் சொல்லப்பட்டது. நாரதருக்கு சபாஷ். அதுபோல அரசியல் தீர்வுப் பொதி தொடர்பாகவும் முரசு சொன்னதெல்லாம் பலித்துவருகிறது. அரசியல் தீர்வு யோசனை கடந்த வருடம் வந்தபோதே துணிச்சலாய் நேரான கருத்து சொன்னது முரசு மட்டும்தானே!

எஸ். தர்மரத்தினம், நேரியகுளம்-வவுனியா.

பௌத்த குருமார்களில் ஒரு சாராரின் குறுகிய போக்கை ராஜதந்திரியார் ஒரு கிரிக்கெட்வீரர் போல விளாசித்தள்ளியிருந்தார். ஆசிரியர் தலையங்கத்தில் கூறப்பட்ட கருத்தும் நெத்தியடி தான்.

ரா.கோணேஸ்வரன், ஆரையம்பதி.

யோவ் முரசாரே! பட்டுச்சேலை பரிசுப் போட்டி வைத்து பக்கம் 12 இல் ஒரு பகுதியை வெட்டி எடுக்கச் செய்துவிட்டீரே: அதனால் என் மனைவிக்கும் எனக்கும் வாராவாரம் பிரச்சனை ஏற்படுவது உமக்குத் தெரியுமோ? முரசை பத்திரப்படுத்தும் என் போன்றவர்களுக்கு கூப்பனை வெட்டும் விடயத்தால் கோபம்தான் வரும். அதனால் உடனடியாக மாற்று ஏற்பாடு செய்யவும். இல்லாவிட்டால் நடப்பதே வேறு!

ஆர்.மகேஸ், கொழும்பு-9.



தமிழ் மக்கள் புலிகளுக்கு எதிராக வாய்திறக்க வேண்டும் என்று கோருவோர்கள், பௌத்த மதகுருமார் விடயத்தில் மௌனமாக இருக்கலாமா என்று நாரதர் கேட்டிருந்தது சரியான அடி.

திருமதி மாலினி இந்திரன்,
நீர்கொழும்பு.

'ஒப்பரேசன் என்டபே' மற்றொரு கலக்கல். இடி அமீன்கூட கார்லோஸை கண்டு மரியாதை செலுத்தியது கார்லோஸின் சாககங்களுக்கு கிடைத்த பாராட்டுத்தானே!

எல்.என்.பாத்திமா, கல்முனை.

'காதிலை பூ கந்தசாமி' வாரா வாரம் குண்டுகளைப் போடுகிறார். சிரிப்பு வெடிச்சத்தம் மட்டுமல்ல, சிந்தனையிலும் மின்னல் பளீரென்று அடிக்கிறது.

வி. இம்தியாஸ், பாணந்துறை.

தேன் கிண்ணத்தில் குமாரபுரம் படுகொலைபற்றிய கவிதை அருமை. தேன் கிண்ணக் கவிதைகளில் தரம் உயர்ந்து வருவதும் பாராட்டத்தக்கது.

சா.ரவீச்சந்திரா, திருக்கோணமலை.

இராமாயணமும், இலக்கிய நயமும் கைகோர்த்து நமக்குத் தருவது இலக்கியத் தேன். தெவிட்டாத சுவை. இராஜகுமாரனுக்கும், ரசிகனுக்கும் வாழ்த்துக்கள்.

திருமதி ஏ. பாலாம்பிகை, நுவரெலியா.

மர்மக்கதை மன்னன் ராஜேந்திரகுமாரின் 'நீ! நீயா!' தொடர் சூப்பர் திரில். அலட்சிய பாவத்துடன் எழுதும்பாணி அலாதியானது.

கோ. புஸ்பராஜ், பண்டாரவளை.

முரசே! அரசியல் கணிப்புக்களில் தான் துல்லியம் காட்டுகிறாய் என்று நினைத்தேன். 'கிரிக்கெட்' கணிப்பிலும் வியப்பு ஏற்படுத்திவிட்டாய். இந்தியாவுக்கு கிண்ணம் கிடைப்பது சந்தேகம் என்று நீ குறிப்பிட்டதைப் பார்த்து எரிச்சல்தான் வந்தது. முடிவு தெரிந்தபோது உன் கணிப்பின் உண்மை புரிந்தது.

செல்வி. ரமணி பாலச்சந்திரன், கண்டி.

'இந்திய அணி தோல்வி காணலாம். கிரிக்கெட் உலகின் புருனே மன்னன் டெண்டுல்கர் தோற்க மாட்டார்' என்று முரசு சொன்னது நுற்றுக்கு நூறு பலித்தது.

எம்.எச். ஹமீட், மட்டக்களப்பு.

# விடுமுறைகாலத்தில் படை நடவடிக்கை
# அரசுக்கு புலிகள் மறைமுக எச்சரிக்கை

**வடபகுதியில் பாரிய தாக்குதலுக்கான தயாரிப்புக்கள் பூர்த்தியாகிவிட்டன. ஜனாதிபதியிடமிருந்து அனுமதி கிடைத்தவுடன் படை நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன. சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் வடபகுதியில் பாரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு முடிந்துவிடவேண்டும் என்று திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. படையினரின் வடபகுதி நடவடிக்கைகளை முறியடிக்க பரவலான தாக்குதல் நடவடிக்கைக்கு புலிகளும் தயாராகிவருகின்றன.**

### தாமதம் ஏன்?

வடபகுதியில் பாரிய நடிவடிக்கை ஒன்றை மேற்கொள்ள முன்பே திட்டமிடப்பட்டது. தயாரிப்புக்களும் பூர்த்தியான நிலையில்தான் பாடசாலைகளை திறக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

நாடெங்கும் இருந்து பாடசாலைகளை திறக்குமாறு கோரிக்கைகள் வலுப்பட்டதையடுத்து, வடபகுதி இராணுவ நடவடிக்கையை ஒத்திவைத்துவிட்டு பாடசாலைகள் திறக்கப்பட்டன.

விரைவில் இரண்டாம் தவணை விடுமுறைகளுக்காக பாடசாலைகள் மூடப்படவுள்ளன. அதன்பின்னர் வடபகுதியில் பாரிய நடவடிக்கையை மேற்கொள்ள தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கிளிநொச்சிப் பகுதியில்தான் படையினரின் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலில் கிளிநொச்சியை கட்டுப்பாட்டில் கொண்டுவந்துவிட்டு, பின்னர் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளைக் கவனிக்கலாம் என்பதுதான் திட்டம்-என்று அத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை புலிகள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில், கிளாலிப் பாதையை தடைசெய்து வடமராட்சி, தென்மராட்சியில் உள்ள மக்களை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவர அரசாங்கம் திட்டமிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகள் அறிவித்தல்

இதேவேளை மார்ச் 6ம் திகதி முதல் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உள்ள மக்களை வெளியேறுமாறும், வன்னிக்கு செல்லுமாறும் புலிகள் அறிவித்து வருகின்றனர். அதற்காக மார்ச் 6 முதல் இலவச படகுச் சேவையும் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

மக்களை வெளியேறுமாறு கோரும் அறிவிப்புப் பலகைகளும் தென்மராட்சி, வடமராட்சி பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளன. எனினும் வன்னியில் இட நெருக்கடி, மற்றும் வசதியீனங்கள் உருவாகும் என்று காரணம் காட்டி, அங்கு செல்ல பெரும்பாலான மக்கள் மறுத்துள்ளனர்.

படையினரின் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாக 'ஈழநாதம்' பத்திரிகை பின்வருமாறு தெரிவித்துள்ளது: "குடாநாட்டில் தற்பொழுது வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் உள்ள மக்களை ஓர் இராணுவ முற்றுகைக்கு உள்ளாக்குவதே நோக்கமாகும். அதன்மூலம் அவர்களை யாழ்ப்பாணம் வலிகாமப் பகுதி நோக்கி நகரவைத்தலே திட்டமாகும்" என்று குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டால் விளைவுகள் மோசமாகும் என்றும் ஈழநாதம் சூசகமாக எச்சரித்துள்ளது.

"சந்திரிக்கா அரசின் இம் முயற்சியானது எந்தளவுக்கு நிறைவேறும்- நிறவேறாது என்பது ஒருபுறமிருக்க, மக்களை தமது இராணுவப் பிடிக்குள் கொண்டு வருவதற்காக சந்திரிக்கா அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையால் விளையப்போகும் அனர்த்தங்களுக்கு சந்திரிக்கா அரசே முழுப்பொறுப்பாகும்.

இராணுவ நடிவடிக்கைகள் அரசு எதிர்பார்க்கும் வெற்றியை ஈட்டிக் கொடுப்பதை விட அதற்கு எதிரான மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும் எனத் துணிந்து கூறலாம்" என்று புலிகளின் தினசரியான ஈழநாதம் மறைமுகமாக எச்சரித்துள்ளது.

### பரவலான தாக்குதல்

வடபகுதியில் படையினரின் நடவடிக்கை வேகத்தை கட்டுப்படுத்த நாடெங்கும் பரவலான தாக்குதல்களுக்கு புலிகள் திட்டமிட்டுள்ளனர்.

கிழக்கில் மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களில் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவும், அதிரடிப்படைப்பிரிவும் தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தலாம் என்று நம்பப்படுகிறது.

தலைநகரிலும் மற்றும் படையினரது கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் புலிகளது நடிவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என்று கருதப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் நடமாடும் யுத்த முறையிலான தாக்குதல்களை புலிகள் அதிகப்படுத்தியுள்ளனர்.

ஏப்ரல் மாதம் மோதல்கள் நிறைந்த மாதமாக அமையப்போகிறது. இரு தரப்புமே பலப்பரீட்சையில் குதிக்க தயாராகிவருகின்றன என்று அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

# கிழக்கில் புலிகளின் 'அதிரடிப்படை'
# புலிகள் வெளியிட்டுள்ள இழப்புக்கள்

(நமது நிருபர்)

*17-03-96* முதல் *24.3.96* வரை வடக்கு-கிழக்கில் நடைபெற்ற மோதல்களில் தமது தரப்பில் பலியானவர்களது விபரங்களை புலிகள் வெளியிட்டுள்ளனர்.

அந்த விபரங்கள் பின்வருமாறு;

17.3.96 அன்று மட்டக்களப்பு நகரின் எல்லையில் அமைந்திருந்த சிறீலங்கா பொலிஸ் நிலையம் ஒன்று விடுதலைப் புலிகளின் விசேட பயிற்சி பெற்ற அதிரடிப்படையினரால் தாக்கியழிக்கப்பட்டது. 45 நிமிடங்கள் தாக்குதல் நீடித்தது. 5 பொலிசார் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். சுமார் ஒரு மணி நேரம் புலிகள் அப்பகுதியை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். ஆயுதங்களை கைப்பற்றிய பின்னர் கட்டிடங்களை புலிகள் தகர்த்தனர்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் மேஜர் ரோய், லெப்டினன்ட் வண்ணன், இரண்டாவது லெப்டினன்ட் ரவிசங்கர் ஆகிய மூவர் பலியானார்கள்.

18.3.96 இல் மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாமுக்கு அருகில் நடைபெற்ற தாக்குதலில் புலிகள் தரப்பில் இழப்பு எதுவும் ஏற்படவில்லை.

20.3.96 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள அராலித்துறையில் அதிகாலை 1.45 மணியளவில் இராணுவ மினி முகாம் ஒன்று புலிகளால் தாக்கப்பட்டது. 10 நிமிட தாக்குதலின் பின்னர் அப்பகுதியை ஒரு மணிநேரம் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. எட்டுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். புலிகளின் தரப்பில் மூன்றுபேர் பலியானார்கள்.

23.3.96 அன்று பிற்பகல் 1.50 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முறக்கொட்டாஞ்சேனை இராணுவமுகாமிலிருந்து வந்தாறுமூலை நோக்கிச் சென்ற இராணுவ அணி மாவடிவேம்பு என்ற இடத்தில் புலிகளால் வழிமறித்து தாக்கப்பட்டது.

சுமார் 40 நிமிடம் மோதல் நீடித்தது. 40ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள். ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கடந்த 22ம் திகதி கிண்ணியடி இராணுவ முகாம்மீதான தாக்குதலில் பலியான 11 புலிகளின் நினைவாகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் புலிகளின் தரப்பில் மேஜர் ரவன், லெப்படினன்ட் இலக்கியன், 2ம் லெப்டினன்ட் முரளி ஆகியோர் பலியானார்கள்.

இவ்வாறு புலிகளின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் விசேட அதிரடிப் படையினர் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

அதனால் புலிகளும் கிழக்கில் அதிரடிப் படை பிரிவொன்றை உருவாக்கியுள்ளனர். அந்த அணியில் உள்ளவர்களுக்கு தனியான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன.

# கனடாவில் இலங்கையர் வீடுகளில் கொள்ளை!

கனடாவில் உள்ள இலங்கைத் தமிழர் இல்லங்களில் இரண்டு பெரிய கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இரண்டு கொள்ளைகளிலும் தமிழ் இளைஞர்களே சம்பந்தப்பட்டுள்ளனர்.

வீட்டு உரிமையாளரை துப்பாக்கி முனையில் கட்டிவைத்துவிட்டு 60 ஆயிரம் கனடிய டொலர்கள் பெறுமதியான பணமும், நகையும் கொள்ளையிடப்பட்டது. துப்பாக்கியோடு வந்த ஆறு தமிழ் இளைஞர்களே அக் கொள்ளையை நடத்தியிருக்கிறார்கள்.

இரண்டாவது கொள்ளையில் 18 வயது நிரம்பிய மூன்று தமிழ் இளைஞர்களும், ஒரு வெள்ளைக்காரப் பெண்ணும் சம்பந்தப்பட்டுள்ளனர்.

இலங்கைக்கு துரிதகதியில் பணம் அனுப்பும் நிறுவனம் ஒன்றின் உரிமையாளரிடமே இரண்டாவது கொள்ளை நடைபெற்றுள்ளது. பட்டப்பகலில் நடந்த அக்கொள்ளையில் 70 ஆயிரம் டொலர் பெறுமதி யான பணம் கொள்ளையிடப்பட்டது.

இந்த இரு கொள்ளைகளுமே கனடாவில் இலங்கைத் தமிழர் இல்லங்களில் நடைபெற்றுள்ள மிகப் பெரிய கொள்ளைகளாகும். சந்தேக நபர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

# இராணுவத்தினருக்கு விளக்க மறியல்

(மட்டக்களப்பு நிருபர்)

வாழைச்சேனை பிரதேசத்திலுள்ள தியாவட்டவான் கிராமத்தில் ஐந்து பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட சம்பவத்தை தொடர்ந்து நான்கு இராணுவ வீரர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக 13 பெண்கள் வாழைச்சேனை பொலிசில் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து மாவட்ட நீதிபதி ஜெ. விஸ்வநாதன் அடையாள அணி வகுப்பிற்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து அடையாள அணி வகுப்பின்போது நான்கு படைவீரர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# குறைந்து வரும் இறப்பு வீதம்

சாவகச்சேரி மருத்துவ மனையின் அறிக்கைகளின்படி நோயாளர் இறப்பு வீதம் குறைவடைந்துள்ளதாக சாவகச்சேரி மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த நான்கு மாத தரவுகளின்படி நோக்கும் போது பெப்ரவரி மாதம் குறைந்தளவான நோயளர்களே இறந்துள்ளனர். கடந்த நவம்பர் மாதத்தில் 59 பேராகவும், டிசம்பரில் 42 பேராகவும், ஜனவரியில் 28 பேராகவும், பெப்ர வரியில் 17 பேராகவும் வீழ்ச்சியடைந்துள்ளதென மேலும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும் நோயாளர்களின் தொகையோ கடந்த நான்கு மாதகாலமாக அதிகரித்த வண்ணமே உள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மருத்துவமனையில் பெப்ரவரி மாதத்தில் மட்டும் முப்பத்தி மூவாயிரத்து எண்ணூற்றுப் பத்தொன்பதுபேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளதாக மருத்துவமனைப் பகுதிகளி லிருந்து தெரியவந்துள்ளது. இவ்வாறு சிகிச்சை பெற்றவர்ளில் இரண்டாயிரத்து நானூற்று நாற்பத்தொருபேர் சிகிச்சைக் களத்தில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக் கொண்டனர். பற்சிகிச்சைப் பிரிவில் 2484 பேரும், கண் சிகிச்சை நிலையத்தில் 1320 பேரும், சயரோகத்திற்கு 1063 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

# வரிவிதிப்பால் தொழில் இழப்பு!

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவில் செங்கல் உற்பத்தி செய்யப்படும் இடங்களான வேப்பவெட்டுவான், மாவடி ஓடைப் பகுதியிலுள்ள கல்வாடிக்காரர்களும் கல் ஏற்றி விற்பனை செய்வோரும் புலிகளின் அதிகரித்த திடீர் வரிவிதிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறார்கள்.

தாம் உற்பத்தி செய்யும் செங்கற்களை ஆயிரம் கற்கள் 900/- ரூபாவுக்கு தங்களுக்கே விற்க வேண்டுமென்றும் செங்கல் வாங்குவோர்கள் தம்மிடமே வாங்க வேண்டுமென்றும் புலிகள் கண்டிப்பான உத்தரவு விடுத்துள்ளார்கள். இதன்படி பழைய கொள்வனவு விலையிலிருந்து திடீரென ஆயிரம் கற்களுக்கு 300/- ரூபாய் கூடுதலாகப் புலிகளுக்கு கொடுக்க வேண்டியுள்ளது. முன்னர் புலிகள் ஆயிரம் கற்களுக்கு 50/- ரூபாவையே வரியாக அறவிட்டனர்.

இதேவேளை சுண்ணாம்புச் சூளை வைத்திருப்போருக்கும் புலிகள் புதிய திடீர் அதிகரித்த வரியை அறவிடுவதால் அத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரும் பாதிக்கப்படும் சூழ்நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கின்றார்கள். தற்சமயம் ஒரு சூளை வைத்திருப்பவர் தங்களுக்கு மாதாந்தம் ரூபா 3000/- செலுத்த வேண்டுமென்று புலிகள் கேட்டுள்ளனர். முன்னர் 750/- ரூபா வரையான தொகையையே ஒரு சூளைக்காக புலிகள் வரி அறவிட்டு வந்தனர்.

மட்டு மாவட்டத்தில் சுண்ணாம்பு சூளை வைத்திருப்போரிடமிருந்து மாதம் ஒன்றுக்கு ரூபா 5 இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையை புலிகள் வரியாகப் பெறுகின்றனர்.

# இணைந்து பறந்த இரு கொடிகள்

'வில்ஸ்' உலகக் கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றிய செய்தியை கனடாவில் உள்ள இலங்கைத் தமிழர்களும் கொண்டாடினார்கள்.

கனடாவில் உள்ள ரொரண்ரோவில் அங்குள்ள நேரப்படி அதிகாலை 4.30 மணிக்கு இலங்கை அணி வெற்றியீட்டியது. தூங்காமல் இருந்து தொலைக்காட்சிகளில் போட்டியைக் கண்டு களித்தார்கள்.

ரொரண்ரோவில் உள்ள இலங்கைத் தமிழர்களது உணவு விடுதிகள், திரையரங்குகள் என்பவற்றில் இறுதிப் போட்டியின் நேரடி ஒளிபரப்பை இலங்கைத் தமிழர்கள் கூட்டம் கூட்டமாக திரண்டு கண்டுகளித்துக் கொண்டிருந்தனர்.

வெற்றிச் செய்தியை அடுத்து நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தமது கார்களில் இலங்கையின் தேசியக் கொடியோடு வீதிவலம் வந்தனர்.

சிலகார்களில் இலங்கையின் தேசிய கொடியோடு புலிக் கொடியும் பறக்கவிடப்பட்டிருந்ததும் கவனத்தை ஈர்த்தது.

# அன்னைபூபதி நினைவு தினம்

(மட்டக்களப்பு நிருபர்)

உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்த தியாகி அன்னை பூபதியின் நினைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளை புலிகள் ஏற்பாடு செய்துள்ளனர்.

வாகரை, வவுண தீவு, பட்டிப் பளை, போரதீவுப் பற்று பிரதேசங்களிலும் ஏறாவூர் பற்று பிரதேசத்தில் வயல் சார்ந்த பிரதேசங்களிலும் வீதிகள் தோறும் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டுள்ளன.

அத்தோடு ஆலயங்களிலும் முக்கிய சந்திகளிலும் ஒலிபெருக்கி மூலம் புலிகளின் பிரசாரப்பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

ஏப்ரல் மாதம் 19ம் திகதிவரை சிரமதானம், விளையாட்டுப் போட்டிகள், கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இறுதி நாளன்று கலைவிழாவும் பொதுக் கூட்டமும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வடபகுதியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் அன்னை பூபதி நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

19.04.1990 இல் அன்னை பூபதி மரணமானார். இந்திய அமைதிப்படைக்கு எதிராக சாகும் வரை உண்ணாவிரதமிருந்தே அவர் உயிர் துறந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய ரீ.வி. நிகழ்ச்சிகள் மட்டக்களப்பில்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டமெங்கும் இந்திய தொலைக்காட்சி ஒளிபரப்பான தூரதர்ஷன் நிகழ்ச்சிகளை நன்கு தெளிவாகக் காணமுடிகிறது. 6 ஒளிபரப்பு அலைவரிசையில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காணமுடிகிறது.

ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சிகள் அரிதாக இருப்பதால் சலித்துப் போன குறை தூரதர்ஷனில் நாளெல்லாம் இடம் பெறும் தொலைக்காட்சி தமிழ் அலைவரிசை நிகழ்ச்சிமூலம் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது என்று சற்று ஆறுதல்படக் கூடியதாகவுள்ளது.

மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம், தமிழ் உட்பட இன்னும் வேறு இரு மொழி அலைவரிசைகளைத் தெளிவாகக் காணமுடிகிறது.

இலங்கை தொலைக்காட்சி அலைவரிசைகள் உட்பட 12 மேற்பட்ட அலைவரிசை நிகழ்ச்சிகளை மட்டக்களப்பில் காணக் கூடியதாகவுள்ளது.

இதேபோல் அகில இந்திய வானொலியின் தமிழ் நிகழ்ச்சிகளையும் மட்டக்களப்பில் **F.M.** அலைவரிசை 101ல் மிகத் தெளிவாகக் கேட்க முடிகிறது. இது தமிழ் நாடு காரைக்கால் வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகிறது.

# கரிகாலன் வாகரையில்

புலிகள் அமப்பினரின் அரசியல் பிரிவு துணைத்தலைவர் கரிகாலன் தற்போது மட்டக்களப்பு வாகரையில் தங்கியுள்ளார்.

அன்னை பூபதி நினைவுதினக் கொண்டாட்டங்களை கவனிக்கவே அவர் வன்னியில் இருந்து திரும்பிவந்துள்ளதாகத் தெரிகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசாங்க திணைக்கள தலைவர்களை வாகரைக்கு அழைத்து கரிகாலன் பேச்சு நடத்திவருகிறார்.

இதேவேளை மட்டக்களப்பு நகர வர்த்தகர்களிடம் புலிகளும் நிதி கேட்கின்றனர். தமிழ் இயக்கங்கள் சிலவும் நிதி கேட்டுள்ளன. எல்லோருக்கும் எப்படி கொடுப்பது? என்று அங்கலாய்க்கின்றனர் வர்த்தகர்கள்.

# தேடப்பட்டவர் சரணடைந்தார்

(அலுவலக நிருபர்)

கொழும்பு கதிரேசன் வீதியில் உள்ள புகையிலைக் கடையொன்றில் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதல்லவா.

அதேசமயம் போலி அடையாள அட்டைகள், கடவுச் சீட்டுக்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

ஆனால், ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட இடத்திலிருந்து போலி அடையாள அட்டைகள் கைப்பற்றப் படவில்லையென்று தெரியவந்துள்ளது.

ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரது புகையிலைக் கடையிலாகும். அக்கடைக்கு சமீபமாகவுள்ள மற்றொரு இடத்தில் இருந்துதான் போலி ஆவணங்கள் மாட்டினவாம்.

நீண்டகாலமாக அடையாள அட்டை, கடவுச் சீட்டுக்கள் என்பவற்றை போலியாகவும், மற்றும் இலஞ்சம் கொடுத்து ஒரிஜனலாகவும் பெற்றுக் கொடுக்கும் தொழிலில் குமார் என்பவர் ஈடுபட்டு வந்தாராம். அவரது அலுவலகத்தில் எப்போதும் ஒரே கூட்டமாக இருக்குமாம்.

புகையிலைக் கடையில் ஆயுதங்கள் சிக்கியவுடன் அருகிலுள்ள இடங்களிலும் பொலிஸார் தேடுதல் நடத்தினார்கள். அப்போதுதான் குமாரின் அலுவலகமும், அங்கிருந்த ஆவணங்களும் மாட்டிக் கொண்டன. அப்போது குமார் அங்கிருக்கவில்லை.

புலிகளது முக்கிய பிரமுகர் குமார் தேடப்படுவதாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியானவுடன் பயந்துபோன குமார் பொலிஸில் சரணடைந்துவிட்டார்.

## அரச வானொலியின் குழப்பும் செய்தி!
# தமிழ்-முஸ்லிம் மக்கள் அதிர்ச்சியும் கவலையும்!

(ஏறாவூர் நிருபர்)

கடந்த 23.03.96 அன்று மட்டக்களப்பு வந்தாறுமூலையில் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் நடந்த கடும் மோதலின் போது புத்தளத்திலிருந்து இஜ்திமா மாநாடு முடித்து மட்டக்களப்பு திரும்பிக் கொண்டிருந்த பஸ் ஒன்று இடைநடுவில் அகப்பட்டுக் கொண்டதால் ஏறாவூர் வாசியான அப்துல் கபூர் என்பவர் கொல்லப்பட்டார். பஸ் சாரதியான ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த சிவப்பிரகாசம் என்பவர் படுகாயங்களுக்கு உள்ளானார்.

இச்சம்பவம் குறித்து வானொலியின் அன்றிரவு ஒன்பது மணிச் செய்தியறிக்கையில் "இஜ்திமா மாநாடு முடித்து திரும்பிக் கொண்டிருந்த முஸ்லிம் பயணிகளின் பஸ் பயங்கரவாதிகளால் தாக்கப்பட்டது" என்று குறிப்பிடப்பட்டது.

இரு தரப்பு மோதலின் இடை நடுவிலேதான் மேற்படி பஸ் அகப்பட்டது என்பதும் பஸ்ஸுக்கு புலிகள் இலக்கு வைக்கவில்லை என்பதும் தமிழ் முஸ்லிம் மக்களால் உடனடியாகவே அறியப்பட்டுவிட்டது.

உண்மைக்குப் புறம்பான அச்செய்தியறிக்கையினால் தமிழ் முஸ்லிம் மக்கள் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தார்கள். நெருக்கடியான இவ்வேளையில் அதிக பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டிய வானொலி இவ்விதம் செயற்பட்டது மட்டக்களப்பில் வாழும் முஸ்லிம் தமிழ் மக்கள் மத்தியில் வானொலிமீது அதிக வெறுப்புணர்வைத் தோற்றுவித்தது.

குறித்த அன்றைய மோதலில் ஸ்தலத்தில் 28 பேரும் ஆஸ்பத்திரியில் 12 பேருமாக மொத்தம் 40 படையினர் கொல்லப்பட்டனர். புலிகள் தரப்பில் 4 பேர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதாகவும் 8 பேர் படுகாயங்களுக்குள்ளானதாகவும் உடனடியாக அவ்வூர் மக்களிடமிருந்து கிடைத்த தகவல்களால் அறிய முடிந்தது.

மறுநாளிரவு ஏறாவூர் பொலிஸ் காவலரணை புலிகள் தாக்கியதில் புலி ஒருவரின் சடலமும் 2 'அருள்' ரக கைக்குண்டுகளும் பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டன. பொலிசாரில் இருவர் காயமடைந்தனர்.

# தேய்ந்து வரும் ரூபவாகினித் தமிழ்சேவை!

## உறவுக்கு முதலிடம்-திறமைக்கு கதவடைப்பு!!

ரூபவாகினிக் கூட்டுத்தாபனம் தொடங்கிய காலத்திலிருந்து சில வருடங்கள் வரை தரமான பல தமிழ் நிகழ்சிகளைக்கண்டுகளித்து வந்திருக்கிறோம். ஆனால் இன்று அத்தகைய நிகழ்ச்சிகளைக் காண்பது அரிதாகிவிட்டது.

இதற்கு தமிழ் நிகழ்ச்சிகளுக்காக வழங்கப்பட்ட நேரம் குறைக்கப்பட்டு விட்டது என்று சொல்லிவிட முடியாது; கொடுக்கப்பட்டுள்ள நேரத்தையும் செலவிடுவதற்காக ஒதுக்கப்படும் பணத்தையும் நல்ல முறையில் பயன்படுத்துவதற்கு பொறுப்பிலுள்ளவர்கள் ஊக்கமெடுக்காதிருப்பதே காரணம் என்று கூறத் தோன்றுகிறது.

இன்று சிறந்த-புதிய கலைஞர்களின் நிகழ்ச்சிகளைக் காணமுடியவில்லை. வெளிப்படையாகச் சொல்லப் போனால், 'கலையரங்கம்' தற்போது ஒரு குறிப்பிட்ட வட்டத்தினரைத் திருப்திப்படுத்தும் நிகழ்ச்சியாக மாறிவிட்டது. நாட்டியக் கலையில் சிறப்புற்று விளங்கும் பல நடன ஆசிரியைகள் கலையரங்கத்தில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்தும் அவை நிராகரிக்கப் பட்டுள்ளன. இரண்டாவதுபட்சக் கலைஞர்களுக்குரிய 'இராக பாவம்' போன்ற நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுமாறு அவ் விண்ணப்பதாரர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறதாம்.

ரூபவாகினியில் தமிழ் நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பான திரு. விஸ்வநாதனின் சகோதரி, நம் நாட்டில் சிறந்த நடன ஆசிரியை என்பதை மறுக்க முடியாது. அவரால் அமைக்கப்பட்ட 'நவசக்தி' நாட்டிய நாடகம் மிகச் சிறந்ததாக அமைந்தது. இந்நிகழ்ச்சியைத் தயாரிக்கச் செலவிடப்பட்ட தொகையின் ஒரு சிறு பகுதியாவது வேறு எந்த நிகழ்ச்சிக்கும் செலவிடப்படவில்லை என்று ரூபவாகினியில் பணிபுரிபவர்களே கூறுகிறார்கள். ஏனைய கலைஞர்களையும் ஊக்குவிக்க இதுவரை ஏன் முயற்சி செய்யவில்லை என்பதுதான் எமது கேள்வி.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடனத்துறை ஆசிரியைகளுக்கோ, மாணவிகளுக்கோ, மட்டக்களப்பு விபுலானந்த இசைக் கல்லூரி நடன ஆசிரியை- மாணவிகளுக்கோ இதுவரை போதுமான இடம் தரப்படவில்லை. திருகோணமலையிலும் பல சிறந்த கலைஞர்கள் இருக்கிறார்கள். மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மலையகக் கலைஞர்களுக்கும் போதிய வாய்ப்பளிக்கப்படவில்லை.

வெளியூர்களிலுள்ள கலைஞர்களை இங்கு தருவிப்பதில் இன்று பல பிரச்சனைகள் இருக்கலாம் என்று சாக்குப்போக்குக் காட்டலாம். கொழும்பிலேயே மிகத்தரமான கலைஞர்கள் இருக்கிறார்கள்.

தமிழ்ப்பிரிவுக்கு ஒத்துழைப்புக்குறைவு, அலுவலர்கள் பற்றாக்குறை என்றெல்லாம் கூறப்படுவதுமுண்டு. ஆனால் இருக்கும் வசதிகளையும் தக்கபடி பயன்படுத்தாமல் உதாசீனம்செய்வதுதான் வேதனைக்குரியதாகும்.

ரூபவாகினிக் கூட்டுத்தாபன இயக்குநர் சபையின் உறுப்பினரான கலாநிதி எம்.ஏ. நுஹ்மான் அவர்கள், தமிழ் நிகழ்ச்சிகளைப் பற்றிக் கரிசினை எடுக்கத் தகுதியுடையவர் என்பதனால், இதில் கூடிய கவனம் செலுத்துமாறு அவரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அத்துடன் நாடகம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதற்கேற்ற கலைஞர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும், நிகழ்ச்சி பற்றிய ஆலோசனை வழங்குவதற்கும் ஒரு குழுவினை அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

சிவந்தி சுப்பிரமணியம்-கொழும்பு-03.

## மன்னார்ச் செய்திகள்

(மன்னார் நிருபர்)

புதுக்குடியிருப்பு கிராமத்திற்கு மின்சாரவசதி கிடைக்கவுள்ளது இதற்கென இவ்வாண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சுமார் 14 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

மன்னார்த் தீவில் தொலைபேசி இணைப்புக் கோரி விண்ணப்பித்துள்ள பலருக்கு இதுவரை வழங்கப்படவில்லையாம். ஏற்கனவே உள்ள இணைப்பை புதுப்பித்து தருமாறு கேட்டால் அதுவும் நடப்பதில்லை என்று பாதிக்கப்பட்ட ஒருவர் முரசுக்குத் தெரிவித்தார்.

கற்பிட்டியில் இடம் பெற்ற ஓட்டோ விபத்தில் மன்னாரைச் சேர்ந்த முஹம்மது யாக்கூப் என்பவர் மரணமானார். கரம்பையில் இடம்பெற்ற மற்றுமொரு ஓட்டோ விபத்தில் பெரியமடுவைச் சேர்ந்த முஹம்மது முனாப் என்பவர் மரணமானார்.

மன்னார்-கற்பிட்டி சிறு கப்பல் சேவையில் சுமார் 200 பேர் ஏற்றப்படுகின்றனர். எனினும் அனைவரும் வசதியாகப் பயணம் மேற்கொள்ளமுடியாத வாறு வசதியீனங்கள் காணப்படுவதாக பயணிகள் குறை கூறுகின்றனர்.

மன்னார்த்தீவுப் பகுதியில் தற்போது தேங்காய் ஒன்று 10 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

## மூதூரில் கலை-கலாசார விளையாட்டு விழா

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் மூதூர் பிரதேசத்தில் மூவின மக்களும் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும், சமாதானத்துடனும் வாழும் நிலையை மேலும் வளர்த்தெடுக்கும் நோக்குடன் மாபெரும் கலை-கலாசார, விளையாட்டு நிகழ்ச்சிகளையும், விழாவினையும் எதிர்வரும் ஏப்ரல் மாத நடுப்பகுதியில் மூதூர் பிரதேச சபையால் நடாத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.

மூதூர் பிரதேச சபையின் இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் இவ்விழா, சமாதானத்தை தொனிப்பொருளாகக் கொண்டிருக்கும். மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம்.றபீக் அவர்களின் தலைமையில் சபைத் துணைத் தவிசாளர், எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அத்துடன் பிரதேச செயலாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், இராணுவ இணைப்பதிகாரி, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், பொலிஸ் பொறுப்பதிகாரி, மக்கள் வங்கி-இலங்கை வங்கி முகாமையாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர்களின் உதவியோடு இந்நிகழ்சிகள் நடைபெறவுள்ளன.

இப்பகுதிவாழ் தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவ, மாணவிகள், இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு சிறப்பிக்கவிருக்கும் இக் கலை, கலாசார, விளையாட்டுப் போட்டிகளின் மூலம் சமாதானத்தையும், சுபீட்சத்தையும் பிரகாசிக்கச் செய்யும் ஒரு விழாவாக இது அமையவிருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

## வைத்தியசாலையின் அவலம்

(காரைதீவு நிருபர்)

"கல்முனை ஆதாரவைத்தியசாலையில் இடம்பெறும் நிருவாக ஒழுங்கீனங்களால் ஏழைப் பொதுமக்கள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள். அங்கு 11/2 மாத காலமாக ஈசிஜீ. பிரிவு மூடப்பட்டு உள்ளது. முறையான நீர்வசதி இல்லை, கிளினிக்குளில் மருந்து இல்லை. 'லேபர்' அறைக்கு மின்சாரவசதியில்லை, மழை பெய்தால் எக்ஸ்றே எடுக்கமுடியாது. கிளினிக்குகளில் போதுமான தளபாடங்கள் இல்லை.

100 வருடகாலம் பழமைவாய்ந்த இவ்வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக 30 வருடங்கள் இயங்கிவருகின்றது. ஆனால் ஒருவிதமுன்னேற்றமுமில்லை. தலைமை வைத்திய அதிகாரியோ தன்னிச்சையாக செயற்படுகிறார். அபிவிருத்தி சபையோ இயங்க முடியாது உள்ளது. 10 பேர் தேவையான அங்கு 6 வைத்தியர்களே உள்ளனர். ஆனால் தாதிமார் உள்ளனர். வைத்திய அதிகாரிக்கும் ஈசிஜீ பதிவுப் பெண்மணிக்கும் 'லடாயாம்'. அதனால் அதிகாரி பெண்மணியை அம்பாறைக்கு மாற்றியுள்ளார். ஆகவே ஈசிஜீ பிரிவு மூடப் பட்டுள்ளதாம்."

இவையெல்லாம் கல்முனைத்தொகுதி தமிழ்பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பகிரங்கமாக உரையாடப்பட்டவை.

## பலகோடி ரூபாவில் விளையாட்டரங்கு

(காரைதீவு நிருபர்)

கல்முனையில் சர்வதேச விளையாட்டரங்கொன்று பல கோடி ரூபா செலவில் நிருமாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல்லை புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்றப்பும், விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்கவும் அண்மையில் நட்டுவைத்தனர்.

இங்கு 50 அயிரம் பேர் இருந்தும், 5ஆயிரம் பேர் நின்றும் விளையாட்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கக்கூடியதான வசதிகள் செய்யப்படவிருக்கின்றன. இங்கு நீச்சல் தடாகம், உல்லாசவெளி விளையாட்டரங்கு போன்றவை அமைக்கப்படவுள்ளன.

இவ்வரங்கிற்கு யூனியர் அரங்கொன்று சாய்ந்தமருது தாமரைக்கேணி மைதானத்தில் அமையவுள்ளது. அங்கு பயிற்சிகள் செய்ய ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது என்று அமைச்சரின் இணைப்புச் செயலாளர் வை.எல்.எஸ்.ஹமீத் தெரிவிக்கிறார்.

இதேவேளை அம்பாறைமாவட்டத்தில் 8 மீள்குடியேற்ற மாதிரிக்கிராமங்கள் இவ்வாரம் திறந்துவைக்கப்பட்டுள்ளன. சுமார் 11 கோடி ரூபா செலவில் இவை நிருமாணிக்கப்பட்டுள்ளன. வளத்தாப்பிட்டி, ஹிஜ்ராநகர், திராய்க்கேணி, ஆலிம்நகர், கண்ணகிபுரம், மீராநகர், சின்னப்பாலமுனை, இன்ஸ்பெக்டர் ஏற்றம் ஆகிய மாதிரிக்கிராமங்களே திறந்துவைக்கப்பட்டுள்ள மாதிரிக்கிராமங்களாகும்.

## வாய் மூடிக்கிடக்கும் பரிவர்த்தனை நிலையம்

கல்முனை தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் கடந்த ஜனவரியில் வெடி குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி முற்றாகச் செயலிழந்துள்ளது.

இதனால் தொள்ளாயிரத்திற்கு மேற்பட்ட தொலைபேசி சொந்தக்காரர்களின் அன்றாட வர்த்தக வெளியிடத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டதோடு வெளிநாடுகளில் தொழில் புரியும் தம் உறவினர்களுடனான இணைப்பு தொலைத் தொடர்புகளும், அத்தியாவசிய தேவைகள் தொலைபேசித் தொடர்புகளும் தடைபட்டுள்ளன.

கல்முனை' நகரில் இருந்த ஒரே ஒரு இலகு முறை தொலைபேசி 'பே-ஃ போ'னும் தற்போது பழுதடைந்துள்ளது.

சில கொமியுனிகேசன் தொலைபேசிகள் இப்பகுதியில் இயங்கிய போதிலும் இவற்றின் சொந்தக்காரர்கள் ஒரு தொலைபேசித் தொடர்புக்கு அதிக கட்டணம் அறவிடுகின்றனர்.

எம்.சி.கலீல், 328, ஹனியா வீதி, கல்முனை-05.

## தெளிவற்ற ஒலிபரப்பு

பண்டாரவளைப் பகுதியில் தமிழ் வர்த்தக ஒலிபரப்பு சேவை, FM, ஆகிய அலைவரிசைகளில் நிகழ்ச்சிகளை தெளிவாக கேட்க முடிவதில்லை. இதனால் இப்பகுதி நேயர்கள் மிகவும் மனவருத்தம் அடைகின்றனர்.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்து நடவடிக்கை எடுத்து நிகழ்ச்சிகளை மிகத் தெளிவாகக் கேட்க உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ப.இந்திரேஸ், பண்டாரவளை.


BRIGHT இன் 1996/97

ஆண்டு 5 புலமைப்பரிசில் முன்னோடிப் பயிற்சி

வெற்றிப்படிகளை எட்டிப்பிடிக்கும் BRIGHT மாணவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்குகிறது என்பது, மாணவர்கள் பெறும் சித்தியின் மூலம் (பரீட்சைப்பெறுபேறுகளினால்) நிரூபிக்கப்படுகிறது.

**1995 ஆம் ஆண்டு BRIGHT ன் முன்னோடிப் பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்களுள் 300 க்கும் அதிகமான மாணவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னணியில் அதிகூடிய புள்ளி பெற்று சித்தி அடைந்துள்ளனர்.**





எமது மாணவர்களுள் இவ்வருடம் வெள்ளவத்தை அரசினர் தமிழ் வித்தியாலய மாணவன் து. யோகநாத் (BSE/591/95) தமிழ் மாணவர்களுள் அதிகூடிய புள்ளிகளை பெற்று (175)ஜப்பான் புக்ஓசா 8வது ஆசிய பசுபிக் சிறுவர் மகாநாட்டில் கலந்து கொள்ள தெரிவாகியுள்ளார் என்பதை BRIGHT பெருமையுடன் அறியத்தருகிறது. இவருக்கும் பரீட்சையில் சித்தியெய்திய ஏனையோருக்கும் BRIGHT வெகுமதியும் நற்சான்றிதழ் வழங்கியும் கௌரவித்து உள்ளது. 1995 கூடிய புள்ளி பெற்று சித்தியடைந்த மாணவர்களது புகைப்படமும் விபரம் வெற்றிக்கனி இதழ்களில் வெளிவரும்.

**மிகச்சிறந்த பாடசாலையைத் தெரிவு செய்யவும் புலமைப்பரிசில் பெறவும் உகந்த வழி BRIGHT ன் முன்னோடிப் பயிற்சியே.**

இதில் இணைய விரும்புவோர் பயிற்சிக் கட்டணம் 250ரூபா காசுக்கட்டளையை The Director -BTC எனும் பெயருக்கு Sea Street SPO இல் பெறக்கூடியதாக பெயர், முகவரி கொண்ட விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பி இணைந்து கொள்ளவும்.

**இவற்றோடு BRIGHT இன் வெளியீடுகள்**

★ பொது விவேகம் பாடநூல் 75.00 ★ பொது விவேகம் சொல்நூல் 60.00
★ மாதிரி வினாவிடை ஆண்டு5 100.00 ★ மாதிரி வினாவிடை ஆண்டு 4 100.00


**வெற்றிக்கனிக் களஞ்சியம்**

**இதழ் 1 முதல் 6 வரை 250/=**

பிரதி மாதந்தோறும் வெளிவரும் வெற்றிக்கனி மாணவர்களின் வெற்றியை நிச்சயப்படுத்தும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க.


BRIGHT BOOK CENTRE

**BRIGHT-BOOK CENTRE (PVT) LTD**
S-27, FIRST FLOOR, P.O. BOX 162
Colombo Central Super Market Complex
Colombo - 11 T.P. 434770


**"மந்திரயோகி" மாந்திரீக மருத்துவம்**

காதல், திருமணம், கல்வி, தொழில், வெளி நாட்டுப்பிரயாணம் வேறு காரியங்களிலும் தடைகளும், காதலர்கள் ஒன்றுசேரமுடியாமை, கணவன்-மனைவி குடும்பப் பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீயசக்திகளின் தொல்லைகள் தீவினைகளினால் தீராத உடல்-மனநோய்களும் ஏற்படலாம் இவைகளுக்கு இறைவன் அருளி, முனிவர்கள் கையாண்ட, மர்மமான மருந்து, மந்திர ஜந்திர வசிய தாயத்துக்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ ஆண்-பெண் ஜனராஜ வசியங்கள், பாதுகாப்பு ரட்சைகள், வேறு நன்மையான காரியங்களுக்கு, வேண்டிய மந்திரம் வசியங்கள் செய்துகொள்ள அரசாங்கத்தினால் பதிவுசெய்யப்பட்ட மலையாளம் புகழ் மஹாசக்தி உபாசகர் மந்திரயோகியிடம் வரமுடியாதவர்கள், வெளி நாட்டவர்கள் சம்பந்தப்பட்டவர்களினதும், தாய் அல்லது தந்தையர்களினதும் பெயர்களுடன் தங்கள் கோரிக்கைகளை எழுதி 10 ரூபா 50 சத முத்திரைகள், 2 பதிவுத்தபாலில் வைத்து அனுப்பி தெய்வீகமருத்துவ ஆலோசனைகளை பதிவுத்தபாலிலும் இறை பரிகாரப்பொருட்களை (வி.பி.பி) பார்சல்களிலும் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றலாம், YOGI.DR.SACKTHYANANTHEBABA என்ற பெயருக்கு விரும்பிய குருதட்சணை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும். விலாசம்:-


YOGI.DR.SACKTHYANANTHEBABA
INDIAN CLINIC, GURUSACKTHY CENTRE
KALLADY-BATTICALOA (P.O)
குருசக்தி நிலையம், கல்லடி-மட்டக்களப்பு.



**BRIGHT ன் தபால் மூலம் கல்வித்திட்டம்**

மூன்றே மாதங்களில்
ஆங்கிலம்/சிங்களம் பேச, எழுத,
வாசிக்க கற்றுத்தரப்படும்
விபரங்களுக்கு கீழ்காணும்
விண்ணப்பத்துடன் தொடர்பு கொள்க

பெயர்: ..........
விலாசம்: ..........

BRIGHT TRAINING CENTRE
S-27, FIRST FLOOR. P.O. BOX. 162.
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX.
COLOMBO 11. TEL: 434770


## விளம்பரப் பகுதி


**வெளிவந்துவிட்டது...**

வெற்றிக்கனி
ஆண்டு 5
இதழ் 7.8,9
கல்வி மஞ்சரி O/L
EFFECTIVE ENGLISH WITH GRAMMAR 1 & 2

BRIGHT BOOK CENTRE
S-27,First Floor, P.O. Box - 162
Colombo Central Super Market Complex
Colombo - 11. T.P. 434770





சகலவிதமான
வாத்தியக் கருவிகளையும்
உதிரிப்பாகங்களையும்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளவும்
அவற்றை
உத்தரவாதத்துடன்
திருத்திக் கொள்ளவும்
நாடுங்கள்





SAI SANGEETHA
L. G .123. PEOPLES PARK. COLOMBO 11.
TEL: 445102 FAX: 440925



**விசேட வைத்திய சேவை**

- நாட்பட்ட நோய்கள்
- தோல் நோய்கள்
- மூளைக் கோளாறுகள்
- வாதம்
- ஒவ்வாமை

போதை வஸ்துக்களால் ஏற்பட்ட பாதிப்பு

*மேல் காணும் நோய்களுக்குப் பக்க விளைவுகளற்ற முறையில் நவீன மருந்துகளால் சிறந்த சிகிச்சைகள் வழங்கப்படும்.*

கோணேஸ்வரா மெடிக்கல் சென்ரர்
இல. 403, மின்சார நிலைய வீதி,
திருக்கோணமலை.
தொலைபேசி:- 026-22736

# தலைநகரில் குண்டுகள்

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

**1. கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி தலைநகருக்குள் குண்டுகள் கொண்டு வரப்படுவது எப்படி?**
**2. பலத்த சிரமத்தின் மத்தியில் கொண்டு வரப்பட்ட குண்டுகளை குப்பைகளுக்குள் ஏன் போட்டார்கள்?**
**3. குண்டுகள் தயாரிக்கப்புள்ள முறைகளில் இருந்து அவற்றின் இலக்குகள் என்ன?**

## நாரதர்

குப்பைக்குள் இருந்தாலும் குண்டுமணி மங்காது என்று சொல்வதுண்டு.

கொழும்பு நிலவரத்தைப் பொறுத்தவரை 'குப்பைக்குள் இருந்தாலும் குண்டின் பலம் குறையாது' என்பதுதான் பொருத்தம்.

முதலில் மட்டக்குளியாப் பகுதியில், பின்னர் புறக்கோட்டைப் பகுதியில் குப்பைகளுக்குள் கிளரக் கிளரக் குண்டுகள்.

இப்போது கொழும்பில் உள்ள குப்பைத்தொட்டிகள் அருகே செல்லவே மக்கள் அஞ்சுகிறார்கள்.

குப்பைகளுக்குள் கிளறி இரும்புத் துண்டுகள், பிளாஸ்ரிக் கழிவுகள், பித்தளைக் கழிவுகள், தகர டப்பாக்கள் போன்றவற்றை சேகரித்து விற்பனை செய்வோர்பாடுதான் திண்டாட்டம்.

எந்தப் புற்றுக்குள் எந்தப் பாம்பிருக்குமோ என்பதுபோல, எந்தக் குப்பைக்குள் எத்தனை குண்டிருக்குமோ? என்று பீதியடைய வேண்டியிருக்கிறது.

கொழும்பு புறக்கோட்டையில் குப்பையைக் கிளறியவரின் கண்களில்தான் குண்டுகள் தென்பட்டன.

அவை குண்டுகள்தான் என்று முதலில் அவருக்குத் தெரியாது. குண்டுகளின் வெளியே இருந்த இரும்புத் தகடுகளைப் பார்த்துவிட்டு நல்ல விலைக்குப் போகும் என்று கணக்குப் போட்டுவிட்டார். பின்னர்தான் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. பொலிஸில் போய் சொல்லியிருக்கிறார்.

மொத்தம் மூன்று குண்டுகள். முப்பது கிலோ எடை. வாகனங்களின் உதிரிப் பாகங்களில் ஒன்றான 'போல்ஸ்' ஐந்து கிலோ. சயனைட் குப்பி ஒன்று ஆகியன குப்பைக்குள் கிடந்திருக்கின்றன.

இதனையடுத்து எழுந்துள்ள கேள்விகளை முதலில் வரிசைப்படுத்துவோம்.

1. கடும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி தலைநகருக்குள் குண்டுகள் கொண்டுவரப்படுவது எப்படி?

2. பலத்த சிரமத்தின் மத்தியில் கொண்டுவரப்பட்ட குண்டுகளை குப்பைகளுக்குள் ஏன் போட்டார்கள்?

3. குண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ள முறைகளில் இருந்து அவற்றின் இலக்குகள் என்ன?

மேற்கண்ட மூன்று கேள்விகளுக்கும் இதுவரை நமக்கு கிடைத்துள்ள தகவல்களில் இருந்து விடை தேடவேண்டும்.

கடல் வழிப்பாதை மூலமாகவே தலைநகரில் உள்ள புலிகளுக்கான விநியோகங்கள் வந்து சேருகின்றன.

ஆயுதங்கள், வெடிகுண்டுகள் மட்டுமல்ல, வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டிய வீடியோ பிரசார கசட்டுக்கள் கூட கடல்வழியாக கொழும்புக்கு கொண்டு வரப்படுகின்றன.

வெடிகுண்டுகள் வன்னியில்வைத்தே பூரணமாக தயாரிக்கப்பட்டுத்தான் கொழும்புக்கு அனுப்பப்படுகின்றன. குறிப்பிட்ட இலக்குக்கு கொண்டுசென்று வைப்பது மட்டுமே கொழும்பில் உள்ள புலிகள் செய்ய வேண்டிய வேலை.

வெடிமருந்தை தருவித்து கொழும்பில்வைத்து குண்டு தயாரிப்பதைவிட, வெடிகுண்டாகவே தயார்படுத்தி அனுப்புவது சுலபமான காரியம்.

கடல்வழியாக தலைநகருக்கு வந்து சேரும் விநியோகப்பாதையை தடுப்பதில் கடற்படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலவீனமாகவே உள்ளன.

ஆனால், தரைவழிகளில் காணப்படும் சோதனை நடவடிக்கைகள் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது போன்ற எண்ணத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

அதனால்தான் கொழும்பில் குண்டு வெடிப்பு, அல்லது குண்டுகள் கண்டு பிடிப்பு போன்ற சம்பவங்களின்போது பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறி எப்படி நடந்தன? என்று ஆச்சரியங்கள் கிளம்புகின்றன.

ஒருவழி அடைக்கப்பட்டால் இன்னொரு பாதையை திறப்பதற்கு ஏற்ற செயல் முறைகளை புலிகள் கொண்டுள்ளனர்.

தரைவழிப் பாதுகாப்பை உடைக்கக் கூடிய வகையில் பணத்தை தாராளமாக பாயவிடும் வசதியும் புலிகளிடம் இருக்கிறது.

கடல்வழிப்பாதையை பயன்படுத்தும் அளவுக்கு கடற்புலிகள் அணியின் பலமும் புலிகளிடம் இருக்கிறது.

எனவே கடும்பாதுகாப்பு ஏற்பாடுகள் மத்தியில் தலைநகருக்குள் குண்டுகள் வருவது சாத்தியமா? என்ற கேள்வி அடிபட்டுப் போகிறது.

அடுத்த கேள்வி, குண்டுகளை ஏன் குப்பையில் போடவேண்டும்?

இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

ஒன்று; குண்டு மறைத்து வைக்கப் பட்டுள்ள இடத்தில் ஏதாவது சிக்கல்கள், பிரச்சனைகள் ஏற்பட்டிருக்கலாம். படையினரின் தேடுதல் நடவடிக்கை குறிப்பிட்ட பகுதியில் இடம் பெறக்கூடும் என்று ஏதாவது தகவல் கிடைத்து அதனால் குப்பையில் கொண்டு வந்து குண்டைப் போட்டிருக்கலாம்.

இரண்டாவது காரணம், குண்டுத்தாக்குதலுக்காக அனுப்பப்பட்ட உறுப்பினர் மனமாற்றம் ஏற்பட்டு புலிகளின் தலைமையை ஏமாற்றிவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம். அதனால் குண்டுகளை குப்பைகளுக்குள் அவர் போட்டிருக்கலாம்.

புறக்கோட்டை குப்பைக்குள் கிடந்த குண்டோடு சயனைட் குப்பியும் இருந்திருக்கிறது.

சயனைட் குப்பியை தம்மோடு வைத்திருப்பதுதான் புலிகளின் வழக்கம். அதுதவிர சயனைட் குப்பியை மறைத்து வைப்பதும் பெரிய காரியமல்ல. எனவே அதனையும் குப்பைத் தொட்டியில் வீச வேண்டிய அவசியமில்லை.

புலிகள் இயக்கத்தில் இருந்து முற்று முழுதாக தன்னை விலக்கிக் கொள்ள நினைக்கும் ஒரு உறுப்பினருக்கு சயனைட் குப்பி தேவைப்படாது.

அதனை மறைத்து பாதுகாக்கும் அவசியமும் ஏற்படாது.

தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கைகளுக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்கப் பட்ட புலிகளில் சிலர் மனம்மாறி தப்பியோடிய சம்பவங்களும் ஏற்கெனவே நடந்துள்ளன.

கொழும்பு கூட்டுப்படை தலைமையகத்தை தாக்குவதற்காக வாகனக் குண்டடோடு ஒரு கரும்புலியை அனுப்பிவைத்தார்கள்.

இலக்கை சமீபித்ததும் அவர் மனம் மாறிவிட்டது. வாகனத்தை இடைநடுவில் நிறுத்திவிட்டு இறங்கிச் சென்றுவிட்டார்.

அந்த நடவடிக்கைக்கு பொறுப்பாளராக இருந்த வரதன் வாகனத்தை எடுத்துச் சென்றதால் வாகனக் குண்டு மாட்டாமல் தப்பியது. பின்னர் வேறு ஒரு கரும்புலி மூலம் கூட்டுப்படை தலைமையகம் தாக்கப்பட்டது.

அதேபோலவே தற்போதும் கரும்புலித் தாக்குதலுக்காக அனுப்பப்பட்ட ஒருவர் மனமாற்றம் அடைந்திருக்கலாம் என்று சந்தேகிக்க இடமுண்டு.

இன்னொரு சந்தேகமும் இருக்கிறது. கொழும்புக்குள் கொண்டுவரப்பட்ட குண்டுகளை பல்வேறு இடங்களில் புலிகள் மறைத்து வைத்திருக்கலாம்.

சில குண்டுகளை தமக்கு நெருக்கமான ஆதரவாளர்களின் இடங்களில் மறைத்து வைத்திருக்கலாம்.

கொழும்பு கதிரேசன் வீதியல் புகையிலை கடையில் ஆயுதங்கள் மாட்டியவுடன், தலைநகரில் உள்ள கடைகளில் சோதனைகள் பரவலாக இடம்பெறும் என்று நினைத்து, புலிகளது ஆதரவாளர் ஒருவர் தன்னிடம் இருந்த குண்டுகளை கொண்டுபோய் குப்பைத் தொட்டியில் போட்டிருப்பார்.

குண்டுகளை கொண்டுவந்து வைத்து விட்டுப்போன புலிகள் இயக்க உறுப்பினருடன் தொடர்புகொள்ள முடியாத நிலையில், தன்னைப் பாதுகாக்க குண்டுகளை குப்பைக்குள் போடுவது தவிர வேறு வழி தெரியாமல் இருந்திருக்கலாம்.

ஒன்றில், புலிகளது உறுப்பினர் ஒருவர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையை செய்யாமல் தப்பிக் கொள்ளும் நோக்கத்தோடு குண்டுகளை கைகழுவி விட்டிருக்க வேண்டும்.

அல்லது, புலிகளால் மறைத்துவைக்க கொடுக்கப்பட்ட குண்டுகளை, புலிகளது ஆதரவாளர் ஒருவர், 'எங்கே மாட்டிக் கொள்ள நேருமோ' என்ற பயத்தில் குப்பைக்குள் தள்ளியிருக்க வேண்டும்.

இரண்டில் ஒன்றுதான் நடந்திருக்க வேண்டும்.

வேறு இடத்திற்கு கொண்டுசெல்வதற்காக குப்பைத் தொட்டியில் மறைத்து வைத்திருக்க முடியாது.

கொழும்பில் உள்ள குப்பைத் தொட்டிகள் தினமும் கிளரப்படுவதுண்டு. அது புலிகளுக்கும் தெரியும். எனவே, குப்பைத் தொட்டியை பாதுகாப்பான இடம் என்று புலிகள் நினைத்திருக்க மாட்டார்கள்.

அதுதவிர, குப்பைத் தொட்டிக்குள் உள்ள குண்டை பகல் நேரத்தில் வெளியே எடுக்கவும் முடியாது. சனநடமாட்டம் நிறைந்த பழைய சோனகத் தெருவில் குப்பைத் தொட்டியில் இருந்து குண்டை எடுத்துச் செல்வது சுலபமான வேலையல்ல.

சரி, அப்படியானால், புலிகளது ஆதரவாளர் மறைத்து வைத்திருந்த குண்டுகளோடு சயனைட் எப்படி வந்தது என்று கேட்கலாம்.

தரைவழியாக கொழும்புக்கு வந்து சேருகின்றன. புலிகள், கொழும்பில் வைத்தே சயனைட் குப்பியைப் பெறுகின்றனர். குறிப்பிட்ட குண்டுத் தாக்குதலுக்கு வரும் புலிகள் இயக்க உறுப்பினருக்குரிய சயனைட்டாக அது இருந்திருக்கலாம். தம்மிடம் புலிகள் ஒப்படைத்த பொருட்கள் அனைத்தையும் குறிப்பிட்ட ஆதரவாளர் குப்பைத் தொட்டியில் போட்டிருக்கலாம்.

கண்டுபிடிக்கப்பட்ட குண்டோடு. வாகனங்களுக்குரிய உதிரிப்பாகமான போல்ஸ் 5 கிலோ கிடைத்திருக்கிறது.

வெடிகுண்டோடு 'போல்ஸ்' கலப்பதால் உள்ள சாதகம் யாதெனில், குண்டு வெடிக்கும் போது சிதறிப்பறக்கும் போல்ஸ் இரும்புக்குண்டுகள் தூரத்தில் நிற்போரையும் பதம் பார்க்கும். காயப்படுத்தும்.

கொழும்பு மத்திய வங்கி குண்டுவெடிப்பில் லொறிக் குண்டோடு போல்ஸ் பெருமளவில் கலக்கப்பட்டிருந்தது. அதனால்தான் பெருந்தொகையானோர் காயமடைந்தனர்.

தனியாக வெடிகுண்டு மட்டும் வெடித்தால் வெடிப்பு நடைபெறும் பகுதியில் உள்ள கட்டிடங்களும், பொதுமக்களும்தான் பாதிக்கப்படுவார்கள். குண்டோடு போல்ஸ் இருந்தால், சற்று எட்ட நிற்பவர்கள் மீதும் சிதறல்கள் பறந்து காயம் ஏற்படுத்தும்.

ஆக, புலிகளது நோக்கம் கட்டிடங்களை மட்டும் தகர்ப்பதல்ல என்பது தெளிவு.

பொதுமக்கள் மத்தியிலும் பாதிப்பை ஏற்படுத்தி தலைநகரில் நெருக்கடியையும், பீதியையும் தோற்றுவிக்கவே நினைக்கிறார்கள்.


கண்டெடுக்கப்பட்ட குண்டுகள் தயாரிக்கப்பட்டுள்ள முறையில் இருந்து புலிகளின் நினைப்புத் தெரிகிறது.

வடபகுதியில் படைத்தரப்பினர் பாரிய நடவடிக்கையில் ஈடுபடும்போது தலைநகரில் பதிலடிகளில் ஈடுபடவே குண்டுகள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டதாக நம்பலாம்.

'புலிகளின் தலைமையை நோக்கி படைகள் நகர்ந்தால், தலைநகரை அரசாங்கம் பாதுகாக்க முடியாமல் போகலாம்.

வடபகுதியில் படை நடவடிக்கையால் ஏற்படும் விளைவுகளுக்கு தலை நகரில்தான் கணக்குத் தீர்க்கப்படும் என்பதை சிங்கள மக்களும் உணரவேண்டும், என்பவைதான் புலிகள் குண்டுத்தாக்குதல்கள் மூலம் வெளிப்படுத்த நினைக்கும் செய்திகள்.

புலிகளது நோக்கம் எதுவாக இருந்தாலும், தலைநகர குண்டுவெடிப்புக்கள், தலைநகரில் பரவலாகவுள்ள தமிழ் மக்களுக்கும் தலையிடியாக அமைவது தவிர்க்க முடியாததுதான்.



○●○

## உளவு பார்க்கும் எதிர்க்கட்சி

புத்தளம் சீமெந்து கூட்டுத்தாபன விவகாரத்தில் ஆளும்தரப்புக்கும், பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிக்கும் இடையே வாய் யுத்தம் மூண்டு முடிந்திருக்கிறது.

ஆளும்தரப்பு எப்படித்தான் வாதங்களை அடுக்கினாலும், புத்தளம் சீமெந்து கூட்டுத்தாபன விவகாரத்தால் பொதுஜன முன்னணியின்மீது திருவாளர் பொதுஜனத்திற்கு சந்தேகம் ஏற்பட்டிருப்பது மட்டும் உண்மை.

பதவியில் பொது ஜன முன்னணி இருந்தாலும்கூட, அதிகாரிகள் பலர் முன்னாள் ஆளும் கட்சிக்கு விசுவாசமாக இருப்பதாக ஆளும் தரப்பார் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்க மட்டத்தில் நடைபெறும் காரியங்கள் யாவும் ஐ.தே.கட்சியின் காதுக்கு சென்றுவிடுகின்றன.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புத்தளம் சீமெந்து கூட்டுத்தாபன விவகாரமாக ஜனாதிபதிக்கு கடிதம் எழுதினார்.

அக்கடிதம் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் விலாவாரியாக வெளியிடப்பட்டது.

ஜனாதிபதியின் கையில் போன கடிதத்தின் பிரதி எப்படி வெளியே வந்தது? குறிப்பிட்ட ஆங்கிலப் பத்திரிகை ஐ.தே.கட்சியுடன் நெருக்கமானது என்பதும் குறிப்பிடத்தக்க விஷயம்.

அமைச்சரவைக் கூட்டத்தில் நடைபெறும் சூடான சர்ச்சைகள் உடனுக்குடன் ஒரு வார்த்தை தவறாமல் எதிர்க்கட்சித் தலைவரின் செவிக்குள் தேனாகப் பாய்கிறது.

தேனாக என்று சொல்வதில் இன்னொரு பொருத்தமும் உண்டு. செய்திகளை சொல்பவர் ஒரு பெண் அமைச்சர்தான்.

குறிப்பிட்ட பெண் அமைச்சரும், அவரது கட்சியினரும் ரணிலுடன் தினசரி தொடர்புகொண்டு பேசுகிறார்கள்.

உளவுத்துறை மூலமாக அந்த விஷயம் ஜனாதிபதியின் காதுக்கும் எட்டிவிட்டது. படு கோபத்தில் இருக்கிறார் ஜனாதிபதி.

என்றாலும் பொது ஜன முன்னணிக்குள் பூசல் என்று வெளியே காட்ட விரும்பவில்லை. அதனால் பிடித்தமில்லாத அணியை உள்ளேயே வைத்துக் கொண்டு பனிப்போர் நடத்திக் கொண்டிருக்கிறார் ஜனாதிபதி.

இதேவேளை அமைச்சர்களின் தொலைபேசி உரையாடல்களைக்கூட ஐ.தே.கட்சி அறிந்து கொள்கிறது. பதிவு செய்து வைத்துக் கொண்டு மிரட்டுகிறது.

அதிகாரிகள் மட்டத்தில் உள்ள செல்வாக்குத்தான் அதற்கெல்லாம் காரணம்.

17 வருடகாலமாக பதவியில் இருந்த கட்சி தனக்கு விசுவாசமாக உருவாக்கிய நிர்வாக இயந்திரம் இன்றைய ஆளும் கட்சிக்கு சவாலாக இருக்கிறது.

புதிய அமைச்சர்களின் அனுபவக் குறைவு காரணமாக அந்த நிர்வாக இயந்திரத்தை தமக்கேற்ப வளைக்க முடியாமல் இருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிக்கா, பிரதமர் சிறிமாவோ இருவரும் தாயும் மகளுமாக இருந்தாலும், இருவருக்கும் இடையே ஒத்த கருத்து இருப்பதாக அர்த்தமல்ல. எனினும் அந்தக் கருத்து வேற்றுமை ஆட்சிக்கு பாதகம் ஏற்படுத்துமளவுக்கு செல்லாது.

ஆனால், திருமதி லலித் அத்துலத்முதலிக்கு ஜனாதிபதியோடு ஏற்பட்டுள்ள பிணக்கு முறிவில் முடியலாம்.

முறிவு எப்போது? அதனை தீர்மானிக்க நல்லதொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது திருமதி லலித் அத்துலத்முதலி அணி.

அதுமட்டுமல்ல, பொதுஜன முன்னணியில் இருந்து பிரிவதற்கு முக்கிய புள்ளி ஒருவரின் சிக்னலுக்காவும் காத்திருக்கிறார் ஸ்ரீமானி அத்தலத்முதலி. அந்த முக்கிய புள்ளி ரணில் விக்கிரமசிங்கா.

தற்போதைக்கு ஸ்ரீமானி ஆட்சிக்குள் இருந்தபடியே தமது ஆளாக செயற்படுவதையே விரும்புகிறாராம் ரணில்.

## அதிரடி அய்யாத்துரை



மின்சாரத்திற்கு தினமும் 4 மணி நேர கட்டாய லீவு. சூரியக்கதிர் கொண்டாட்டத்தோடு கொண்டாட்டமாக சில பொருட்களின் விலைவாசி 'சொய்ங்' எண்டு ஏறினதல்லோ. அது மாதிரி உலகக் கிண்ண வெற்றி அமளியோடு அமளியாக ஒரேயடியாக 4 மணிநேர மின்வெட்டு. இனிப்போடு கலந்து மருந்துகொடுக்கிறதிலை அதிகாரமட்டததார் அசலான ஆட்கள் தானுங்கோ.

வானம் அழவே மாட்டேன் எண்டு தொடர்ந்து அடம்பிடிச்சா தண்ணீர் வெட்டும் வரும். தண்ணீரை சிக்கனமாக பாவிக்கிறவைக்கு பரிசுகள் கொடுப்பதாக இருந்தால் குளிக்க சோம்பல்படுகிற ஆட்களுக்கு குசிதான்.

யாழ் குடாநாட்டிலிருந்து கொழும்பு வந்த ஒரு நண்பர் சொன்ன கருத்து இது; நாடு பூராவுமே வடபகுதி மாதிரி மாறிக்கொண்டிருக்குது. அங்கும் படிப்புக் கெட்டுப்போச்சு. அதுமாதிரி அடிக்கடி விடுமுறை விட்டு நாடு பூராவுமே படிப்பு கெட்டு வருகுது. வடபகுதியில் மின்சாரம் இல்லை. இப்ப நாடு பூராவுமே மின்சாரம் இல்லாத குறையை 4 மணி நேரம் எண்டாலும் அனுபவிக்குது. ஏதோ இந்த வகையில் எண்டாலும் நாட்டிலை ஒரு பொதுவான ஒற்றுமை நிலவுதல்லோ?" எண்டார். நீங்கள் என்ன நினைக்கிறியள்?

நேற்றுத்தான் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிச்சது. நாளை விடுமுறை வரப்போகுது. மாணவர்களும் படிக்கேல்லை. ஆசிரியர்களும் படிப்பிக்கேல்லை. இரு சாராரும் வீட்டில்தான் இருந்தவை. அப்படியானால் இந்தத் தவணை விடுமுறை யாருக்காக?

வெளிநாட்டு தூதர்களைச் சந்தித்து தமிழ் கட்சிகள் பேச்சு நடத்திவருகின்றன. இந்த விடயம் அதி காரதரப்பு மட்டத்திலும் உஷாராக கவனிக்கப்படுகிறதாம். பௌத்த குருமாரின் போக்குத் தொடர்பாக வல்லரசுத் தூதரும் முகம் சுளித்தார் என்று கேள்வி. தமிழ் கட்சிகளோடு பௌத்த மதகுருமார் நடத்திய பேச்சு விபரங்களை அக்கறையாகக் கேட்டுத் தெரிந்துகொண்டாராம் 'வல்லரசுத்' தூதர்.

வவுனியாவில் பயணிகள் அனுமதி விவகாரத்தில் காக்கிக்கும், பச்சைக்கும் இடையே முரண்பாடு. அடிக்கடி அதிகாரம் கைமாறிக் கொண்டிருக்கிறது. ஆனாலும் ஏஜென்சிக்காரர்கள் தங்கள் தொழிலைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கினம். ரேட் பேசி ஆட்களை கொழும்புக்கு கொண்டு வாறதுதான் வெளிநாட்டு ஏஜென்சி வேலையை விடக் கஸ்டம் எண்டு அனுபவப்பட்டவர் ஒருத்தர் அபிப்பிராயம் சொன்னவர். கொழும்பிலிருந்து போய் மொஸ்கோவிலை நிற்பவர்களை மொஸ்கோ எல்லை தாண்டி ஜெர்மன் போன்ற நாடுகளுக்கு கொண்டு போறதை 'போர்டர் செய்யிறது' எண்டு சொல்லுறது. நம் நாட்டுக்குள்ளேயே இப்ப 'போர்டர்' செய்யினம் பார்த்தியளோ?

தமிழ் மக்கள் மௌனமாக இருக்கக்கூடாது எண்டு 'சக்தி'யானவர் சொன்னவரல்லோ. குமாரர் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் அதற்கு காரசாரமாக பதில் எழுதியிருக்கிறார். சும்மா சொல்லக்கூடாது நியாயமான கேள்விகளையும் வெட்டொன்று துண்டு ரெண்டாக கேட்டிருக்கிறார் குமாரர். அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ் கட்சிகளையும் சங்கடத்தில் மாட்டிப்போடுது 'சக்தி'யானவரின் பேட்டி.

ஏறாவூரில் பஸ்மீது நடந்த தாக்குதலை ரெண்டு எழுத்தார்மீது போடுவதுமாதிரி வானொலி செய்தியில் வதந்தி பரப்பப்பட்டதல்லோ. வதந்தி பரப்புவோர் மீது நடவடிக்கை எடுப்பதென்றால் வானொலி செய்தி தயாரிப்பாளர்கள் மேல்தான் எடுக்கவேணும்.

வடபகுதிக்குத்தான் செல்லாமல் இருப்பதற்கு படையினர்தான் காரணம் எண்டு கூட்டான கட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார். என்னதான் இருந்தாலும் பெரியவர் இப்படிப் பொய் சொல்லக்கூடாதல்லோ. கொழும்பில் வாகனமும், பாதுகாப்பும் கேட்டு வாங்கியிருக்கிறார் தலைவர், அதுக்கு யார் காரணம்? ரெண்டு எழுத்தாரை 'நம்பிநடவாதே', ரெண்டு எழுத்தார் 'நம்ப நட' எண்டதுதான் கூட்டான கட்சியின் சாணக்கியக் கொள்ளையாக்கும். தம்பிமாருக்கு உதெல்லாம் தெரியுமுங்கோ!

இதயங்களை வெல்லப்போவதாக அதிகாரத்தரப்பார் சொல்லிக் கொண்டிருக்கினம். இதயத்துடிப்பையே நிறுத்துற வேலைகளில் பச்சைத் தரப்பார் ஈடுபடுகினம். வெல்லுறதுக்கு இதயம். இருந்தாத்தானே!

அப்துல் ரகுமானின் ஒரு கவிதையில் இருந்து சிறு துளி. தோல்வியை வரவேற்கிறார் கவிஞர்! ஏன்?

**"தோல்வியே! நீ ஓர் உலைக்களம்.**
**வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஆயுதங்கள்**
**தயாரித்துத் தருவது நீயல்லவா?**
**தோல்வியே நீ ஒரு நேசநெருப்பு**
**எங்களை புடம்! போட்டு**
**ஒளிரச் செய்வது நீயல்லவா?"**

## அரசியல் தொடர்

### அற்புதன்– எழுதுவது

# 72

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

**கடலில் வேட்டை**

1986 இல் நடைபெற்ற மிகப்பெரிய சோகச் சம்பவம் மண்டைதீவு படுகொலைகள்.

13.6.86 அன்று கடலில் தொடங்கிய வேட்டை, தரையிலும் தொடர்ந்து 32 மீனவர்களின் உயிர்களைக் குடித்தது.

கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களை வழிமறித்த கடற்படையினர் சரமாரியாக சுட்டுத்தள்ளினார்கள்.

சூடுபட்ட மீனவர்கள் படகுகளுக்குள் சுருண்டுவிழுந்து உயிர்விட்டார்கள்.

# கடலில் நடந்த மனித வேட்டை

டேவிட்சன், ரமேஷ் இருவரும் சுடப்பட்டுப் படுகாயம்

நேற்று முன்தினமிரவு யாழ். கச்சேரியடியில் வைத்து ஈ. பி. ஆர். எல். எப். தோழர்களான டேவிட்சன், ரமேஷ் ஆகிய இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஆபத்தான காயங்களுக்கு இலக்கானதாக ஈ. பி. ஆர். எல். எப். விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மக்களிடம் எமது முறையீடு" என்ற தலைப்பில் இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்...

ஈ.பி.ஆர்.எல்.எஃப். பத்திரிகை அறிக்கை

மண்டைதீவு கரையோர வாடிகளில் தங்கியிருந்த மீனவர்களையும் கடற்படையினர் தாக்கினார்கள். துப்பாக்கியால் சுட்டுத்தள்ளியதுடன், வாளாலும் வெட்டப்பட்டனர்.

துப்பாக்கிப்பிரயோக சத்தங்களை கேட்டதும் ஊர்காவத்துறையில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப்பிரிவு மண்டைதீவுக்கு சென்றது. கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தியது.

அதனையடுத்து கடற்படையினர் தமது தாக்குதலை நிறுத்திவிட்டுத் திரும்பிச் சென்றனர்.

# பதிலடியாக முகாம் தாக்குதல்

கடலின் நடுவே படகுகளில் தத்தளித்துக்கொண்டிருந்த மீனவர்களை ஈ.பி.ஆர். எல்.எஃப். இராணுவப்பிரிவு சென்று காப்பாற்றியது.

பலியானவர்கள் உடல்களும் கரைக்கு கொண்டுவரப்பட்டன.

32 மீனவர்கள் கடற்படையினரால் கொல்லப்பட்டனர்.

அதில் மூன்றுபேர் ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்பின் பகுதிநேர உறுப்பினர்கள். அவர்களும் கடற்தொழிலாளர்களாக இருந்தவர்கள்.

கொல்லப்பட்ட 32 மீனவர்களும் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்தவர்கள்.

பலியானவர்களின் உடல்களை குருநகருக்கு கொண்டுவந்து சேர்ந்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

அப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். இராணுவப்பிரிவின் ஊர்காவத்துறைப் பொறுப்பாளராக இருந்தவர் மனோகரன்.

பலியானவர்களை கடலில் மீட்டெடுத்ததிலும், கடற்பண்டயினரின் தாக்குதலை தடுத்து நிறுத்துவதிலும் மனோகரனும், அவரது பொறுப்பின்கீழ் இருந்த உறுப்பினர்களும் உயிரைப் பணயம்வைத்து செயற்பட்டார்கள். அதனால்தான் பலியானவர்களது உடல்களை மீட்க முடிந்ததுடன், ஏனைய மீனவர்களையும் பாதுகாக்க முடிந்தது.

(மனோகரன் தற்போது ஈ.பி.டி.பி. யில் இருக்கிறார்.)

**மரணச்சடங்கு**

பலியானவர்களது உடல்களை குருநகருக்கு கொண்டுவந்து மக்களின் அஞ்சலிக்காக வைத்திருந்தனர்.

இந்த இடத்தில் குருநகரில் காணப்பட்ட இயக்க ஆதரவு நிலைபற்றியும் கூறவேண்டும்.

குருநகரில் ஒரு பகுதி புலிகளின் கோட்டையாக இருந்தது. மறுபகுதி ஈ.பி.ஆர்.எல்.எஃப். கோட்டையாக இருந்தது.

கடற்படையினரால் கொல்லப்பட்டவர்கள் புலிகள் அமைப்பின் கோட்டையாக இருந்த பகுதியைச் சேர்ந்தவர்கள்.

பலியானவர்கள் உடல்களை ஈ.பி. ஆர்.எல்.எஃப். கொண்டுவந்து சேர்த்தவுடன் அப்பகுதியில் உள்ளவர்கள் மனம் மாறிவிட்டனர்.

மரணச்சடங்குகளை நடத்தும் பொறுப்பை டேவிற்சனும், ரமேஷ், மோகன் ஆகியோர் முன்னின்று கவனித்தனர்.

அரசின்மீது மக்கள் எதிர்ப்பை உருவாக்கும் வகையில் மரணச்சடங்கை பெரியளவில் நடத்த திட்டமிடப்பட்டது.

துண்டுப்பிரசுரங்கள் அச்சிடப்பட்டன. பதாகைகள் தொங்கவிடப்பட்டன. யாழ் நகரமே சோகமயமாக மாறியது. பெருந்திரளான மக்கள் யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் இருந்து குருநகருக்கு வந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பின் பகுதிநேர உறுப்பினர்களாக இருந்த கடற்தொழிலாளர்களது உடல்களுக்கு ஈ.பி.ஆர். எல்.எஃப். கொடி போர்த்தப்பட்டிருந்தது.

புலிகள் அமைப்பில் இருந்து திலீபனும், கிட்டுவும் வந்து அஞ்சலி செலுத்தினார்கள்.

பலியானவர்களில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களும் இருப்பதால் மரணச்சடங்கை ஈ.பி.ஆர்.எல்.எஃப். முன்னின்று நடத்தும் என்று திலீபனுக்கு சொன்னார் டேவிற்சன். "அப்படியே செய்யுங்கள்" என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள் புலிகள் அமைப்பினர்.

இறுதி ஊர்வலம் பெருந்திரளான மக்களுடன் நடைபெற்றது. ஊர்வலத்திற்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப். பாதுகாப்பு வழங்கியது.

குருநகர் சவச்சாலையில் நடைபெற்ற இறுதி அஞ்சலிக் கூட்டத்தில் டேவிற்சன் உரையாற்றினார். ஒரு மணிநேரமாக உணர்ச்சிமயமாக உரை நிகழ்த்தினார் டேவிற்சன்.

பலியான தமது உறுப்பினர்களுக்காக மரியாதை வேட்டுக்களைத் தீர்த்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

**தொலைக்காட்சி சேவைகள்**

14.6.86 புதன்கிழமையன்று இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தனியார் தொலைக்காட்சிச் சேவைகள் பல நடத்தப்பட்டன.

தமிழ் சினிமா படங்களை காண்பிப்பது தான் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களின் வேலை.

தமது தொலைக்காட்சி ஒளிபரப்பு எந்தப் பகுதி வரை வேலைசெய்கிறதோ, அந்தப்பகுதிகளில் உள்ள வீடுகளில் பணம் வசூலித்துக் கொள்வார்கள். அது தான் வருமானம்.

அப்போது பலாலி இராணுவமுகாமில் இருந்து இராணுவத்தினரும் தொலைக்காட்சி சேவை ஒன்று நடத்தினார்கள்.

தமிழ் மக்களின் தொலைக்காட்சி என்று அதற்கு பெயர் சூட்டியிருந்தனர்.

தமிழ் திரைப்படங்களில் தாராளமான காட்சிகள் கொண்ட படங்களாகப் பார்த்து ஒளிபரப்பினார்கள்.

இடைக்கிடையே இயக்கங்களுக்கு எதிரான பிரசாரங்களும் செய்யப்பட்டன.

அவர்களது தமிழ் உச்சரிப்பும், வசன பிரயோகங்களும் சிரிப்பூட்டும் வகையில் அமைந்தனவே தவிர, யாரையும் கவரத்தக்கதாக இருக்கவில்லை.

**துப்பாக்கிச் சூடு**

குருநகர் மரணச் சடங்கை தனியார் தொலைக் காட்சி மூலமாக ஒளிபரப்புவதற்காக மரணச்சடங்கு முடிந்த தினத்தன்றே எடிட் செய்து கொண்டு சென்றனர் டேவிற்சனும், ரமேசும்.

அரியாலையில் உள்ள தனியார் தொலைக்காட்சி நிலையம் நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் இருவரும் சென்று கொண்டிருந்தபோது திடீரென்று துப்பாக்கி வேட்டுக்கள் அவர்களை நோக்கித் தீர்க்கப்பட்டன.

மோட்டார் சைக்கிளை டேவிற்சன் செலுத்திக் கொண்டிருந்தார். ரமேஷ் பின்புறம் அமர்ந்திருந்தார்.

சூடுபட்டு இருவரும் காயமடைந்தனர். துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்கள் புலிகள்.

ரெலோ இயக்கத்தினர் என்று நினைத்து தவறுதலாக துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றதாக கூறினார்கள் புலிகள் அமைப்பினர்.

அந்த விளக்கத்தை ஈ.பி.ஆர். எல்.எஃப். அமைப்பினர் ஏற்றுக்கொள்ளவில்லை.

துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்ட இருவரும் புலிகள் இயக்கத்தினருக்கும் பரிச்சயமானவர்கள். எனவே அடையாளம் தெரியாமல் தவறுதலாக நடந்ததாகச் சொல்வதை ஏற்கமுடியாது என்பது ஈ.பி.ஆர். எல்.எஃப். தரப்பு நியாயம்.

**கண்டனம்**

புலிகளின் நடவடிக்கையைக் கண்டித்து பத்திரிகை அறிக்கை, துண்டுப் பிரசுரம் என்பவற்றை வெளியிட்டது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

· பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது இதுதான்;

"ஒரு புறத்தில் எதிரியிடம் இருந்து மக்களைப்பாதுகாக்க பதுங்கு குழிகளை வெட்டும்படி அறைகூவிக்கொண்டு, மறுபுறத்தில் போராளிகளுக்குப் புதை குழிகள் தோண்டுவது எதைக் காட்டுகின்றது?

"தற்செயலாக,"... "தவறுதலாக"... "தெரியாமல்" இப்படியான காரணங்கள் எவையும் ஏற்கக்கூடியவை அல்ல.

ஒரு போராளி தன் துப்பாக்கியை இயக்குவதற்கு முன்னால் அதற்குரிய ஒழுங்குகளை கடைப்பிடிக்க வேண்டும்.

சைகைகாட்டுதல், முன்னறிவித்தல் கொடுத்தல், எச்சரிக்கை செய்தல், சந்தேகத்தை நிச்சயப்படுத்திக்கொள்ளல் போன்ற ஒழுங்குகள் ஒவ்வொரு போராளிக்குமான கட்டுப்பாடாக இருக்கவேண்டும்.

அதிகாரப்போட்டி, ஆணவம், தான் தோன்றித்தனம் போன்ற தீய நடத்தைகளுக்குப் பலியாகி போராளிகளின் ஐக்கியத்தை சீர்குலைப்பது ஈழப்போராட்டத்திற்கு தீங்கானது.

ஈழமக்களே! எமது தோழர்கள் டேவிற்சன், ரமேஷ் ஆகியோர்மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகம் ஈழமண்ணில் சமாதானத்தை பேணுவதற்கும், போராளிகளிடையே ஐக்கியத்தைக் கட்டி வளர்ப்பதற்கும் எதிரான ஒரு அராஜக நடவடிக்கையாகும்.

கொடிய எதிரிக்கெதிரான எமது புனித யுத்தத்தில் எமது உன்னதமான தோழர்கள் பலரை நாம் இழந்தோம். இந்த வேதனை எம் நெஞ்சை நெருடியபோதும் நாம் நிலைகுலையவில்லை.

இந்த மண்ணில் எவ்வளவு கொடூரம் நிகழ்ந்தபோதும், உங்கள் குடும்பத்தில் சாவு வீடுகளுக்கு மாதக்கணக்கில் இடைவெளிகள் ஆவது உண்டு

ஆனால், எங்கள் குடும்பத்தில், எமது விடுதலை இயக்கத்தில்-சாவு அன்றாடம் நடக்கிறது. ஆனாலும் நாம் அழவில்லை. நமது கடமையை விடாப்பிடியாகத் தொடர்கிறோம். இந்த இழப்புக்கள் எதிரியால் ஏற்பட்டவை.

ஆனால், எமது இயக்கம் என்றவீதியில் பார்த்தால்கூட தோழர் ரேகன்... தோழர் அமீன்... தோழர் பிரதாப்... இவர்கள் புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர்கள்.

இன்று தோழர்கள் டேவிற்சன், ரமேஷ் மீது துப்பாக்கிப் பிரயோகம்... இதுவும் புலிகளால்..

மக்களே! இப்போது நீங்களே தீர்மானியுங்கள்." என்று தொடர்ந்தது பிரசுரம்.

**ஆர்ப்பாட்ட ஊர்வலம்**

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவினால் தயாரிக்கப்பட்ட மாகாணசபைகள் திட்டத்தை ஈழப்போராளி அமைப்புக்கள் நிராகரித்திருந்தன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, இ.தொ.கா. குமார் பொன்னம்பலம் ஆகியோர் மாகாணசபை திட்டத்தை ஆராய்ந்து கொண்டிருந்தனர்.



பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டவர்கள்

மாகாணசபை திட்டத்தை எதிர்த்து 14.7.86 அன்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெற்றன.

கூட்டணி செயலதிபர் அமிர், இ.தொ.கா தலைவர் தொண்டமான், குமார் பொன்னம்பலம் ஆகியோர்மீது கண்டனம் தெரிவிக்கும் சுலோக அட்டைகளும் காணப்பட்டன.

"ஈழமே ஒரே தீர்வு. அரைகுறைத் தீர்வுகள் வேண்டாம்." என்பதுதான் பிரதான கோஷம்.

**பூசா முகாம்**

சந்தேகத்தின்பேரில் பெருந்தொகையாகக் கைதுசெய்யப்படும் தமிழ் இளைஞர்களை காலியில் உள்ள பூசா முகாமில் தடுத்து வைத்தது ஜே.ஆர்.அரசு.

ஐயாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பூசா முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

ஜெர்மனில் ஹிட்லர் காலத்தில் இருந்த மனிதவதை முகாம்களோடு பூசா முகாம் ஒப்பிடப்பட்டது.

ஜே.ஆர். கண்டனங்களையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளவில்லை. பூசா முகாமில் இளைஞர்களை அடைப்பது தொடர்ந்தது.

இடநெருக்கடி, சுகாதாரக் கேடு போன்ற வற்றால் பூசா முகாமில் தொற்று நோய்கள் பரவின.

**பாதிரியார் படுகொலை**

யாழ்ப்பாணத்தில் உள்ள தோலகட்டிப் பகுதியில் புகுந்த இராணுவத்தினர் அங்குள்ள கத்தோலிக்க மதகுரு ஒருவரை சுட்டனர்.

20.6.86 அன்று இச் சம்பவம் நடைபெற்றது.

வண.வின்சென்ட் லோஸ்ட் என்னும் மதகுருவே சுட்டுக்கொல்லப்பட்டவராவர்.

அவருக்கு வயது 65. இந்தியா பெங்களூரைச் சேர்ந்தவர். வசாவிளானில் இருந்து பலாலி நோக்கி சென்று கொண்டிருந்த இராணுவத்தினரே மதகுருவை சுட்டனர்.

இதனையடுத்து தோலகட்டிப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். இராணுவத்தினர் திரும்பிச் சென்றனர்.

**முகாம் தாக்குதல்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரானில் இருந்த புலிகளது முகாம் ஒன்றை இராணுவத்தினர் தாக்கினார்கள். மாங்கேணி இராணுவ முகாமில் இருந்து சென்ற இராணுவத்தினரே தாக்குதலில் ஈடுபட்டனர்.

அத்தாக்குதலுக்கு காரணமான மாங்கேணி இராணுவமுகாமைத் தாக்கத் திட்டமிட்டனர் புலிகள்.

5.7.86. இரவு 11.55 மணி. புலிகளது கெரில்லா அணி தாக்குதலை ஆரம்பித்தது.

இராணுவத்தினரும் பதில் தாக்குதலில் ஈடுபட்டனர்.

புலிகள் தமது தாக்குதல் நடவடிக்கைக்கு ஆர்.பி.ஜி. தாக்குதலையே பிரதானமாக நம்பியிருந்தனர். ஆர்.பி.ஜி இயங்க மறுத்து பொறுத்த நேரத்தில் கைவிட்டது.

எனவே-தாக்குதலை நிறுத்திவிட்டு திரும்பியது புலிகளது அணி.

மாங்கேணி தாக்குதலுக்கு முன்பாக பனியங்கேணி, காயல்கேணி ஆகிய பாலங்கள் புலிகளால் தகர்க்கப்பட்டன.

மாங்கேணி இராணுவ முகாமுக்கு உதவிகள் வருவதைத் தடுப்பதற்காகவே பாலங்கள் தகர்க்கப்பட்டன.

ஆனாலும் மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதல் புலிகளுக்கு வெற்றியாக அமையவில்லை.



மண்டைதீவில் பலியான மீனவர்கள்

**20 பேர் பலி**

அநுராதபுரத்திலிருந்து மன்னாருக்கு சிங்களமக்களை கொண்டுவந்து குடியேற்ற திட்டமிட்டது ஜே.ஆர். அரசு.

அதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க காணிக் குடியேற்ற மேலதிகாரிகள் மன்னாருக்குச் சென்றனர்.

மேலதிகாரிகள் ஐந்து பேரும் ஜீப் ஒன்றில் சென்று கொண்டிருந்தபோது கண்ணி வெடி வெடித்தது. ஐந்து பேரும் பலியானார்கள்.

கண்ணிவெடித் தாக்குதலை நடத்தியது புலிகள் இயக்கத்தினர்.

திருக்கோணமலையில் குமரேசன் கடவை என்னும் தமிழ் கிராமம் 'கோமாங் கடவ' என்று பெயர் மாற்றப்பட்டது.

அக்கிராமத்தில் குடியேறியிருந்த சிங்கள மக்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்தினார்கள் அதில் 20 பேர் கொல்லப்பட்டனர்.

(தொடர்ந்து வரும்)

கடலில் தாக்குதல், விமானக்குண்டு வீச்சுக்கள் என்று கடந்தவாரம் வடக்கே மன்னார்ப்பகுதியில் ஆயுதப்படையினருக்கும், எல்.ரி.ரி.ஈ.யினருக்குமிடையே தாக்குதல்கள் இடம்பெற்றிருந்தன.

இதற்குமுன்னர் யாழ்குடாநாட்டிலும் எல்.ரி.ரி.ஈ.யினர் நடத்திய தாக்குதல் ஒன்றில் சுமார் 20 படையினர் கொல்லப்பட்டனர்.

எனவே இத்தாக்குதல்களை அவதானிக்கும்போது எல்.ரி.ரி.ஈ.யினர் மீண்டும் தமது பலத்தை நன்குதிட்டமிட்டுக் கட்டி எழுப்பி வருவதையே உணரமுடிகின்றது.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பெருநிலப்பரப்பில் படையினர் எந்நேரமும், திடீர் அதிரடித் தாக்குதல்களை எதிர் நோக்கவேண்டிய சூழ்நிலைக்கே உள்ளாகியுள்ளனர்.

அதுமட்டுமல்ல படையினர் மேற்கொள்ளும் பதிலடித் தாக்குதல்கள் பெருமளவு இழப்புக்களை ஏற்படுத்துவதாகவே இருக்குமென்பதற்கு மன்னார்ப்பகுதியில் நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்கள் நல்ல உதாரணமாக இருக்கின்றது.

மன்னார்க்கடலில் எல்.ரி.ரி.ஈ.யினர் நடத்தியதாக்குதலில் படையினர் பலர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாகவே ஹெலிகப்டர்கள் மூலமாக மன்னாரில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதில் கிராமவாசிகள் பலர் கொல்லப்பட்டுள்ளதுடன், நாச்சிக்குடா என்ற கிராமத்திலிருந்தும் அப்பாவி மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்துள்ளனர்.

அடுத்த மாதம் சித்திரைப்புதுவருடம் பிறக்கவுள்ளது. இந்த மாதத்தை



# "இலங்கை அணியின் உலகக் கிண்ணவெற்றி அரசியல் பொருளாதார பிரச்சனைகளுக்கு ஊக்க சக்தி"

## அமைச்சர் கதிர்காமர்

நோக்குகையில் பல விடயங்கள் மனக்கண்முன் வருகின்றன.

சந்திரிகா அரசுக்கும், எல்.ரி.ரி.ஈ.யினருக்குமிடையே மோதல் வெடித்து ஒரு வருடம் பூர்த்தியடையவிருப்பதும் எதிர்வரும் சித்திரை மாதத்திலேயாகும்.

அத்துடன் கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் யாழ்ப்பாணப் பெருநிலப்பகுதியிலிருந்து வெளியேறிய மக்களை மீண்டும் அவர்களது சொந்த இடங்களில் எதிர்வரும் சித்திரை மாதத்துக்குமுன்னர் குடியமர்த்தப்போவதாக ஜெனரல் ரத்வத்த சூளுரைத்திருந்தார்

ஆனால் படையினரே நிரந்தரமாக காலூன்ற முடியாத தன்மைகள் தற்போது தோன்றியிருக்கையில் லட்சோபலட்சம் அகதிமக்களை யாழ்ப்பாணப் பெருநிலப்பகுதியில் எவ்விதத்திலும் மீளக்குடியமர்த்துவது சாத்தியமாகாது என்பதே தெளிவாகியுள்ளது.

இலங்கை அணியின் உலகக் கிண்ண கிரிக்கெட் வெற்றி இலங்கையின் அரசியல் பொருளாதார விடயங்களுக்கு ஓர் ஊக்கசக்தியாக (Tonic) இருக்குமென்றே அண்மையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருந்தார்.

இலங்கையின் கிரிக்கெட் வெற்றி உண்மையில் உன்னதமானதொன்றே. ஆனால் இந்த மகோன்னத வெற்றியின்மூலம் அரசியல் அசுத்தங்களை எவ்வகையிலும் மூடிமறைத்துவிடமுடியாது.

கிரிக்கெட் வேறு; நாட்டின் அரசியல்வேறு.

"இலங்கை அணியினர் காட்டிய ஒற்றுமை போல அரசியலிலும் ஒற்றுமை நிலவினால் எமது நாடு எவ்வளவு மேம்பட்டதாக இருக்கும்" என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழவேண்டும்; நாட்டின் ஈடேற்றத்துக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டுமென்று விரும்பியவர்களே தமிழர்கள்.

இதன் காரணமாகவே கொழும்பில் அன்னாள் மேயர் சரவணமுத்து 'ஓவல்' (Oval) என்ற கிரிக்கெட் மைதானத்தை நிர்மாணித்தார். அவர் ஒரு இனச் சார்பானவராகவோ அல்லது குறுகிய பிரதேசவாதங்களுக்கு உட்பட்டவராகவோ இருந்தால், ஓவல் போன்றதொரு மைதானத்தை யாழ்ப்பாணத்திலோ அல்லது வடக்கு-கிழக்கின் வேறுபகுதிகளிலோ கட்டியிருக்க முடியும்.

இலங்கையர்களது கலையுணர்வை வெளி உலகுக்கு முதலில் எடுத்தியம்பியவர் கலாயோகி ஆனந்தகுமாரசாமியாவார்.

இவர் கால்நடையாகவும், மாட்டுவண்டியிலும் இலங்கையின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று இலங்கையர்களின் பல்வேறுபட்ட வாழ்க்கைமுறை, கலையுணர்வுகள் என்பன பற்றியெல்லாம் ஆய்வுகளை நடத்தியிருந்தார்.

பிரபல கிரிக்கெட் வீரர் சதாசிவம் ஓர் உன்னத ஆட்டக்காரராக இருந்த அதேசமயம், யாழ்ப்பாணத்தின் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் ஆசியப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்று இலங்கைக்குப் பெருமை சேர்ந்தார்.

இலங்கையின் பொலிஸ், மற்றும் ஆயுதப்படைகளில்கூட தமிழர்கள் பலரும் இடம் பெற்று தம்மை இலங்கையர்கள் என்று கூறிப்பெருமைப்பட்டனர்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நெருங்கிய உறவுக்காரர் ஒருவரே இலங்கைக்கடற்படைத் தளபதியாகவும் அன்றிருந்தார்.

எனவே அமைச்சர் கதிர்காமர் குறிப்பிடுவதைப் போல கிரிக்கெட் அணியில் காணப்பட்ட ஒற்றுமைபோன்று நாட்டு நடப்புகளிலும் ஒற்றுமை இருந்தால் இலங்கை ஓர் உன்னத பூமியாக இருக்குமென்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஆனால் அமைச்சர் கதிர்காமரின் இந்த ஆசையை நிராசையாக மாற்றியவர்கள் தென்னிலங்கையின் பேரினவாத அரசியலாளர்களே என்பதை திரு.கதிர்காமர் நன்குணரவேண்டும்.

கிரிக்கெட் வெற்றி தந்த குதூகலம் அமைச்சர் கதிர்காமரின் சிந்தையில் தேச ஒற்றுமை குறித்துச் சிந்திக்கச் செய்துள்ளது.

இது ஓர் அப்பளுக்கற்ற சிந்தனை.

ஆனால் அது நிஜமாவதற்கு நாட்டில் தலைவிரித்தாடும் இனவாத நாகத்தை பேரிடியாகத் தாக்கியழிக்க வேண்டும்.

அந்த நாகம் துவம்சமானால் உலகக் கிண்ணங்கள்மட்டுமல்ல, நிலவுக்குக் கூட நம்மவர்கள் போய்வரலாம்.

## அலசுவது – இராஜதந்திரி

அண்மையில் யாழ் குடாநாட்டில் ஏற்பட்ட இலக்கிய இழப்பு, சிரித்திரன் பத்திரிகை ஆசிரியர் சிவஞானசுந்தரத்தின் மரணம்.

# தேச ஒற்றுமைச் சிந்தனையும் தலைவிரித்தாடும் விஷநாகமும்

முதுபெரும் பத்திரிகையாளரான சிவஞானசுந்தரம் தொடர்பாக அஞ்சலி தெரிவித்து பலர் எழுதிவிட்டார்கள்.

ஒரு கலைஞனுக்கு உண்மையான அஞ்சலி என்பது அவனது நோக்கங்கள் ஈடேற உழைத்தலாகும்.

திரு.சிவஞானசுந்தரம் போன்றவர்கள் உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசாத அரசியல் விமர்சகர்கள்.

வெறுமனே சிரிப்பூட்டுவது மட்டும் சிரித்திரன் பத்திரிகையின் நோக்கமாக இருந்திருந்தால் அரசியல் அலசலில் சிரித்திரனுக்கோ அதன் ஆசிரியருக்கோ இடம் ஒதுக்கும் அவசியம் நேர்ந்திருக்காது.

அமரர் சிவஞானசுந்தரத்தின் விமர்சனங்கள் சிரிப்போடு சிந்தனையையும் தட்டி எழுப்பியவை என்றால் மிகையாகாது.

அன்றாட பிரச்சனைகளில் இருந்து,

அரசியல் அரங்கின் கேலிக்கூத்துக்கள் வரை அமரர் சிவஞானசுந்தரத்தின் நையாண்டியில் இருந்து தப்பியதில்லை.

அரசியல்வாதிகளின் முகமூடிகளும் சிரித்திரன் சிவஞானசுந்தரத்தாரின் சிரிப்புவெடிகளால் சுக்கு சுக்கலாயின.

தமிழே தெரியாத தலைவர்கள் ஆங்கிலத்தில் சிந்தித்துக்கொண்டு தாமே தமிழர்களின் காவலர்கள் என்று கூறித்திரிந்தனர்.

தமிழின் சுவை, தமிழர்களின் வாழ்வு முறை பற்றியெல்லாம் தெரியாத சிலர் தமது அரசியலுக்காகவும், வாக்குகளுக்காகவும் தமிழர்களை ஏய்த்துப் பிழைக்கத் தம்மைத் தமிழர்கள் என்று கூறிக்கொண்டனர்.

சிறந்த சிந்தனாவாதியும், நகைச்சுவை உணர்வும் கொண்ட அமரர் சிரித்திரன் சிவஞானசுந்தரம் அவர்கள் தமது 'காட்டூன்' சித்திரங்களில் உருவாக்கிய இரு குணச்சித்திரப்பாத்திரங்களே மிஸ்டர் அன்ட் மிஸிஸ் டாமோடிரன் (Mr&Mrs Damodiran) அதாவது தாமோதரன் என்ற அழகிய தமிழ்ப் பெயரை, டாமோடிரன் என்று ஆங்கிலக்கலப்புடன் மாற்றியமைத்து தமிழையும் ஆங்கிலச் சொற்களுடன் கலந்து பேசி தமது வரட்டுத்தனத்தை அந்த இரு சித்திரங்களும் வெளிக்காட்டுவதாகவே சிரித்திரனின் கார்ட்டூன் சித்திரம் விளங்கியிருந்தது.

இன்றுங்கூட தாமே தமிழர்களின் ஏகபிரநிதிகள், தமது தாய், தந்தை மூதாதையர்களே தமிழர்களின் வழிகாட்டிகள் என்றெல்லாம் கூறி தலைநகரிலிருந்து தத்தமது தந்தையர்களின் பெயரில் அரசியல் நடத்தும் 'டாமோடிரன்'களும் இருக்கவே செய்கிறார்கள்.

இவர்கள் இன்றைய யதார்த்தத்தை உணர்ந்து தமிழில் பேசத் தலைப்படலாம். ஆனால் இவர்களின் வாயிலிருந்து ஒழுங்காக ஒரு திருக்குறளோ, அல்லது சந்தச்சுவையுள்ள திருப்புகழிலிருந்து ஓரிரு வரிகளோ அழுத்தம், திருத்தமாக வெளிவரும் என்று எவ்விதத்திலும் எதிர்பார்ப்பதற்கில்லை.

தமிழுக்கும் அமுதென்று பெயர்; அந்தத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என்று இனிமையாகப் பாரதிதாசன் பாடியிருந்தார்.

எனவே தமிழை ஆராய்ந்து அதன் அருமை பெருமைகளையெல்லாம் உய்த்துணர்ந்த போராசிரியர்கள், மற்றும் கல்வியாளர்கள் ஏராளமாக வாழ்ந்துவரும் இன்றைய காலகட்டத்தில் வெளிநாட்டவர்களும் தமிழை அறிந்து ஆராய்வதில் நாட்டம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில் சிங்களம் மட்டுமே என்ற விஷநாகம் தலைவிரித்தாட ஆரம்பித்ததாலேயே, "தமிழே எங்கள் உயிர்மூச்சு" என்று தமிழர்களும் அந்த நாகத்தை எதிர்கொள்ளத் தலைப்பட்டனர்.

தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து குரல்கொடுத்த தமிழ் அரசியல்வாதிகள் அதனை தமது அரசியல் ஆதாயத்திற்காகவே பயன்படுத்தினரே தவிர தமிழ் மொழிமீது பற்றுக்கொண்டவர்களாக இருக்கவில்லை.

ஆங்கில மோகத்தில் சிக்கிக்கொண்டவர்களாகவே விளங்கியிருந்தனர்.

இந்தியாவிலும் தமிழ்நாட்டில் இந்தித் திணிப்பை எதிர்த்து திராவிட இயக்கங்கள் கிளர்ந்தெழுந்தன. திராவிட இயக்கத் தலைவர்கள் பலர் தமிழ்மொழியில் பேசுவதிலும், எழுதுவதிலும் பேராற்றல் உள்ளவர்களாக இருந்தார்கள்.

அமரர் அண்ணாத்துரை, கலைஞர் கருணாநிதி போன்றோர் தமிழுக்கு தரமான இலக்கியங்கள் பலவற்றை உருவாக்கியும் தந்தார்கள்.

அமரர் அண்ணாவின் வேலைக்காரி திரைப்பட கதை வசனம் தமிழ் சினிமாவில் இனிய தமிழ் நடையைக் கொண்டுவந்தது. தமிழ் சினிமா வரலாற்றில் திருப்பத்தை ஏற்படுத்தியது. அதேபோல கலைஞர் கருணாநிதியின் திரைப்பட வசனங்கள் தமிழில் புதிய கருத்துக்களை தந்து மறுமலர்ச்சி ஏற்படுத்தியது.

தமிழின் சுவையையும், தமிழின் துள்ளு நடையையும் அனுபவித்து உணர்ந்தவர்களாகவே திராவிட இயக்க தலைவர்கள் விளங்கியிருந்தனர்.


ஆனால், நம் நாட்டில் தமிழ் அரசியலாளர்களில் குறிப்பிட்ட சிலரைத் தவிர கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட குடும்பப் பாரம்பரியம் பேசிய மேட்டுக்குடி அரசியலாளர்கள் அதற்கு நேர்மாறாக இருந்தனர்.

இன்னும் இந்தநிலை நீடிப்பதுதான் சாபக்கேடாக விளங்குகிறது.

இத்தகைய கலப்புத் தமிழர்கள் தமக்குத் தமிழ் தெரியாமல் இருப்பதையே ஒரு தகுதியாக காட்டிக்கொண்டனர் என்பதுதான் வெட்கக்கேடானது.

சிரித்திரன் சிவஞானசுந்தரம் போன்றோர் இந்த வெட்கக்கேட்டை எதிர்த்து கடுமையாகச் சாடினார்கள்.

அதற்காகவே காட்டூன் சித்திரத்தை தனியாக உருவாக்கி நயமான முறையில் விமர்சனத் தாக்குதல் நடத்தினார் அமரர் சிரித்திரன் சிவஞானசுந்தரம்.



"இனவாத நாகம் துவம்சமானால் உலக கிண்ணங்கள் மட்டுமல்ல நிலவுக்குக்கூட, நம்மவர்கள் சென்று வரலாம்."

## கொழும்புவர அச்சம்




வடபகுதிப் பயணிகள் வவுனியா தடைமுகாமில் தடுத்து வைக்கப்படுகிறார்கள். கடும் சோதனைகளுக்கு உள்ளாகிறார்கள். இதனால் வடக்கிலிருந்து வரும் பயணிகளின் எண்ணிக்கை குறைந்து ள்ளது . அதனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் பாஸ் அலு வலகங்களை நோக்கி படையெடுக்கும் மக்கள் தொகையும் குறைந்துள்ளது . ஆகவே புலிகளுக்கு ஓரளவு ஆறு தல் எனலாம்.

கொழும்பில் தமிழ் மக்கள் கைது செய்யப்படுவது , சந்தேகப்பார்வைகளில் மாட்டுவது சோதனை நடவடிக்கைகள் போன்ற செய்திகளை அறியும் வடக்கில் உள்ள மக்களின் மனதில் எப்படியான சித்திரம் உருவாகும்?

வடபகுதி பத்திரிகை ஒன்றில் சிரித்திரன் சுந்தர் வரைந்த காட்டூன் இது .

# கொன்றுவிடு கார்லோஸ் கொன்றுவிடு கார்லோஸை 4

## மனித வெடிகுண்டு


### கார்லோஸ்

**1976ம்** ஆண்டு கார்லோஸீக்கு ராசியான ஆண்டாக இருக்கவில்லை.

கார்லோஸீன் காதலிகள் பலரும் 76 ஆம் ஆண்டில் சிக்கல்களில் மாட்டினார்கள்.

இலண்டனிலிருந்த அஞ்செலா நாடு கடத்தப்பட்டாள். நாடியாவுக்கும் நாடு கடத்தல் உத்தரவு வழங்கப்பட்டது. நீதிமன்றத்தில் தடை உத்தரவு கேட்க திட்டமிட்டாள். பலவந்தமாக தூக்கிக்கொண்டு போய் விமானத்தில் ஏற்றி அனுப்பிவைத்தார்கள்.

கார்லோஸின் மற்றொரு காதலியான மாசெலாவும் ஃபிரான்சிலிருந்து விரட்டப்பட்டாள்.



கார்லோஸீன் தொடர்பு அறுந்து போனதால் மாசெலா அல்ஃபோன்ஷோ என்பவனைக் காதலித்தாள்.

இருவரும் கொலம்பியாவில் கார் ஒன்றில் சென்றுகொண்டிருந்த போது 1976 நவம்பர் 24ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பிரேத பரிசோதனையின்போது மாசெலா 4 மாத கர்ப்பிணி என்று தெரியவந்தது.

மாசெலா கொல்லப்பட்டதற்கும் கார்லோஸ் விவகாரத்திற்கும் தொடர்பில்லை. அவளது காதலனான அல்ஃபோன்ஷோவுக்கு எதிரிகள் அதிகம். அவனுக்கு எதிரிகள் வைத்த குறியில் பாவம் மாசெலாவும் மாட்டிக்கொண்டாள்.

இச் செய்திகள் எல்லாம் ஏடனில் இருந்த கார்லோஸீக்கு எட்டவே செய்தன.

மாசெலா கொல்லப்பட்ட செய்தியறிந்து கார்லோஸ் வருதப்படவே செய்தான்.

“என் அழகான பெண்ணே! உன்னோடு சந்தோசமாய் பகிர்ந்து கொண்ட அந்த இதமான நாட்களுக்காக” என்று சொல்லிவிட்டு ஒரு கிளாஸ் மதுவை காலிசெய்தான். அன்று முழுக்க குடித்தான்.

“ஏய்... நீ என்ன மிருகமா? உடம்பெல்லாம் என்ன வலி?! இங்கேபார்..” என்று காட்டினாள். இடதுமார்பில் நகக்கீறல்.

“வலிக்கிறதா டியர் உடனேயே சொல்லித் தடுத்திருக்கலாமே நீ!”

“அப்போதுவலி தெரிந்தால்தானே!” என்று கண்ணடித்தாள். “வலிக்கு ஒரு வைத்தியம் செய்யவா?” என்றான் கார்லோஸ். “வேண்டாம், வேண்டாம். என்ன வைத்தியம் என்று எனக்கு தெரியாதாக்கும்” என்றாள். என்றாளே தவிர எதிர்பார்த்தாள். நினைவுகள்.. நினைவுகள்.

கார்லோஸ் கண்களை மூடிக் கொண்டான். விமானப் பயணத்தில் ஏற்பட்ட உறவு போல, வாழ்க்கைப் பயணத்திலும் எத்தனை உறவுகள், பிரிவுகள். மீட்டிப்பார்த்தால் சோகம் கலந்த ஒரு சுகம் இருக்கும்.

மறுபடி காணமாட்டோமோ என்று ஒரு தவிப்பு ஏற்படும். ‘மாசெலாவை எப்படி முயன்றாலும் இனி காணவே முடியாது, நெஞ்சுக்குள் இருக்கும் நினைவுகளில் தவிர!

★▭●

**சோ**வியத் யூனியனின் உளவுப்பிரிவு கே.ஜி.பி. அமெரிக்க சி.ஐ.ஏ.க்கும், சோவியத் கே.ஜி.பிக்கும் இடையிலேதான் பலப்பரீட்சை.

தத்தமது நாடுகளின் விரோதிகளை ஒழித்துக்கட்டுவதுதான் அவற்றின் நோக்கம்.

அமெரிக்காவின் நண்பர்களை, நட்பு நாடுகளை சோவியத் உளவுப்பிரிவு வேட்டை நாயாகத் துரத்தும். வாய்ப்புக் கிடைத்தால் கதையை முடிக்கும்.

சோவியத் யூனியனின் நண்பர்கள், நட்பு நாடுகள் விடயத்திலும் சி.ஐ.ஏ அதனைத்தான் செய்யும்.

கார்லோஸின் சாகசங்கள், துணிச்சல் என்பவற்றை கே.ஜி.பி.கவனித்தது. கார்லோஸ் போன்ற ஒரு ஆள் தமக்கு தேவை என்று தீர்மானித்தது.

கார்லோஸீன் பலவீனம் பெண். கே.ஜி.பி.யில் அழகான பெண்கள் ரகம் ரகமாக தயாராய் இருப்பார்கள். சபலத்தனமான எதிரிகளை வலைக்குள் வீழ்த்த உபயோகமாவார்கள்.

கார்லோஸ் எதிரில் கால்மேல் கால் போட்டுக்கொண்டு அமர்ந்திருந்தவள் ரோசியா. உண்மையான பெயர் வேறாக இருக்கலாம். இடத்துக்கு இடம் பெயர் மாறும்.

கால்மேல் கால் போட்டுக் கொண்டிருந்தவள் மினிஸ்கேட் அணிந்திருந்தாள். முழங்காலுக்கு மேல் உயர்ந்திருந்தது. கால்களின் வாளிப்பும், பரிமாணமும் காலோஸீன் கண்களுக்கு அனுமதி இலவசம்.

நான்கு நாட்களாக சந்திப்புத் தொடர்ந்தது. இன்று ஐந்தாவது நாள் நெருக்கம் அதிகரித்திருந்தது.

கார்லோஸ் கண்களை கட்டுப்படுத்த கஷ்டப்பட்டான். அளவான உதடுகள். மெல்லிதான லிப்ரிஸ்க் பூச்சு. அடிக்கடி நாவால் கீழ் உதட்டை ஈரப்படுத்தியதில் ஒரு தனிக் கவர்ச்சி. கார்லோஸ் என்ற இரும்பை எதிரே இருந்த காந்தம் கவர்ந்து கொண்டிருந்தது.

அவனது தவிப்பை அவள் உள்ளூர ரசிப்பதுபோல் இருந்தது.

அவளிடம் பொறுப்பை ஒப்படைக்கும் போதே மேலதிகாரி சொல்லியிருந்தார்; “ரோசியா! கார்லோஸ் நமது ஆளாக மாறுவது உன் திறமையில்தான் தங்கியிருக்கிறது. உன் ஒவ்வொரு அசைவும் கார்லோஸை கே.ஜி.பி.யின் கையிலுள்ள சதுரங்க காயாக்க வேண்டும்.”

“என் திறமையில் நம்பிக்கை இல்லையா பொஸ்?” “இருக்கிறது, நூற்றுக்கு நூற்றியொருவீதம்!” என்றுவிட்டு, அவள் பின்புறத்தில் லேசாகத் தட்டினார். தட்டிவிட்டுச் சொன்னார்; “கார்லோஸ் என்ன பாடு படப்போகிறானோ?”

கார்லோஸ் படாதபாடுபட்டுக் கொண்டுதான் இருந்தான். கார்லோஸுக்கு பெண்கள் புதிதல்ல. அவர்களை கையாளும் அனுபவமும் புதிதல்ல. ரோசியாவிடம் தனது வழக்கமான அணுகுமுறைகள் தடுமாறுவதுபோல உணர்ந்தான் கார்லோஸ்.

ரோசியா கார்லோஸிடம் தன்னை ஒரு கே.ஜி.பி ஆள் என்று அறிமுகப்படுத்தியே நட்பை ஆரம்பித்தாள். கார்லோஸின் திறமைகளை அறிந்து வியந்து அவனை தேடிவந்ததாகக் கூறினாள்.

‘கார்லோஸ் போன்ற ஒரு போராளியுடன் நட்புக்கொள்ள கே.ஜி.பி. ஆவலோடு இருப்பதாகவும், அதன் மூலம் புரட்சித் திட்டங்களை உலகம் முழுவதும் விரிவாக்கலாம். கார்லோஸின் புகழும் உலகெங்கும் உயரும்” என்றெல்லாம் ரோசியா இறால்களைப் போட்டுவிட்டு சுறாவுக்காக காத்திருந்தாள்.

சுறா மெல்ல மெல்ல வலை நோக்கி வந்துகொண்டிருந்தது.

“யோசித்துவிட்டீர்களா? எந்த முடிவையும் கார்லோஸ் விரைவாக எடுப்பார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். கேள்விப்பட்டது பொய்யோ?” என்றாள். கால்களை வேண்டுமென்றே அசைத்தாள். பெண், அதுவும் அழகான பெண் தன்னைப் பற்றி பெருமையாக அறிந்திருக்கிறாள். அதனை பொய்யாக விடலாமா? அவசரமாக மறுத்தான்.

“முடிவெடுக்கவில்லை என்று யார் சொன்னது?”

“ஓ.. அப்படியா.. வெரி சொறி. வெரி வெரி சொறி. முடிவைச் சொல்லுங்கள்.”

“கே.ஜி.பிக்கு உதவத் தயார்”

கார்லோஸ் சொன்னதும் ரோசியா சட்டென்று எழுந்தாள். அவன் அருகில் போனாள்.

“ரியலி கிரேட், இதற்கு நான் ஒரு பரிசு தரட்டுமா?” என்றாள். கார்லோஸின் இதயத்துடிப்பு எகிறியது. எதிர்பார்த்தது விரைவாகக் கைக்கெட்டும்போது ஏற்படும் துடிப்பு.

**இதுவரை**

**கார்லோஸ் குழுவினரால் கடத்தப்பட்டு உகண்டாவின் என்டபே விமானநிலையத்தில் தரித்துநின்ற விமானத்தில் இருந்த பயணிகளை இஸ்ரேலிய அதிரடிப்படை மீட்டது.**

**இடி அமீனின் விருந்தாளிகளாக அவனது மாளிகையில்தங்கியிருந்தமையால் கார்லோஸ், தளபதி வாடிஹாட்டாட், அன்ரன் பௌவியர் ஆகியோர் உயிர் தப்பினார்கள்.**

“காத்திருக்கிறேன்” என்றான்.

“காத்திருந்து பிரயோசனமில்லை. கையைநீட்டி எடுத்துக் கொள்ளலாம்” என்றாள். கார்லோஸ் நிமிர்ந்துபார்க்க, தன் நெஞ்சில் கட்டைவிரலால் குத்திக்காட்டி “பரிசு நான்தான்! பிடித்திருக்கிறதா?” என்றாள். மறு நொடியே கார்லோஸீன் பிடியில் இருந்தாள்.

“கே.ஜி.பி. உங்கள் திறமையை அறிவதற்குமுன்னர் நான் அறிந்து கொள்ளப் போகிறேன்” என்றபடி தன்னை அவன் கையாள உதவினாள்.

☆☆☆

**பி**ரான்சின் உளவுத்துறை உயர் அதிகாரி அந்த மிக முக்கிய உத்தரவை தன் முன்னால் இருந்த இரண்டுபேருக்கும் சொல்லிக்கொண்டிருந்தார்.

### தருவது ரசிகன்

ஃபிரான்சுக்குள் வந்து துணிகரம் காட்டியவன் இன்னமும் உயிரோடு இருப்பது அவமானம். நம் நாட்டுக்கே அவமானம். கார்லோஸ், அந்த குள்ளநரி எங்கே இருக்கிறது என்று தேடிக் கண்டு பிடிப்பது ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவதுபோன்ற காரியம். அதனால், கார்லோஸை நம் வலையில் தானாகவே வந்து விழச் செய்ய வேண்டும். வலையைப் பின்னப்போவது நீங்கள்தான்!

இருவரும் மௌனமாக, முகங்களில் ஆர்வமாக இருந்தார்கள். அதிகாரியே தொடர்ந்தார்;

“கார்லோஸீன் தந்தையின் பெயர் ஜோஸ் ராமிரெஸ் நவாஸ். அவர் தற்போது இருப்பது வெனிசுலாவில். நீங்கள் இருவரும் கார்லோஸீன் தந்தையை சந்திக்கிறீர்கள். கார்லோஸ் என்றால் உங்களுக்கு உயிர் என்று நடிக்கப் போகிறீர்கள். அவரோடு நெருக்கமாகி, உங்கள்மீது கார்லோஸ் குடும்பத்தினருக்கு நம்பிக்கை ஏற்பட்ட பின்னர் தகவல் தாருங்கள்.




கார்லோஸின் கைவிரல் அடையாளங்கள்

அதன்பின்னர்தான் நமது திட்டத்தின் இறுதிக்கட்டம்” என்றுவிட்டு ஒரு சிகரெட் பற்றவைத்துக்கொண்டார். புகையை இழுத்து நுரையீரல்வரை பரவவிட்டுக்கொண்டு; புகை வடியும் வாயால் மேலும் விபரித்தார்.

“கொடிய நோய்களை உருவாக்கும் கிருமிகளை காலோஸின் தந்தையின் உடலில் செலுத்த வேண்டும். தந்தையின் உயிர் ஊசலாடுவதை கார்லோஸ் அறிந்தவுடன் எங்கிருந்தாலும் பறந்து வருவான். அதாவது நம் வலையில் சிக்கிவிடுவான்” அதிகாரி தனது சிகரெட்டை ஆஷ்ரேயில் நசுக்கினார்.

இதேகாலகட்டத்தில் நடைபெற்ற மிக முக்கிய சம்பவம் தளபதி வாடி ஹாட்டாட்டின் மரணம்.

கடும் நோய்காரணமாகவே வாடி ஹாட்டாட் மரணமானார்.

ஆனால் கார்லோஸின் எதிரிகள் புரளி கிளப்பினார்கள். “கார்லோஸ் தனது தளபதியை நஞ்சுவைத்துக் கொன்றுவிட்டான்” என்று பத்திரிகைகளிலும் செய்திகள் வெளியாகின.

வாடி ஹாட்டாட் இறந்ததும் அவரது குழுவினர் பலர் அபு நிடால் என்பவருடன் சேர்ந்து கொண்டனர்.

‘ஓபெக்’ நாடுகளது எண்ணை வள அமைச்சர்களை கடத்திய நடிவடிக்கையில் கார்லோஸுடன் பங்கெடுத்தவள் குரோச்சியா.(மறந்திருக்க மாட்டீர்கள் அல்லவா?)

வாடி ஹாட்டாட் இறந்த பின்னர் அவள் தலைமையிலும் ஒரு பாலஸ்தீன விடுதலைக் குழு உருவானது.

பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணித் தலைவர் டாக்டர் ஜோஷ் ஹபாஸிடம் இருந்து கார்லோஸுக்கு அழைப்பு வந்தது.

தன்னோடு சேர்ந்து இயங்குமாறு கோரினார் ஹபாஸ். உடன்பட்டான் கார்லோஸ். ஒரு நிபந்தனை விதித்தார் ஹபாஸ். முரண்பட்டான் கார்லோஸ்.

அதேவேளை கார்லோஸுக்கு கே.ஜி.பி. மூலமாக தரப்பட்ட பணியும் காத்திருந்தது.

“பிரபல எழுத்தாளர் புரூனோ பூசிக் என்பவரை ஆர்ப்பாட்டம் இல்லாமல் அடக்கமான முறையில் கொல்லவேண்டும்.” அது தான் பணி.

புறப்பட்டான் கார்லோஸ்.

புரூனோ பூசிக் யூகோஸ்லாவியாவில் இருந்தார். (தொடர்ந்து வரும்.)

# மதுரையில் நடந்த கொடுமை

## பார்த்தது பிரசவம்—பறிபோனது கிட்னி

**இ**ந்தியாவில் தமிழ்நாடு மாநிலம். அங்கே மதுரை நகரம். சிலப்பதிகார கதையின்படி சொன்னால் கண்ணகி எரித்த மதுரை. அங்குதான் ஒரு பெண்ணுக்கு நடந்திருக்கிறது கொடுமை.

அவளது பெயர் தமிழரசி.

நிறைமாதக்கர்ப்பிணி. தலைப்பிரசவம். பூரித்துப்போய் இருந்த தமிழரசிக்கு மதுரை அரசினர் மருத்துவமனையில்தான் ஒப்பரேஷன் நடந்தது.

அழகான பெண் குழந்தைபிறந்தது.



தமிழரசி ஒப்பரேசனுக்கு முன்பும்–பின்பும். திருடப்பட்டது வசீகரமும்தான்!

அளவற்ற மகிழ்ச்சியோடு வீடுதிரும்பினாள் தமிழரசி.

அதன்பின்னர்தான் ஆரம்பித்தது விவகாரம்.

தமிழரசிக்கு அடிக்கடி வயிற்றுவலி வந்தது. வைத்தியம் பார்த்தும் வயிற்று வலி நிற்கவில்லை.

படிப்படியாக தமிழரசியின் நிறமே மாறியது. உடலும் மெலிந்தது.

கடந்த ஜனவரிமாதம் பேச்சு மூச்சற்ற நிலையில் தமிழரசியை மதுரையில் உள்ள மிஷன் நடத்தும் வைத்தியசாலை ஒன்றில் சேர்ப்பித்தார்கள்.

அங்கு ஸ்கேன் ரிப்போர்ட்டை பார்த்துவிட்டு ‘கிட்னி ஒப்பரேஷன் செய்தீர்களா?” என்று கேட்டுவிட்டு உடனடியாக டிஷ்சார்ஜ் பண்ணிவிட்டனர்.

மீண்டும் அரச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டாள் தமிழரசி. ரிப்போர்ட்டைப் பார்த்ததும் எதுவும் சொல்லாமல் கசநோய் பிரிவுக்கு அனுப்பிவிட்டனர்.

இதற்கிடையில், சந்தேகப்பட்ட சொந்தக்காரர்கள் சிலர் ரிப்போர்ட்டைக் கொண்டு சென்று தனியார் மருத்துவமனை டாக்டரிடம் காண்பித்தனர்.

அந்த ரிப்போர்ட்டை பார்த்துவிட்டு டாக்டர் கேட்ட கேள்வி சொந்தக்காரர்களை தூக்கிவாரிப்போட்டது.

“தமிழரசியின் வலது பக்க கிட்னியைக் காணவில்லையே, விற்றுவிட்டீர்களா?” என்றுதான் கேட்டார் டாக்டர்.

அரச மருத்துவமனையில் பிரசவத்திற்காக ‘சிசேரியன்’ அறுவைச் சிகிச்சை நடந்ததைச் சொன்னார்கள் உறவினர்கள்.

டாக்டருக்கு விளங்கிவிட்டது. சிசேரியன் செய்யும் சாட்டோடு சாட்டாக கிட்னி ஒன்றையும் திருடிவிட்டார்கள் என்று விளங்கிவிட்டது.

அந்த டாக்டரின் ஆலோசனைப்படி தமிழரசியை அரச மருத்துவமனையில் இருந்து டிஷ்சார்ஜ் செய்து இப்போது வீட்டில்வைத்து சிகிச்சை கொடுக்கிறார்கள்.

தமிழரசியின் கணவர் ஒரு கூலித் தொழிலாளி. அதனால் தமக்கு நடந்த அநியாயத்துக்கு எதிராக உரத்துக்குரல் கொடுக்க முடியாமல் இருக்கிறார்கள்.

ஒரு கிட்னி திருட்டுப்போய்விட்டது. இன்னொரு கிட்னியும் சரிவர இயங்கவில்லை என்பதால் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறார் தமிழரசி.

தமிழரசியின் குழந்தை தாய்க்கு நிகழ்ந்த கொடுமை தெரியாமல் அருகில் அழுதுகொண்டிருக்கிறது.

படுத்த படுக்கையாக உடல் மெலிந்து நிறம்மாறிக் கிடக்கிறாள் தமிழரசி.

தனியார் மருத்துவமனைகளில் நிகழ்ந்த கிட்னி திருட்டு இப்போது அரச மருத்துவமனைக்கும் வந்துவிட்டதே என்று நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். நோயாளர்கள்.

டாக்டர்களே திருடர்களானால் நோயாளிகளின் உடல் உறுப்புக்களுக்கு யார் பாதுகாப்பு? எதற்கும் ஒப்ரேசன் முடிந்தபின்னர் உறுப்புக்கள் பத்திரமாக இருக்கிறதா என்று உறுதி செய்வது நல்லது.

# "கடனைத்தா—அல்லது—கிட்னியைத்தா"

**த**மிழ்நாட்டில் மதுரையில் நடைபெறும் மற்றொரு அதிர்ச்சி தரும் தகவல் இது.



வட்டிக்குப் பணம் கொடுப்பவர்களுக்கும் வாங்குவோருக்கும் இடையே ஒரு உடன்பாடு செய்யப்படுகிறது. பணம் வாங்குபவர் குறித்த தவணையில் பணத்தை செலுத்த முடியாவிட்டால் ஒரு கிட்னியை கொடுத்து விட வேண்டும். கடனை அடைத்து விடலாம்.

கிட்னியை பத்திரமாக ஒப்பரேசன் செய்து எடுக்கும் டாக்டர்களுக்கு பயங்கர மவுசு.

இந்தியாவிலேயே கிட்னி வியாபாரத்தில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது மதுரை.

கிட்னி வியாபாரம் கொடிகட்டிப் பறப்பதால் தரகர்களும் நிறையப்பேர் இருக்கிறார்கள்.

வீட்டை விட்டு ஓடி வரும் சிறுவர்களுக்கு பணம் கொடுத்து ஆசைகாட்டி, வைத்தியசாலைக்கு அழைத்துப்போய் ஒரு கிட்னியை உருவிக் கொள்கிறார்கள். சிறுவர்களுக்கு ஐயாயிரம் ரூபாய்வரை கொடுக்கப்படுகிறது.

# 119—நொட் அவுட்

## காட்டுக்குள் ஒரு 'பண்டிட் கிங்'

**த**மிழ்நாடு-கர்நாடாக எல்லையிலுள்ள காடுகளில் மறைந்துவாழ்பவன் சந்தனக் மரக்கடத்தல் மன்னன் வீரப்பன்.

சமீபத்தில் தனது 119 வது கொலையை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கிறான்.

1187ம் ஆண்டுக்கு வீரப்பன் கர்நாடக மாநில பொலிசாரால் கைதுசெய்யப்பட்டிருந்தான். தடுத்துவைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து வீரப்பன் தப்பிச்சென்றான்.

அதிலிருந்து தொடங்கியது அவனது ஆட்டம். இதுவரை வீரப்பனால் கொல்லப்பட்டவர்களது பட்டியல் இது;



எல்லைப்பாதுகாப்பு படை வீரர் ஒருவர். கர்நாடகப் பொலிஸார் 23 பேர். தமிழகப் பொலிஸார் 9 பேர். வனத்துறை காவலர்கள் 18 பேர். ஆதிவாசிகளும், மற்றும் பொதுமக்களும் 76 பேர்.

கடந்த பெப்ரவரி 17ம் திகதி தமிழக பொலிஸைச் சேர்ந்த ஒரு கான்ஸ்டபிளைச் சுட்டுக் கொன்றதோடு 119வது கொலையை செய்து முடித்துவிட்டான் வீரப்பன்.

கடந்த பெப்ரவரி மாதம் 17ம் திகதி தமிழக அதிரடிப்படைப் பொலிஸ்மீது காட்டுக்குள் வைத்து அதிரடித்தாக்குதல் நடத்தியது வீரப்பன் கோஷ்டி. அந்தச் சம்பவத்திலேதான் அதிரடிப்படை பொலிஸ்காரரான செல்வராஜ் கொல்லப்பட்டார். அதிரடிப்படை உயர் அதிகாரி உட்பட 5பேர் படுகாயமடைந்தனர்.

அதிரடிப்படையைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் மோகன் நிவாஸ் என்பவருக்கு வீரப்பன் வைத்த குறிதான் அது. மயிரிழையில் படுகாயங்களோடு உயிர்தப்பினார் மோகன் நிவாஸ்.

வீரப்பனின் மனைவி முத்துலட்சுமியை கைதுசெய்தவர்தான் மோகன் நிவாஸ். அதனால்தான் வீரப்பன் குறி வைத்தான்.

வீரப்பனை பிடித்தே தீருவோம் என்று தமிழக பொலிசாரும், கர்நாடக மாநிலப் பொலிசாரும் அடிக்கடி சபதம் செய்கின்றனர். ஆனால், வீரப்பன் எல்லோருக்குமே தண்ணி காட்டிக்கொண்டிருக்கிறான்.

இதற்கிடையே வீரப்பனை நேரில் கண்டுபேசி அவன் கதையைப் படமாக்க அமெரிக்க ஹொலிவூட் சினிமாக்காரர்கள் முயற்சி செய்து வருகிறார்கள்.

ஏற்கெனவே சம்பல் பள்ளத்தாக்கு கொள்ளைக்காரி பூலான் தேவியின் கதையை 'பண்டிட் குயின்' என்ற பெயரில் படமாக்கினார்கள். அது வசூல் மழை பொழிந்து கொண்டிருக்கிறது.

வீரப்பனின் கதையை 'பண்டிட் கிங்' என்ற பெயரில் படமாக்கும் யோசனையோடு ஹொலிவூட் நிறுவனம் ஒன்று தமிழ் நாட்டுக்கு வந்திருக்கிறது.

ஆனால், வீரப்பனை எப்படி சந்திப்பது என்று தெரியாமல் இருக்கிறதாம். வீரப்பனை சந்தித்து அவனது கதையை வெளியிடும் உரிமை பெற்றால், அதற்கு ஈடாக எத்தனை கோடிகள் கேட்டாலும் கொடுக்கத் தயாராக உள்ளது ஹொலிவூட் நிறுவனம்.



## கில்லாடி மாப்பிள்ளை

இரண்டு மனைவிக்காரர்கள் பலர் இருந்தாலும் துருக்கியைச் சேர்ந்த வில்மாஷ் என்பவர் அதிலும் ஒரு வித்தியாசம் செய்து விட்டார். ஒரே நாளில் ஒரே மணமேடையில் இரண்டு பெண்களை திருமணம் செய்து சாதனை படைத்திருக்கிறார்.

வில்மாஷ் ஒரு வாகனச் சாரதி. ஆயிசி என்ற பெண்ணைத்தான் முதலில் காதலித்தார். பின்னர் சுல்தான் என்னும் பெண்ணையும் காதலிக்கத் தொடங்கினார். இருவரையுமே கைவிட மனம் இடம்தரவில்லை. முடிவில் இருவரையுமே திருமணம் செய்து கொண்டுவிட்டார்.

அதெல்லாம் சரி, சாந்தி முகூர்த்தம் எப்படி வைத்துக் கொள்வீர்கள்? என்று வில்மாஷிடம் கேட்டார்கள். அதற்கு வெகு அலட்சியமாக வில்மாஷ் சொன்ன பதில்; "அதுவும் ஒரே இரவில்தான். அதற்கு ஏற்ற மாதிரி நேர அட்டவணை போட்டு வைத்திருக்கிறேன்." என்கிறார் மனிதர். கில்லாடி மாப்பிள்ளை. கைவசம் இரட்டை ரோஜா.

**தகவல் பெட்டி**

முரசு 144இல் 20ம் பக்கத்தில் ஒரு பெ.....ரி.....ய்...ய நாயாரின் படம் பிரசுரித்திருந்தோம் அல்லவா. அது பிரித்தானிய புல்டோக் இன நாயார் என்பதும் நினைவிருக்கலாம்.

அதே இன நாயார் போட்ட குட்டிகள்தான் இங்கே படத்தில் காணப்படுகின்றன. போட்டது பத்து குட்டிகள். தப்பிப்பிழைத்தது எட்டே எட்டு குட்டிகள். எட்டும் அழகான சுட்டிக் குட்டிகள்.


ஒரு குட்டியின் விலை எவ்வளவு தெரியுமா? 50 ஆயிரம் ரூபாய்! (வாயைப் பிளக்காதீர்கள்) வாங்குவதற்கு பல தலைவர்கள் கியூவில் நிற்கிறார்கள். ஆனாலும் விற்க மாட்டேன் என்று அடம் பிடிக்கிறார் உரிமையாளர்.

## எட்டும் படு சுட்டி

## காதுகளை காயப்படுத்தாதீர்கள்

காட்டுக்குள் யானைகளை விரட்ட வாகனங்கள் பாவிக்கும் 'ஹோர்ன்' சத்தங்களை மனிதர்களை விலக வைக்கவும் பாவிக்கலாமா? கூடாது என்கிறார்கள் ஜெர்மனியர்கள். அதற்காகவே வாகனக் ஹோர்ன் சத்தங்களை குறைக்கக் கோரும் நாள் கொண்டாடப் பட்டது. அதற்காக தனது முதுகில் காதுபோன்ற கட்-அவுட்டை சுமந்தபடி உலாப்போகிறார் ஒருவர். வாகனச் சாரதிகளின் கவனத்தை கவரும் முயற்சி.





## நீரின்றி வாழலாம்!

ஜெரினுக் என்று அழக்கப்படும் இந்த விசித்திர மான், ஆபிரிக்காக் கண்டத்தின் காடுகளில் உள்ளது. எண்ணிக்கையில் மிகக் குறைவாக உள்ள இந்த இனம் அழியக்கூடிய அபாய நிலையில் உள்ளது.

இதில் மிகவும் அதிசயம் என்னவென்றால், இந்த மான் தண்ணீர் குடிப்பதை இதுவரை யாரும் பார்த்ததே கிடையாதாம்.

பாலைவனச் சூழலில் பழக்கப்பட்ட விலங்கினமாக இருக்கும் என்று மிருக ஆராய்ச்சி வல்லுநர்கள் கூறுகின்றனர். இந்த அரிதான மான் பற்றிய ஆராய்ச்சி தொடர்கின்றது.




## விஷயம் உள்ள சிறிசு

இயந்திர மனிதன் எனப்படும் ரோபோக்கள் பலப்பல தினுசுகளில் உருவாக்கப் பட்டு வருகின்றன. பிரமாண்டமான ரோபோக்கள் விஞ்ஞானிகளால் வடிவமைக்கப்பட்டுள்ளன.

படத்தில் இருப்பதுதான் உலகில் மிக...மிக சிறிய இயந்திர மனிதன்.

சின்னதாக இருந்தாலும் விஷயம் உள்ள ரோபோ இது. மனித உடலின் உள்ளே சென்று அங்குள்ள உறுப்புக்களையும் அவற்றில் உள்ள குறைபாடுகளையும் படம் பிடித்துக் கொண்டு வந்து தந்துவிடும் இந்த ரோபோ. இதனை இயக்க தனியான ரிமோட் கொண்ரோல் உண்டு. இதனைக் கண்டுபிடித்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த மாசோ சோஸ்டீஸ். இந்த 'ரோபோ' மட்டும் மருத்துவ உலகால் ஏற்கப்பட்டால் நல்ல பலன் கிடைக்கும் என்கிறார் மாசோ சோஸ்டீஸ்.



## குண்டு விளையாட்டு

இன, மத, மொழி ரீதியாக மனிதர்கள் பிரிந்து மோதுவதால் வாழ்க்கை உத்தரவாதமற்றதாகிவிட்டது. எப்போது வேண்டுமானாலும், எதுவும் நேரலாம். காலடியில் மரணம் காத்திருக்கும் உணர்வோடு நிம்மதியாக வாழ்வது எப்படி? படத்தில் சிதைந்து கிடைப்பது பயணிகள் பஸ் வண்டி. 50 பயணிகள் செத்துப் போனார்கள்.

அல்ல....அல்ல.... சிதறிப்போனார்கள்!

இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் இயக்கம் நடத்திய குண்டுத்தாக்குதல்தான் இது. அதன் கோரத்தை சித்தரிக்கும் தத்ரூபமான படம் இது.

இஸ்ரேலிய-பாலஸ்தீன மோதல் முடிவுக்கு வந்து விட்டதாக யாசீர் அரபாத் சொல்வது சுத்தப் பொய் என்கிறது ஹமாஸ் இயக்கம். அதனை நிரூபிக்கவே குலை குலையாகக் கொலைகள். குண்டுகள் மிரட்டும் காலமிது.



## சங்கவிக்கு சிபாரிசு

தமிழில் மட்டும் நடித்துக் கொண்டிருந்தால் சம்பாத்தியம் போதாது என்பதால் சாமர்த்தியசாலியான சங்கவி பிறமொழிப் படங்களுக்கும் தாவியிருக்கிறார்.

தெலுங்கில் நடிகர் சுமனோடு ஒட்டிக்கொண்டு 'நாயுடுகாரு' என்னும் படத்தில் நடிக்கிறார்.

படப்பிடிப்பில் ஏற்பட்ட நெருக்கம் அதன்பின்னரும் தொடர்ந்து நட்சத்திர விடுதிவரை சென்றிருக்கிறது.

நடிகர் சுமன் பற்றி சில நடிகைகள் புகார் செய்வதுண்டு. பாடல் காட்சிகளில் நடிக்கும் போது இயக்குநர் சொல்வதற்கு மேலேயே நடித்துவிடுவாராம். அதனால் சுமனோடு நெருக்கமான காட்சிகளில் நடிக்க சில நடிகைகள் மறுத்துவிடுகிறார்கள்.

சங்கவி மட்டும்தான் சுமனோடு நடிப்பதில் ஆர்வம் காட்டுகிறாராம். இயக்குநர் விரும்பியதற்கு மேலாகவே சுமனோடு நெருங்கி நடித்து சங்கவி அசத்திவிட்டாராம். அதனால்தான் இருவருக்கும் இடையில் நட்பு இறுக்கமாகியிருக்கிறது.

சுமனோடு சங்கவி நடித்த காட்சிகள், அவரது ஒத்துழைப்பு மற்றும் துணிச்சல் பற்றியெல்லாம் தெலுங்குப் படவுலகில் பரவலாகப் பேசப்படுகிறது. அதனால், சங்கவியை தம்முடன் ஜோடியாகப் போடும்படி கிருஷ்ணா, வெங்கடேஷ் போன்ற ஹீரோக்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள்.

## சுகன்யாவின் செல்வாக்கு

நடிகை சுகன்யாவுக்கும் தமிழக அமைச்சர் கண்ணப்பனுக்கும் இடையில் உள்ள உறவு இப்போது வெளிச்சத்திற்கு வந்துவிட்டது. நடிகர், நடிகைகள் பலர் சுகன்யாவிடம் அரசியல் சிபாரிசுகளுக்காக அலைகிறார்களாம். தனது செல்வாக்கு மூலமாக பல காரியங்களை முடித்துக் கொடுத்திருக்கிறார் சுகன்யா.

அமைச்சரின் காதலி என்று தெரிந்துபோனதால் முன்பு போல இயக்குநர்கள், ஹீரோக்கள் தொல்லைகள் குறைந்துவிட்டனவாம்.

## 'தர்ம சக்கரம்' தயாராகிறது

முரசின் முகப்பில் விஜயகாந்த் தோளில் துண்டுடன் காட்சியளிப்பது 'தர்மசக்கரம்' படத்திற்காக. சின்னக் கவுண்டரில் வெள்ளைத் துண்டு. இதிலே தோளில் சிகப்புத் துண்டு.

'நாட்டாமை', 'முத்து', 'பரம்பரை' போன்ற படங்களை இயக்கிய பிரபல இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் இயக்கும் படம்தான் தர்மசக்கரம். விஜயகாந்த்க்கு ஜோடியாக முன்னணி நடிகை ஒருவரை நடிக்க வைக்கப்போகிறார்கள்.


விஜயகாந்த் நடித்து முடிவடைந்துள்ள 'தமிழ் செல்வன்' சித்திரைப் புத்தாண்டுக்கு திரைக்கு வருகிறது.

## கடலில் விழுந்த 'மனசு' நாயகி

ஒளிப்பதிவாளர் 'அப்துல் ரகுமான்' முதன் முதலாக இயக்கும் படம். 'மனசு'. சாதி சனம் படத்தில் கதாநாயகியாக நடித்த ஓவியாதான் 'மனசு' படத்திலும் கதாநாயகி.

'மனசு' படத்திற்காக கடல் அலை புரளும் குன்றின் மீது படப்பிடிப்பு நடந்தது. திடீரென்று சறுக்கி கடலில் விழுந்துவிட்டார் ஓவியா. சண்டைப் பயிற்சியாளர் ஜாக்குவார் தங்கம் கடலில் குதித்து ஓவியாவை காப்பாற்றினார்.

அதன்பின்னர் படத்தின் கிளைமாக்ஸ் காட்சி. கதாநாயகனுடன் ஓவியா கடலோரமாக நடந்து சென்றபோது ராட்சத அலையொன்று வந்து மோதி வீழ்த்தியது. கதாநாயகன் தப்பிவிட்டார். ஓவியா 'என்னைக் காப்பாத்துங்க, காப்பாத்துங்க' என்று கூச்சல் போட்டார். கதாநாயகனுக்கு நீச்சல் தெரியாது. இயக்குநர் அப்துல் ரகுமான் மின்னல் வேகத்தில் பாய்ந்து ஓவியாவை கரைக்கு கொண்டு வந்தார்.



ராம்கி-பிரகதி
படம் புதல்வன்

## மினி சினி

* 'இந்தியன்' படத்தைத் தொடர்ந்து சிவாஜி புரடக்சன்ஸ் தயாரிக்கும் படத்தில் நடிக்கவுள்ளார் கமல். இதற்கு முன்னர் கமல், சிவாஜி புரடக்சன்ஸ் தயாரித்த 'வெற்றிவிழா','கலைஞன்' ஆகிய படங்களில் நடித்துள்ளார்.

*தமிழ்ப் படங்களுக்கு இசையமைப்பதைக் குறைத்துக் கொண்டுள்ள இளையராஜா, மலையாளத்தில் 'கலாபாணி' (தமிழில் 'சிறைச்சாலை') படத்திற்குப் பின் 'மேன் அப் த மேட்ச்' என்ற படத்திற்கு இசையமைக்கவுள்ளார்.

*நெப்போலியன்-ரஞ்சிதா நடித்த தமிழச்சி படத்தைத் தயாரித்த நிறுவனம் அடுத்து தயாரிக்கும் படத்தில் முரளி நாயகனாக நடிக்கிறார். நாயகி-ரஞ்சிதா. 'அதர்மம்' படத்திற்குப் பின்னர் முரளி-ரஞ்சிதா ஜோடியாக இணையும் படம் இது.

*சொந்தக் குரலில் பாடும் கதாநாயகர்கள் வரிசையில் கடைசியாக இணைந்துள்ளவர் பிரசாந்த். 'மன்னவா' படத்தில் 'வேர்வைத் துளியில் யாகம்....' என்ற பாடலை இவர் பாடியுள்ளார்.

* விஜயகாந்த் நடித்த படங்கள் பெரும்பாலும் தெலுங்கிற்கு மொழி மாற்றப்படும். தற்போது, இவர் நடித்துள்ள 'காந்தி பிறந்த மண்' தெலுங்கில் 'ரௌடி நாயுடு' என்ற பெயரில் மொழி மாற்றப்பட்டு வருகிறது.

* பல படங்களில் நாயகியாக நடித்துள்ள ரோஹிணிக்கு இயக்குநராக வர வேண்டும் என்று ஆசை. ரேவதியின் கணவர் சுரேஷ் மேனனிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்த இவர், இப்போது பிரபல மலையாள இயக்குநர் பிரியதர்ஷனிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிகிறார்.

*சத்யராஜ் கதாநாயகனாக நடிக்க 'வள்ளல்' படத்தை இயக்கும் ராஜ்கபூர், அடுத்து விஜய் கதாநாயகனாக நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

* ஒளிப்பதிவாளர் அப்துல் ரகுமான் இயக்கும் 'மனசு' படத்தின் தயாரிப்பாளர் ஷீலா சிவா இப்படத்தில் இடம்பெறும் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார். ஷீலா சிவா பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.என். சுரேந்தர், ஷோபா சந்திரசேகரன் ஆகியோரின் சகோதரி.

* மலையாளத்தில் மம்முட்டியுடன் பானுப்பிரியா இணைந்து நடித்த 'அழகிய ராவணன்' வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, 'குலம்','ஒரு முத்தம் மணி முத்தம்' ஆகிய இரு மலையாளப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

* 'விட்னஸ்' படத்தைத் தயாரித்து இயக்கிய தக்காளி சீனிவாசன் அடுத்து 'சர்ப்பம்' என்ற படத்தை இயக்கித் தயாரிக்கிறார். இப்படத்தில் ராம்கி-ரோஜா ஜோடியாக நடிக்கிறார்கள்.

## ரசிகைகள்தான் அதிகம்

பிரபுதேவா இதுவரை நான்கு படங்களில் கதாநாயகனாக நடித்திருக்கிறார். அதில் காதலன் சூப்பர் ஹிட். 'ராசய்யா' சுமார் ரகம். 'இந்து' வெற்றி 'லவ்பேர்ட்ஸ்' படுதோல்வி. தற்போது மிஸ்டர் ரோமியோ', 'மின்சாரக்கனவு' படங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார்.

தினமும் ரசிகர்களின் கடிதங்கள் பிரபுதேவாவுக்கு குவிகின்றன. "ரசிகர்களைவிட ரசிகைகள் தான் எனக்கு அதிகம்" என்று சொல்லி பூரித்துப் போகிறார் பிரபுதேவா.

## பார்க்கக்கூடிய படம்

மலையாளத்தில் இருந்து தமிழுக்கு மொழி மாற்றப்பட்டுள்ள படம் 'கிங்'. கதாநாயகனாக மம்முட்டி நடித்திருக்கிறார். கலெக்டர் அதாவது மாவட்ட ஆட்சித்தலைவர் வேஷம். துணிச்சல், துடிதுடிப்பு, கடமை உணர்ச்சி, தீரம், விவேகம் என்று படம் முழுக்க விறுவிறுப்பு. பாடல்களே இல்லாத படம். கதாநாயகனுக்கு ஜோடியே கிடையாது.

வீடியோவில் படம்பார்க்கும் வசதியுள்ளவர்கள் நம்பிக்கையோடு கொப்பி எடுத்துப்பார்க்கலாம்.

## சினி விசிட்



புதுமுகம் சக்தி-ஓவியா
படம்: மனசு

## காதோடு சொல்லுகிறோம்

இணைந்து நடிக்கும் நாயகனுடன் சுண்டுவிரல் மந்திரம், மற்றும் இரகசியப் பாஷையில் பேசுவது போன்றவற்றில் 'சங்க' நடிகைதான் முன்னணியில் நிற்கிறார். 'சங்க' நடிகையின் சுண்டுவிரல் மந்திரத்தால்தான் 'வி' நடிகரும் நடிகையின் பின்னால் அலைந்தாராம்.

பம்பாய் இறக்குமதியான 'ஷில்' நடிகை ஒரு நடிகரைப்பற்றி ஆச்சரியப்பட்டு பேசுகிறார். "எங்கு தொட்டாலும் கூச்சப்படுகிறார். ஆனால் 'ஏ' ஜோக் மட்டும் தாராளமாகச் சொல்கிறார். இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக கூச்சப்படுவதை விட்டுவருகிறார்" என்கிறார் ஷில் நடிகையால் அப்படிச் சொல்லப்படும் நடிகர் யார் தெரியுமா? தாடிக்கார ஹீரோதான்.

மீன் நடிகை தான் படிப்பது ஆங்கில நாவல்கள் மட்டுமே என்று சொல்லிவருகிறார். தமிழில் யாருமே நன்றாக எழுதுவது கிடையாது என்கிறார். தமிழே தெரியாத மீன் நடிகைக்கு அதெப்படி தெரிகிறது? என்று கேட்கிறார்கள் விஷயமறிந்தவர்கள்.

'ரம்' நடிகை முன்பு குடிப்பதற்கு நல்ல தண்ணீர் கேட்டால்கூட யாரும் வாங்கித்தருவதில்லையாமே "இப்போது பன்னீரில் குளிப்பாட்டவே தயாராக இருக்கிறார்கள் தயாரிப்பாளர்கள்." என்று பெருமையடித்துக்கொள்கிறார்.

பாக்கியமான இயக்குநரான நடிகருக்கு அவர் மனைவியான முன்னாள் நடிகை மாருதி கார் வாங்கிக் கொடுத்தாராம். அந்தக்காரில் பிடித்த நடிகையுடன் பாக்கியர் ஊர்சுற்றுவதைக் கேள்விப்பட்டார் மனைவி. அதனால் பரிசாகக் கொடுத்த காரை திரும்ப எடுத்துவிட்டார். இப்போது தனது உபயோகத்துக்கு பயன்படுத்துகிறாராம்.

## யார் பெரிய நடிகை?

கவர்ச்சி நடிகைகள் பல ரகத்தில் படையெடுத்தும்கூட சில்க் சுமிதாவை அசைக்க முடியவில்லை. அந்த உதடுகள், அந்தக் கண்கள். அவைதான் சில்க் சுமிதாவின் நிரந்தரக் கவர்ச்சியின் இரகசியங்கள்.

சில்க் சுமிதா தன்னைப் பற்றிக் கூறுவதைக் கேளுங்கள்.

"நான் தமிழில் நடித்த முதல் படம் 'வண்டிச் சக்கரம்'. அந்தப் படத்தில் கதாநாயகி சரிதா. இப்போது அவரைக் காணவில்லை, நான் இருக்கிறேன்.

'அலைகள் ஓய்வதில்லை' படத்தில் ராதா கதாநாயகி. இன்று அவர் படங்களில் இல்லை; நான் இருக்கிறேன்.

'சகலகலாவல்லவனில்' எனக்கு முக்கிய வேடம். அம்பிகாதான் கதாநாயகி. இன்று அம்பிகா எங்கே? நான் இங்கேதான் இருக்கிறேன்.

அதேபோல் தமிழ், மலையாளம், தெலுங்கு என்று என்னுடன் நடித்த கதாநாயகிகளின் காலம் முடிந்துவிட்டது. நான் மட்டும் இப்போதும் பிஸியாக இருக்கிறேன். நீங்களே சொல்லுங்கள்; நான் அவர்களைவிட பெரிய நடிகையா. இல்லையா? என்று கேட்கிறார் சில்க் சுமிதா. நியாயமான கேள்வி.


## வாய்ப்பு தேடுகிறார்

அருகில் கோவிந்தாவுடன் இணைந்தி... நடிகையின் பெயர் மதுவந்தி. இவர் ... நடித்த பாக்யஸ்ரீயின் 'மைனே பியார் கியா' படத்தில் நடித்த பாக்யஸ்ரீயின் தங்கை. கோவிந்தா வோடு 'ராதாஸ்...' என்னும் படத்தில் நடித் திருக்கிறார். இந்தியில் அதிக வாய்ப்பில்லாத மது... தமிழில் நடிக்க விரும்பம் தெரிவித்துள்ளார். விரைவில் தமிழில் இறக்குமதியாகி கலங்கடிக்கக்கூடும்.

'காதல் தேசம்' படத்தில் தபுவுடன் நடிப்பவர் வினீத். 'காதல் தேசம்' பட... குஞ்சுமோன். அவர் 'சக்தி' என்ற பெ... படத்திலும் வினீத்தான் கதாநாயக... மேலும் இரண்டு படங்களில் வா... வினீத்துக்கு சொல்லியிருக்கிறார்.







# ரம்பா-ரம்யா மோதல் ரகசியத்தை உடைக்கிறார் ரம்யா

தமிழ், தெலுங்கு இரண்டிலும் கொடிகட்டி பறக்க ஆரம்பித்திருக்கிறார் ரம்பா.

'உள்ளத்தை அள்ளித்தா' படத்தில் கார்த்திக்குடன் தாராளமாக நடித்தார். படம் ஹிட். அதனால் தமிழில் வாய்ப்புகள் குவிந்துக்கொண்டிருக்கின்றன.

குஷ்பு, நக்மா வரிசையில் இப்போது 'ரம்பா' என்று சொல்லுமளவுக்கு கவர்ச்சியால் ரசிகர்களை தன் பக்கம் இழுத்திருக்கிறார் ரம்பா.

தெலுங்கில் சிரஞ்சீவியுடன் ரம்பாவுக்கு நெருக்கம். விரைவில் தனது படமொன்றில் கதாநாயகிக்கு முக்கியத்துவமுள்ள வேடம் ஒன்று தருவதாக உறுதி கொடுத்திருகிறாராம் சிரஞ்சீவி.

தெலுங்குப் படவுலகில் ரம்பாவால் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் ஒருவர் ரம்யாகிருஷ்ணன்.

ரம்பாவுக்கு அதிக வாய்ப்புகள் எப்படிக் கிடைக்கின்றன? என்ற இரகசியத்தை வெளியிட்டுள்ளார் ரம்யாகிருஷ்ணன்.

"தன்னோடு நடிக்கும் கதாநாயகர்களை கைக்குள் போட்டுக் கொள்கிறார் ரம்பா. அவரது வீட்டில் ஒரு நீச்சல் குளம் ஒன்று இருக்கிறது அங்கே ஒரே கும்மாளம்தான். ஹீரோக்களை குளிரவைக்கிறார். குளிர்ந்துபோன ஹீரோக்கள் சிபாரிசு செய்கிறார்கள்" என்று புலம்புகிறார் ரம்யாகிருஷ்ணன்.

ரம்யாவின் புலம்பல் ரம்பாவின் காதில் விழுந்துவிட்டது. சூடாகிப் போன ரம்பா திருப்பியடித்திருக்கிறார்.

"பாவம் ரம்யா கிருஷ்ணன். இயக்குநர் ராம்கோபால் வர்மாவும் நைசாக கழன்று கொண்டார். சான்ஸ் இல்லாமல் இயக்குநர்களின் வீடு வீடாக அலைகிறார் ரம்யா. அந்தக் கோபத்தில் தான் ஏதேதோ உளறுகிறார்" என்று சொல்லியிருக்கிறார் ரம்பா.

ரம்பா



## நக்மாவின் வயிற்றெரிச்சல்

பிரபு தேவா ரம்லத் என்ற பெண்ணை மணந்து கொண்டதாக வெளிவந்த செய்தியை பிரபுதேவா மட்டும்தான் மறுத்துக் கொண்டிருக்கிறார். செய்தி உண்மை என்று அடித்துச் சொல்கிறார்கள் தமிழக சினிமா நிருபர்கள்.

இதேவேளை பிரபுதேவாவுக்கும் நக்மாவுக்கும் இடையில் 'காதலன்' படத்தில் இருந்து ஆரம்பித்த நட்பு வளர்ந்து செழித்துக்கொண்டிருப்பதாக பரவலான பேச்சு. ரம்லத் விவகாரத்தால் நக்மா பிரபுதேவாவுடன் பேசுவதைக் குறைத்துக் கொண்டார். தனியான விசேஷ சந்திப்புக்களும் இரத்துச் செய்யப்பட்டன.

இதற்கிடையே இருவரும் நடித்த 'லவ் பேர்ட்ஸ்' படமும் படுதோல்வி கண்டுவிட்டது. ரம்லத்தை கவனிக்கும் அவசரத்தில் படத்தில் தனது முழுத்திறமையையும் பிரபுதேவா காட்டவில்லை என்று குறைசொல்கிறார் நக்மா.

ஒரு கல்லில் இரண்டு மாங்காயோ?

## ராமராஜனின் முடிவு

நடிகர் ராமராஜனும், நடிகை நளினியும் பிரிந்துவிட்டார்கள் அல்லவா. அதன் பின்னர் ராமராஜனின் மார்க்கெட்டும் உயர்ந்து கொண்டிருக்கிறது.

விரைவில் தனது உறவுக்காரப் பெண் ஒருத்தியை கைப்பிடிக்கப் போகிறார் ராமராஜன். இனிமேல் அரசியலில் ஈடுபடுவதில்லை என்ற முடிவோடு இருக்கிறார்.

## பெயர் மாறியது

'செல்லக்கண்ணு' படத்தை இயக்கியவர் ரத்னம். படம் வெற்றிபெறவில்லை. ஆனால் ரத்னம் மனம் தளரவில்லை. புதிய படம் ஒன்றை இயக்குகிறார். படத்துக்கு அவர் சூட்டிய பெயர்; 'பப்பா பாடும் பாட்டு'. பெயர் சரியாக வரவில்லை என்று பலரும் அபிப்பிராயப்பட்டார்கள். அதனால் 'மேடைப்பாடகன்' என்று பெயரை மாற்றிவிட்டார். படத்தில் 9 பாடல்கள். இசை அமைப்பவர் சௌந்தர்யன். இளையராஜாவுக்கு 'சிந்து பைரவி' மாதிரி, தனக்கு 'மேடைப்பாடகன்' ஹிட் கொடுக்கும் என்று நம்புகிறார் சௌந்தர்யன்.

படத்தின் ஹீரோ, விக்னேஷ் செல்லக்கண்ணுவிலும் அவர்தான் ஹீரோவாக நடித்தார்.

## ரஜினி எழுதுகிறார்

எம்.ஜி.ஆர், சிவாஜி பற்றியெல்லாம் முன்பு எழுதியவர் எஸ்.விஜயன். தற்போது மாலைமதி மாதநாவலில் 'ரஜினிகாந்தம்' என்ற பெயரில் 20 வாரங்களாக எழுதிவருகிறார்.

உங்களைப் பற்றி யார் யாரோவெல்லாம் எழுதுகிறார்கள். நீங்களே உங்கள் அனுபவங்களை எழுதினால் என்ன? என்று ரஜினியிடம் கேட்டிருக்கிறார்கள் நண்பர்கள். ரஜினிக்கும் அந்த யோசனை பிடித்துப் போய்விட்டது.

இப்போது 'துக்ளக்' சஞ்சிகையில் ரஜினியே தொடர் எழுதுகிறார். 'அந்த ஐந்து விழாக்கள்' என்ற தலைப்பில் எழுதிவருகிறார்.

தமிழக முதல்வர் ஜெயலிதாவோடு நடந்த சந்திப்பு, பின்னர் ஏற்பட்ட விரிசல் தொடர்பாகவெல்லாம் எழுதிவருகிறார் ரஜினி.

## இரண்டு பெயர் நடிகை

'ஆமே'

'ஆயனுக்கு இதலு'

'அல்லுடா மஜுக்கா'

'ஆடற மஜுக்கா'

'அம்மலேனு குட்டலு'

இதெல்லாம் படப்பெயர்கள் பயப்படாதீர்கள். தெலுங்குப் படப்பெயர்கள்தான். இவற்றில் கதாநாயகியாக நடிப்பவர் சிவரஞ்சனி. ஊஹா என்ற பெயரில் தெலுங்கில் ஆஹா, ஓஹோ, என்று கொடிகட்டிப் பறக்கிறார்.

'ஊஹா' என்ற பெயரிலேயே ஒரு படம் தயாராகிறதாம்.

தமிழில் ஆனந்த் ஜோடியாக அவதார புருஷன் படத்தில் நடிக்கிறார் சிவரஞ்சனி. தமிழில் மட்டும் சிவரஞ்சனி என்ற பெயரோடு தான் நடிக்கிறார்.

## தனியான சம்பளம்

'குருதிப்புனல்' பாணியிலேயே 'லவ் பேட்ஸ்' படத்தில் பிரபுதேவாவும், நக்மாவும் முத்தம் கொடுத்திருந்தனர். (சில பிரதிகளில் அக் காட்சி இல்லை) அதையடுத்து முத்தம் கொடுத்து அசத்த பல நடிகைகள் முன்வந்துள்ளனர். ஆனால் ஒரு நிபந்தனை. முத்தக் காட்சிக்காக தனியான சம்பளம் கொடுத்துவிட வேண்டும். பெரிய ஹீரோக்களுடன் என்றால் மட்டும் அந்த நிபந்தனை வாபஸ்.



கமல்-மனீஷா கொய்ராலா படம் இந்தியன்

## போதை ஏற்றும் ரோஜா

ஆர்.செல்வமணி தயாரிக்க, வேலு பிரபாகரன் இயக்கத்தில் தயாராகும் படம் ராஜாளி. நம்நாட்டில் ஈ.ரிவி தொலைக்காட்சியில் பிரதி சனி தோறும் காண்பிக்கப்படும் 'பே வோச்' படத்தின் சாயலில் உருவாகும் படம்தான் ராஜாளி.

முழுக்க முழுக்க கவர்ச்சியை நம்பியே உருவாகும் படம். பம்பாய் மொடல் அழகிகள் அனுராதா, நீனா ஆகியோர் அறிமுகமாகிறார்கள். அனுஷா, டிஸ்கோ சாந்தி, சில்க் சுமிதா, விசித்ரா ஆகியோரும் நடிக்கின்றனர். அவர்களுடன் போட்டி போட்டு கவர்ச்சி காட்டுகிறார் ரோஜா. தலைமுடியை 'பாப்' செய்து கொண்டு மதுபான விடுதி நடத்தும் பெண்ணாக நடிக்கிறார். நெப்போலியன், ராம்கி, மன்சூர் அலிகான், மேஜர் சுந்தர்ராஜன், எஸ்.எஸ்.ராஜேந்திரன், இந்திநடிகர் சுரேந்தர் பால், கே.ஆர்.விஜயா, தியாகு, கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

படகுச் சவாரி, கடல் குளியல் என்று கவர்சிக் காட்சிகளில் தோன்றி போதையேற்றுகிறார் ரோஜா.

தனது காதலரான ஆர்.கே.செல்வமணியின் சொந்தத் தயாரிப்பு என்பதால் தனது கவர்ச்சியால் லாபம் சம்பாதித்து கொடுக்க கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கிறார் ரோஜா.

## பூவரசனில் புதுமுகம்

கார்த்திக் கதாநாயகனாக நடிக்கும் பூவரசன் படத்தில் அவருக்கு ஜோடி புதுமுகம்.

அவரது பெயர் 'ரஸ்னா.'

ரஸ்னா ஒன்றும் சாதாரணமானவரல்ல. இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற 'மிஸ் இந்தியா' போட்டியில் இரண்டாம் இடத்தில் வந்தவர். 'மிஸ் கல்கத்தா' போட்டியில் மூன்று முறை முதலிடத்தில் வந்திருக்கிறார்.

ராதாரவி, விஜயகுமார், கவுண்டமணி, செந்தில் சுஜாதா, சந்திரசேகர் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: இளையராஜா, பாடல்கள்: வாலி, திரைக்கதை, வசனம், இயக்கம், கோகுல கிருஷ்ணா.




## காந்தீயவாதியாக ரஜினி

தெலுங்கில் ரஜினி முக்கிய வேடத்தில் நடித்த 'பெத்தராயுடு' 200 நாட்களை தாண்டி வசூல் குவித்தது. அதில் கதாநாயகனாக நடித்தவர் மோகன்பாபு. தயாரிப்பும் அவர்தான். ரஜினியின் நல்ல நண்பர்.

இப்போது மோகன்பாபு தயாரித்து அவரே கதாநாயகனாக நடிக்கும் பாபு எம்.எல்.ஏ படத்திலும் ரஜினிக்கு கௌரவ வேடம்.

கதைப்படி தற்கால அரசியல்வாதியாக நடிக்கிறார் மோகன்பாபு. பிளாஸ்பேக் காட்சியில் வரும் கதையில் காந்தீயகால அரசியல்வாதியாகத் தோன்றுகிறார் ரஜினிகாந்த்.



# கனவுக்குப் பின்னால்



கனவில் யானையைப் பார்ப்பது மிக மிக விசேஷம். எல்லாம் சாதகமான சூழ்நிலை உருவாகும். தேக ஆரோக்கியம் மிகுந்து காணப்படும். எதிர்கால நன்மை கருதி பெரிய மனிதர்களுடன் பழகும் வாய்ப்பு ஏற்படும். மொத்தத்தில் அதிஷ்டகரமான சூழ்நிலை உருவாகும்.

புனித யாத்திரை அல்லது கோவிலுக்குப் போவது போல் கனவு கண்டால், பெற்றோருடன் சுமுகமான உறவும், நல்லிணக்கமும் ஏற்படும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். நண்பர்கள், உறவினர்களுடன் செல்வதுபோல் கனவு கண்டால் நீங்கள் அன்பு செலுத்தும் நபர், உங்கள் நம்பிக்கைக்கு உரியவராக நடந்துகொள்வார்.

காரிலோ, பஸ்ஸிலோ ஏதேனும் ஒரு வாகனத்தில், மற்றவர் ஓட்ட நீங்கள் பயணம் மேற்கொள்வது போல் பார்த்தால் எதிர்பார்க்கும் இனங்கள், விஷயங்கள் அனுகூலமாகும்.

நீங்கள் கார் அல்லது ஏதேனும் ஒரு வாகனம் ஓட்டுவது போல் பார்த்தால் தேவையற்ற செலவுகளும், நஷ்டங்களும் வரும் சூழ்நிலை உருவாகும். கவனமாக இருப்பது நல்லது.

கனவில் வாத்து குளத்தில் நீந்துவது போல் பார்த்தால் வியாபாரத்தில் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் ஏற்படும். ஜோடி வாத்துக்கள் நீந்துவது போல் பார்த்தால் கூடிய விரைவில் திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சிகள் நடக்கும்.

# அழகு நடை பழக ஆசையா?



பெண்களின் நடை அழகை வர்ணிக்காத கவிஞனே இல்லை என்று சொல்லும் அளவிற்கு பெண்களின் நடை எப்படி இருக்க வேண்டும் என்பதை ஒவ்வொரு பெண்களும் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ளவேண்டும். பெண்களின் நடையைப் பற்றி திரைப்படத்தின் வாயிலாகக் கவிஞர்கள் புகழ்ந்து வர்ணித்து வந்துள்ளார்கள். உதாரணமாக,

'மெல்ல நட மெல்ல நட மேனி என்னாகும்.....'

'நடையா இது நடையா நாடகம் அன்றோ நடக்குது....'

'அன்னம் போல நடை நடந்து வந்து....'

இவ்வாறெல்லாம் பெண்களின் நடையைப் பார்த்து கவிஞர்கள் கிறங்கியுள்ளார்கள். இப்படி இருக்க சிறப்பாக நடை பயில என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி நாம் இப்போது பார்ப்போம்:

1. பெண்கள் நடக்கும் போது ஒரேயடியாக முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு நடக்கக் கூடாது. அப்படி நடந்தால் கன்னங்களில் தேவைக்கு அதிகமாக சதைப் பற்று ஏற்பட்டு முகத்தின் அழகு குறைந்துவிடும். குனிந்து நடக்கக் கூடாது என்பதற்காக முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டு நடக்க வேண்டும் என்பதில்லை.
2. பெண்கள் தெருவில் நடந்து செல்லும்போது மெதுவாக அடி யெடுத்து வைத்து, நளினமாக நடக்க வேண்டும். ஆண்கள் மாதிரி முரட்டுத்தனமாக அடியெடுத்து வைத்து நடக்கக் கூடாது.
3. பெண்கள் நடந்து செல்லும் போது முதுகை வளைத்துக் கூன் போட்டு நடக்கக் கூடாது. நிமிர்ந்து நடக்க வேண்டும். நடக்கும்போது வயிற்றை முன் தள்ளக்கூடாது. நிற்கும் போது வளைவு, நெளிவு இல்லாமல் நிமிர்ந்து நிற்க வேண்டும். இப்படியெல்லாம் நடக்காவிட்டால் இளமையிலேயே முதுமைத் தோற்றம் வந்து விடும்.
4. அழகான நடைபயில்வதற்கு ஒரு சுவையான பயிற்சி- உங்கள் வீட்டு அறைக்குள் உங்கள் தலை மீது நாலைந்து

## லேடீஸ் ஸ்பெஷல்


புத்தகங்களை வைத்துக் கொண்டு, அவை கீழே விழாதபடி நடந்து பழகுங்கள். இப்படி நடந்து பயிற்சி பெற்றால் நடையிலே ஒரு வித அழகும், கவர்ச்சியும் தானாக வந்துவிடும். தெருவிலே நடக்கும் போது புத்தகம் தலையிலே இருப்பதாக எண்ணிக் கொள்ளுங்கள். நடையிலே தானாக அழகு வந்துவிடும் பாருங்களேன்.

5. பெண்கள் அடி எடுத்து வைக்கும் போது பாதங்களைச் சீராக வைக்க வேண்டும். தரையை உதைப்பது போல பாதங்களை வைக்கக் கூடாது. பாதங்களைக் கண்டபடி வளைத்து நடக்கக் கூடாது.
6. பெண்கள் நடக்கும் போது உடல் முழுவதும் குலுங்கக் கூடாது. இடை மட்டும் கவர்ச்சிகரமாக அசைய வேண்டும்.
7. பெண்கள் நடக்கும்போது முதுகை வளைத்துக்கொண்டு நடக்கக்கூடாது. அதற்காக மார்பை நிமிர்த்திக் கொண்டும் நடக்கக் கூடாது. இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு நளின நிலையைக் கையாள வேண்டும்.

# மிக்ஸியை பயன்படுத்துவது எப்படி?

"வாங்கி ஒரு வருஷம் கூட ஆகவில்லை. மிக்ஸி பழுதாகிப் போய்விட்டது. விருந்தினர் வந்த நேரம் பார்த்து இந்த மிக்ஸி காலை வாரிவிட்டதே." என்று சில வீடுகளில் பெண்கள் புலம்புவதைப் பார்க்கிறோம். எந்த ஒரு தரமான மிக்ஸியையும் உபயோகிக்கும் விதத்தில் உபயோகித்தால் எளிதில் கெடாது, நீண்ட நாள் உழைக்கும். மிக்ஸியின் பாதுகாப்புக்கு சில விஷயங்களை மனதில் கொள்ள வேண்டும்.

* மிக்ஸியின் இணைப்பு வயர் சூடான பொருளுக்கு அருகில் இருக்கக் கூடாது.
* நேராக சூரிய வெளிச்சம் தாக்கும் இடத்தில் மிக்ஸியை வைக்கக்கூடாது.
* கையாளுவதற்கு வசதியான உயரம் உள்ள இடத்தில் மிக்ஸியை வைக்க வேண்டும்.
* மெல்லிய பிளாஸ்டிக் விரிப்பு, துணி விரிப்பு ஆகியவற்றின்மீது மிக்ஸியை ஒரு போதும் வைக்கக் கூடாது. சமமான ப்ரப்பின் மீது வைக்க வேண்டும்.
* மிக்ஸியின் மோட்டார் பகுதியை எக்காரணம் கொண்டும் தண்ணீரிலோ, மற்ற திரவங்களிலோ நனைக்கக்கூடாது. நனைத்தால் மின்சாரத்தால் அபாயம் ஏற்படும்.
* மிக்ஸியைக் கழுவி சுத்தம் செய்யும் போது கவனம் தேவை. கூரான பிளேட் பகுதியைத் தொட வேண்டாம். மிக்ஸியை ஓடவிட்டு விட்டு வேறு வேலை செய்யப் போக வேண்டாம். வினாடிக் கணக்கில் நிறுத்தி நிறுத்திப் போடுவதே நல்லது.
* சில மிக்ஸிகளில் உலர்ந்த பொருட்களையும், நனைத்த பொருட்களையும் அரைக்கக் கூடிய வசதி உண்டு. முதலில் உலர்ந்த பொருட்களை அரைத்து எடுப்பது நல்லது. அடுத்து தண்ணீர் விட்டு அரைக்கும் பொருட்களை அரைக்கலாம்.
* குவளையின் அரைப்பாகம் அளவிற்கு மட்டுமே அரைக்கவேண்டியவைகளைப் போட்டு அரைக்க வேண்டும். குவளைக்குள் அதிக பொருட்களைப் போடக் கூடாது.



* அரைக்க ஆரம்பிக்கும் போது குறைந்த வேகத்தில் தொடங்கி 2,3 என்று சிறிது சிறிதாக வேகத்தைக் கூட்டுவதே நல்லது.
* அரைக்க வேண்டிய பொருட்களை- மிகக் குறைவான அளவாக இருந்தால் கூட- மூடி இல்லாமல் அரைப்பது ஆபத்தானது.
* வீட்டில் பூச்சி மருந்து அடிக்கும் போது மிக்ஸியில் படாதவாறு மூடி வைக்கவும். பொதுவாகவே உபயோகித்து முடிந்ததும் மிக்ஸியை மூடிவைப்பதே நல்லது.
* உபயோகித்ததும் மிக்ஸியை உடனுக்குடன் கழுவி வைப்பது அவசியம்.
* எல்லாவற்றையும் விட முக்கியமானது- மிக்ஸி வாங்கும் போது. தரமானதுதானா என்று பார்த்து வாங்க வேண்டும்.

# இலங்கை அணியின் பயிற்சியாளர் ஓர் அவுஸ்திரேலிய குடிமகன்

உலகக் கோப்பைக்கான போட்டிகளில் இலங்கை அணியை எதிர்த்து இலங்கையிலேயே ஆடவேண்டிய நிலை அவுஸ்திரேலியாவுக்கு இருந்தது. ஆனால் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி அவுஸ்திரேலிய அணியினர் இலங்கைக்குவர மறுத்து விட்டனர். இத்தகைய காரணங்களினால் இவ்விருநாட்டு அணிகளுக்குமிடையில் மேலும் கசப்புணர்வுகள் வளர்ந்தன.

அரையிறுதிப் போட்டிகளில் வெற்றியீட்டிய அவுஸ்திரேலியாவும் இலங்கையும் லாகூரில் நேரடியாக மோதியே ஆக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இலங்கை வெற்றி வாகை சூடியமையினால் அவுஸ்திரேலியா அணியினர் வெட்கித் தலைகுனிய வேண்டியதாகிவிட்டது.

இத்தனைக்கும் இலங்கை அணி இன்று மகத்தான சாதனை படைத்து உலகத்திலேயே முதலாவது இடத்தைப் பெற்றுக் கொண்டமைக்குப் பின்னணியில் ஓர் அவுஸ்திரேலியக் குடிமகனே இருந்திருக்கிறார். டேவ்னெல் வாட்மோர் என்ற அவர் அவுஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் வீரர். பல டெஸ்ட் போட்டிகளில் விளையாடியவர். இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக 1995 ஜூன் முதல் பணிபுரிந்து வருகிறார். அவருடைய வழி நடத்தலில்தான் இலங்கை அணி, அண்மையில் பாகிஸ்தானில் வெற்றிகரமான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தது; சார்ஜாவில் நடைபெற்ற போட்டிகளிலும் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றது.



டேவ்னெல் வாட்மோர் இலங்கைப் பெற்றாருக்கு கொழும்பில் பிறந்தவர். தற்போது அவருக்கு 42 வயதாகிறது. தனது எட்டாவது வயதில் இவர் தனது பெற்றாருடன் அவுஸ்திரேலியாவிலுள்ள விக்டோரியா மாநிலத்தில் குடியேறிவிட்டார்.

இவர் 1988-89 களில் முதல்தரமான கிரிக்கெட் வீரராகவிருந்து ஓய்வு பெற்றார். பின்னர் விக்டோரியன் கிரிக்கெட் சங்கத்தின் பயிற்சியாளருக்கான மாநில இயக்குநராக 1991 வரை பணிபுரிந்தார். இதன் பின்னர், மெல்போர்னிலுள்ள அவுஸ்திரேலிய விளையாட்டுத்துறை நிறுவனத்தின் தலைமைப் பயிற்சியாளராகப் பதவி பெற்றார்.

இந்தியாவில் 1979ல் நடைபெற்ற புறூடென்ஷல் கோப்பைக்கான போட்டியில் கிம் ஹியூக்ஸ் தலைமையில் விளையாடினார். அதே வருடத்தில் 7 டெஸ்ட் போட்டிகளில் ஆடியிருக்கிறார். இருப்பினும் விக்டோரியன் அணியில்தான் இவருடைய ஆட்டங்கள் சிறப்புற்றன. மொத்தம் 4000 முதல் தர ஓட்டங்களைப் பெற்றுள்ளார். உதவி கப்டனாகவும் இருந்திருக்கிறார்.

டேவ்னெல் இலங்கை அணியின் பயிற்சியாளராக 1997 மே 31 வரை கடமைபார்க்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய வீரரிடமே கற்றுக் கொண்டு அவுஸ்திரேலியாவையே வெற்றி கொண்ட இலங்கை அணி கில்லாடி தானே!

# சிங்கப்பூரில் குட்டித் திருவிழா

## ஏசியாக் கிண்ணமும் கௌரவப் போரும்

கிரிக்கெட் உலகக்கிண்ணத் திருவிழா முடிந்த சூடு தணிவதற்கிடையில் மற்றொரு மினித் திருவிழா. ஏப்ரல் முதலாம் திகதி முதல் சிங்கப்பூரில் ஏசியா கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பம்.

கல்கத்தாவில் இலங்கையிடம் படுதோல்வி கண்ட இந்திய அணிக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம். இலங்கை, பாகிஸ்தான் அணிகளை தோற்கடித்து ஏசியா கிண்ணத்தை இந்தியா கைப்பற்றினால் வெட்கத்தில் பாதி குறைந்த மாதிரித்தான்.

ஏப்ரல் முதலாம்திகதி இலங்கை அணி இந்தியாவைச் சந்திக்கிறது. உலகக் கிண்ணத்தை வென்ற சூட்டோடும், வரவேற்பு, வாழ்த்துக்கள், ஏகப்பட்ட பரிசுகள் என்று உற்சாகமயமாகவுள்ள இலங்கை அணி தனது கௌரவத்தை மேலும் உறுதிப் படுத்தும் ஆவேசத்தோடு மோதும்.

அதேபோல இந்தியாவும், பாகிஸ்தானும் மோதும் களமும் சூடுபறக்கத்தான் செய்யும்.

இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இலங்கை அணியோடுபோட்டி இருந்தாலும் கூட அதனுடன் ஏற்படும் வெற்றி தோல்விகள் ஒரு கௌரவப்பிரச்சனையல்ல.



ஆனால், இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி கௌரவ யுத்தம்தான்.

இந்தியாவிடம் தோல்வி கண்டதால் தமது நாட்டு அணிமீது பாகிஸ்தான் இரசிகர்கள் படு கோபத்தில் இருக்கிறார்கள். மீண்டும் ஒரு முறை பாகிஸ்தான் தோல்வி கண்டால் அவ்வளவுதான். போட்டி முடிந்து திரும்பிச் செல்லும் பாகிஸ்தான் அணி வீரர்களுக்கு கடும் பாதுகாப்புத்தான் கொடுக்க வேண்டியிருக்கும்.

இந்திய அணிக்கும் அதே நிலமைதான். உலகக் கிண்ணத்தை கைப்பற்றாவிட்டால் கூட பாகிஸ்தானை தோற்கடித்த ஒன்றே ஒன்றுக்காகத்தான் இந்திய இரசிகர்கள் தமது அணியை மன்னித்தார்கள்.

சிங்கப்பூரில் பாகிஸ்தானிடம் இந்தியா அடி வாங்கினால் உள்ளதும் போச்சுடா கதைதான்.

இந்திய இரசிகர்களின் உற்சாகமான ஆதரவு காரணமாகவும், தீடீர் உத்வேகம் காரணமாகவும் பாகிஸ்தானை பெங்களூரில் தோல்விகாணச் செய்தது இந்தியா. பின்னர் இடம்பெற்ற போட்டியில் அந்த உற்சாகம் இந்திய அணியிடம் காணப்படவில்லை.

இந்நிலையில் பாகிஸ்தான் அணியை சிங்கப்பூரில் சந்திக்கும்போது இந்தியா சற்றுத் தளர்ந்தாலும் போதும், பாகிஸ்தான் புகுந்து விளையாடிவிடும். எனவே-இந்திய அணி பாகிஸ்தான் அணியை வெல்லுமா என்பது சந்தேகம்தான்.

அதேவேலை தனது இரண்டு போட்டியாளர்களையும் அதிரடியால் வீழ்த்திவிட்டு ஏசியா கிண்ணத்தை கைப்பற்றினால்தான் இலங்கை அணிக்கும் பெருமை.

ஆனால், கிரிக்கெட்டைப் பொறுத்தவரை முன்கூட்டியே கணிப்புக்கள் சொல்வது கடினம். எனினும் வெற்றி தோல்விக்கு அப்பால் இலங்கை அணியின் விளையாட்டுத் தரம் நீடிக்கும் என்பது மட்டும் உறுதி.

ஏனெனில், இலங்கை அணிக்கு கிடைத்துள்ள வெற்றிகள் அதிஷ்டத்தாலோ, தற்செயலாகவோ கிடைத்தவையல்ல. வியக்கும்படியான உறுதியான ஆட்டத்தால் கிடைத்தவை.

## தினமுரசு-அருள் ஜுவல்ஸ் இணைந்து நடத்திய தங்கமாலை பரிசுப் போட்டி

முதல் பரிசாக தங்க நெக்லஸ் பெறும் அதிஷ்டசாலியின் பெயர் விபரம் சென்றவாரம் வெளியாகியிருந்தது.

ஆறுதல் பரிசுகள் பெறும் 50 அதிஷ்டசாலிகளில் முதல் பத்துப் பேர் இவர்கள்; ஏனையோர் விபரம் அடுத்தவாரம்.

1. திருமதி. ஏ. சஹினாஸ் 'சுதார் வில்லா' 56, 3ம் குறுக்குத் தெரு, புத்தளம்.
2. செல்வி. சி. அருளானந்தம் 634/1, ஸ்டேசன் வீதி, ஹுனுப்பிட்டிய, வத்தளை.
3. செல்வி. ரேணுஸ்ரீ நடராஜு 32/1, லொமிட்ஸ் அவனியூ, மட்டக்களப்பு.
4. எம்.எஸ். மஸாயா 473,இனிகல,கட்டுகஸ்தோட்டை.
5. தமிழ்ச்செல்வி யோகராஜா 22/1, உள்துறைமுக வீதி, திருகோணமலை.
6. செல்வி.கே. அழகராஜா 307, பிரதான வீதி,மாத்தளை.
7. கே. விஜி 127/17, ஜெயசிங்க றோட், கிருலப்பனை,கொழும்பு 06
8. ஈ.ஷாமிலா தனுஜா பெர்னாட்டோ இல. 74, லூயிஸ் பிளேஸ், நீர்கொழும்பு.
9. ஆர். நளாமினி தேவி. 60/14, பஹிராவகந்த பாத்,கண்டி.
10. திருமதி. ரதி ஜெயரட்ணம் 172, டிம்புள்ள ரோட், .:.புருட் ஹில்-ஹட்டன்.

## பயோடேட்டா

| | |
|---|---|
| பெயர்:- | சனத் ஜேயசூரியா |
| பிறந்தது:- | 1969 ஜுன் 30. |
| பிறந்தமண்:- | கொட்டுவகொட, மாத்தறை. |
| தொழில்:- | கிரிக்கெட். |
| தகுதி:- | சகல துறை ஆட்டக்காரர். |
| அசத்தல்கள்:- | நியூஸிலாந்துக்கு எதிராக 140 ரன். இங்கிலாந்துக்கு எதிராக பந்துவீச்சில் 29 ரன்கள் மட்டும் கொடுத்து 6 விக்கெட்டுக்களை சாய்த்தது. |
| சர்வதேச ஒருநாள் போட்டிகள்:- | 104. இன்னிஸ்:- 98 |
| எடுத்துள்ள மொத்த ஓட்டங்கள்:- | 1997 |
| அரைச்சதம்:- | 11 |
| சதம்:- | 1 |
| சராசரி:- | 20.80 |
| வீழ்த்திய விக்கெட்டுக்கள்:- | 78 |
| காட்ச்:- | 42 |
| சமீபத்திய சாதனை:- | 96ம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரில் சிறப்பு ஆட்டக்காரர். |
| 96 உலகக் கிண்ணப்போட்டியில் அசத்திய ரன்குவிப்பு:- | இந்தியாவுக்கு எதிராக 72 பந்தில் 79 ரன்கள். இங்கிலாந்துக்கு எதிராக 44 பந்தில் 82 ரன்கள். |



## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? சிலாபம் வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

செல்வி. டி. விமலேஸ்வரி.
87, கெனல் வீதி, வட்டக்களி, சிலாபம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம். அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?! இவ்வாரம் பரிசுக்குரியவர் ஏப்ரல் 15ம் திகதிக்கு பின்னர் முரசு அலுவலகத்தில் பகல் 12 மணி முதல் 4 மணிக்கு முன்னர் வந்து (ஞாயிறு, புதன் தவிர) பட்டுச்சேலையை பெற்றுச் செல்லலாம்.

முகவரி: இல 5, காலிந்த பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு-06.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** H

பெயர்:..........................
முகவரி:..........................
..........................
கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 06-04-1996
அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## வெண்புறாவுக்கோர் விண்ணப்பம்!

அரை வயிற்றைக்கூட
நிரப்ப முடியாத
சந்தர்ப்பங்களில் வாழும்-எம்
சந்தர்ப்பங்களை
இல்லாமலொழி!
***
இருளாகக் கழியும்
ஒவ்வொரு நாழிகையையும்
கணக்கிட்டுப் பார்!
***
எமது வாழ்வில்
சந்தோசச் சூரியன்
தொலைந்து போய்
ரொம்பக் காலம்!
***
நிம்மதிக் காற்றை
சுவாசித்து
அதிக நாட்கள்!
***
வெண்புறாவே!
விரைந்து வா!
துணிந்து நில்!!
உன்-அகக் கண்ணைத்திற!
***
எம்-துயர்துடைக்க
உன்-
பா(நே)சக் கரத்தை
எம்முன் நீட்டு!
புண்பட்ட மனங்களுக்கு
ஒத்தடம் கொடு!
***
சமாதானக் கொடி தூக்கி
யுத்தத்துக்கு சாவுமணி கட்டு!
***
ஒலிவ் இலைகளை
உன்னலகால் எடுத்து
தேசமெங்கும் பரப்பிவிடு!
***
அப்போ...
இருள் சூழ்ந்த-எம்
வாழ்வில் புதியதொரு
இன்ப நட்சத்திரம்
உதயமாகி ஒளி கொடுக்கும்!
***
தொலைந்து போன
உறவுகளெல்லாம்
உயிர் கொடுக்கும்!
***
வாழ்க்கை வளம்பெற்று
வற்றிய வயிறுகளெல்லாம்
ஏப்பமிடும்!
***
தேசமெல்லாம்
சந்தோச வெள்ளத்தால்
நிரம்பி வழியும்!
***
நலிவுற்ற-நம் நாட்டில்
அமைதி நிலா உலாவரும்!
***
ஆகாயத்தில் அரண்
அமைத்துக் கொண்டிருக்கும்
வெண்புறாவே, விரைந்து வா!
***
சடலங்களால்
மயானமாகக் கிடக்கும்
புவியின் கறையகற்ற
தரையிறங்கு!
***
மனித மனங்களில்
மனிதம் என்ற
முத்திரையை ஒட்டு!
***
வாழ்க்கை வழிதவறி
தெருவோரம், தேங்கி நிற்கும்
அகதிகளின் கண்ணீர் துடை!
***
ஆயுதயுகத்தை
அழித்தொழித்து
அகிம்சையை நிலைநாட்டி
நீதி இதுவென்று
நிரூபித்துக் காட்டு!
***
சொத்திழந்து சுகமிழந்து
உயிரிழந்து உறவிழந்து
கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்கும்
கைங்கரியத்தை-உன்
வரவால் உடைத்துப்போடு!

**செல்வி. பாதிமாமுஹம்மத்-**
**புதிய காத்தான்குடி-03.**

## தேன் கிண்ணம்

### விட்டிலும் ☆ தீபமும்

கூட்டினுள்
குடியிருந்த குயில்
காணாமற் போகாதென்று
பேசாமலிருந்தாயா?
-0-
குயிலுக்குச்
சிறகுகள் இருந்தன;
அதன் வழியே
நீண்ட தூரம்
பறந்து போய் வரும்
கனவுகளும் இருந்தன!
-0-
பூர்வீகம்
கூடான போதும்-என்
பாடலின். பயணம்
மலைச் சிகரங்களுக்கு
அப்பாலுள்ள
குடியிருப்புகள் வரை
குதித்தோடியது!
-0-
எதிரும் புதிருமாய்
இருவரும் அகப்படும்
கணப் பொழுதின்
அதிக பட்ச அவஸ்தையில்
தரை பார்த்து நான் போக
தலை திருப்பி நீ மறைய
கடைக்கண் பார்வை கூடக்
கையொப்பமிடாமலே
காதலை உன்னுள்ளே
கட்டியெழுப்பியிருந்தாய்!
-0-
உரைக்கப் படாமல்
உன்னுள்ளே
புதைக்கப்பட்டிருந்தது
ஒரு தலைக் காதல்;
நான் குற்றவாளியல்ல!
-0-
இதயக் கோவிலில்
பற்றவைத்துப்
பூஜை செய்து வந்த
காதல் தீபத்திற்கு
உன் உடல்கூடு இன்று
காணிக்கையாகிறதா?
-0-
உன்னுள்ளே
ஆசைகள்
ஓசைப்படாமல்
ஓய்ந்து விடத் துடித்தாலும்,
விழிநீரின்
விசாரணைதான்
உனைத் தடுமாறவைத்ததா?
-0-
உனக்காகத் தேவதைகள்
வரிசையில் நின்று
வழிபார்த்துக் கிடக்க,
உள்ளம்
ஊனமானவளிடம்
என்ன வரத்தை
எதிர்பார்த்துத்
தவம்புரிகிறாய்?
-0-
என் வாழ்வில்
புயல்,
பூகம்பம்,
பிரளயம் யாவும் ஒன்றாக
வந்து போன பின்
உனக்காக ஒரு
நந்தவனத்தையா
எனக்குள்ளே தேடுகிறாய்?
-0-

**செல்வி. பஹீமா ஜஹான்-**
**மெல்சிரிபுர.**

# நடிகைகளான அழகிகள்

**அழகிப் போட்டிகளில் குதித்து பட்டம் வென்றபின்னர் சினிமா உலகை நோக்கி கடைக்கண் பார்வை வீசியவர்கள் பலர். 'மிஸ் இந்தியா' பட்டத்தோடு சினிமா உலகில் வலம் வந்தவர்களில் ஒரு சிலர்தான் தாக்குப் பிடித்தார்கள். அவர்களில் முதன்மையானவர் ஜீனத் அம்மன். கவர்ச்சியால் ஒரு கால கட்டத்தில் புயல் கிளப்பியவர் அவர். தற்போது ஜூகி சாவ்லாவும் முன்னணி நடிகையாக இருக்கிறார். உலக அழகிகள் சுஷ்மிதாவும், ஐஸ்வர்யாராயும் இப்போதுதான் பணம் கொட்டும் சினிமா உலகில் காலடி எடுத்துவைத்திருக்கிறார்கள். சுஷ்மிதாவைவிட ஐஸ்வர்யா நீடிப்பார் என்பது நமது அபிப்பிராயம். (குறித்துவையுங்கள்)**





ஐஸ்வர்யாராய்-ஆனந்தம் நிலைக்குமா?


சுஸ்மிதா சென்-நிலைப்பது சந்தேகம்


சங்கீதா பிஜலனி-
இந்தியில் கலக்க ஆசை;
அசாரின் காதலி.


சோனுவாலியா-அடி ராக்கம்மா கையைத் தட்டு


ஜீனத் அம்மன்-கவர்ச்சிப் புயல்

## ஏப்ரல் 1

காதோரம் ஷெல்
கீத மிசைக்கும்
"பிரச்சனையா? இல்லையே!"
அப்போது அறிக்"கைவிடும்"
தலைவர்களை நம்புவோம்.
**
எம்மினம் போல் சிதறிய:
நெல் பொறுக்குவோம் வயலில்.
கப்பலுக்காய் காத்திருப்போம்
"பட்டினியா? இல்லையே!"
அப்போது
அறிக்-"கைவிடும்"
தலைவர்களை நம்புவோம்.
**
கனவுகளோடு நித்திரைக்கு
போனவனை (ளை)
அள்ளி எடுத்து
புதைப்போம்.
"இழப்பா? எமக்கா?
இல்லையே!"
அறிக்-"கைவிடும்"
தலைவர்களை நம்புவோம்.
**
"சேர்ந்திருப்போம்"
என்று சொல்லி அடுத்தநாளே
பஸ்சில் போகையில்
சுடப்பட்டு இறக்கையில்
"முன்பு அப்படி இல்லை!"
என்பவரை நம்புவோம்
**
"கவுப்போம்,
கவுப்போம்" என்றுசொல்லி
கணக்கில்லா பணம்குவிக்கும்
தலைவர்களை நம்புவோம்
**
உலகெங்கும்
முட்டாள் தினம்-
ஏப்ரல் 1ல்;
தமிழனுக்கு எப்போதும்....!

**சுபா வரன்- கண்டி.**

## காதல் மீதங்கள்

நான்
காதலில்
காயப்பட்டவன்;
இப்போது என்னுள்
மீதமிருப்பவை
களவாடப்பட்ட
கனவுகளின்
நிகழ்கால
நிஜங்கள்!
❣
விடிந்தும்
இருக்கும்
விடியல் போல,
காதல்
முடிந்தும்
இருக்கும்
அவள் நினைவுகள்!
❣
மழை தீர்ந்தும்
தீராதிருக்கும்
மண் வாசனை
போல
அவளது
பெண் வாசனை!
❣
சுவைத்தும் நாவிலே
மீதமிருக்கும்
இனிப்பு போல
நான் வீழ்ந்தும் என்னுள்
இருக்கும் அவள்
சிரிப்புக்கள்.....!
❣
மடிக்கப்பட்ட
மடல்கள்....!
❣
புதையல் போல்
பதுக்கப்பட்ட
புகைப்படங்கள்....!
❣
இதய
சகாராவில்
சாகாமல் இருக்கும்
சந்தோஷ
முடிச்சுக்கள்.....!
❣
நான்
ஆயிரம் பேசினால்
ஒன்று பேசி
வென்று விடும்
அவள் சாமர்த்தியம்....!
❣
அவள்
இதயச் சிலுவையில்
நான்
நோகாமல்
அறையப்பட்டு
இரக்கமில்லாமல்
எறியப்பட்ட
எரிச்சல்கள்!

**எம். சுபைர்- கொழும்பு-12**

## "பயோடேட்டா"

**முழுப்பெயர்...**
முகவரி தொலைந்தவன்...!
**முகவரி-**
காதலித்தவளிடம்.....!
**தொழில்-**
காதலின் நினைவில்
எழுதுவது.....!
**அனுபவம்-**
காதலில் தோல்வியுற்றது...!
**மறக்க முடியாதது-**
கதலித்தவளே மறந்தது...!

**ஆர். சாந்தசீலன்,**
**பொத்துவில்.**

## பனித்துளி.... பனித்துளி....!

விடியல் திருவிழாவிற்கு
திருஷ்டி கழிக்க
வானம் தெளித்த
பன்னீர்!
*
இருட்டில் காய்ந்ததில்
நிலாவுக்கு நீரிழிவு..!
*
வானமணிந்த
இருட்கண்ணாடி
உடைந்ததில் தெறித்த
கண்ணாடித்துண்டுகள்...!
*
நட்சத்திரங்களை
வெளுத்துக்கட்டிய
வெள்ளி,
வெளித்தள்ளிய
வியர்வைத்துளிகள்!
*
"கமம்"களுக்கு மட்டும்
இது-
கானல் நீர்!
*
மலர்களை
கிறங்கடிக்கும்
மதுபானம்!

**பாணகமுவ-எஸ்-முஸ்தாக்,**
**குருநாகல்.**

## லயன் கள்

இலங்கைத் தீவின்
மத்தியில் திகழும்
தொழிலாளர்களின்
தாஜ்மஹால்கள்!
*
உயிர் உடல்கள்
உறங்கும்
நீண்ட....
கல்லறைகள்!
*
பத்தடி சதுரத்தில்
பத்துப் பேர்
படுத்துறங்கும்
பாமர மாளிகைகள்!
**
தேர்தல் காலங்களில்
தலைவர்களின்
நினைவுக்குவரும்
நினைவாலயங்கள்!
**
மலையகத்தின்
மனித வதை...
முகாம்கள்!
**
ஒன்றரை நூற்றாண்டாய்...
இதுதான் "வீடெ"ன்று
எண்ணி வாழும்
மலைமாந்தரின்
"மனையகம்"-ஆம்
லயம்!

**சோ. ஸ்ரீதரன், பொகவந்தலாவை.**

## காதல்

உலக
அதிசயங்களில்
ஒன்று.....
♥♥
விழிக்குள்
தடுக்கி
விழுந்து
இதயத்துள்
முளைத்து
வரும்
விருட்சம்!
♥♥
உணர்வுகளின்
இறக்கை.
உள்ளத்திற்கு
சக்கரம்.
வார்த்தைக்கோ
வர்ணிக்க
முடியாத
ஸ்வரம்
♥♥
நல்ல
இதயங்களில்
பூத்துவிட்டால்
நந்தவனம்!
♥♥
சந்தேகக்
காரர்களிடம்
பூத்து விட்டால்
சாபக் கேடு!
♥♥
முடிவில்லா
தொடர்கதை;
முறித்துப்
போட
முடியாத
வளர்பிறை!

**செல்வி. சுப்ரமணியம்**
**வாணிஸ்வரி,**
**அப்பர் கலஹா**

## இந்த வாரம் உங்கள் பலன்

**( 31.03.96 முதல் 06.04.96 வரை)**

**சோதிட மாமணி 'தில்லை'**

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | காலை | 7 மணி |
| **திங்கள்**- பெரியோர் பகை, மனக்கலக்ம். | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- துயர் நீங்கும், காரியானுகூலம். | மு.ப. | 9 மணி |
| **புதன்**- புதிய முயற்சி, பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | காலை | 7 மணி |
| **வெள்ளி**- வீண் கலக்கம், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| **சனி**- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் | 12 மணி |
| **திங்கள்**- பயனுள்ள செயல், உறவினர் உதவி. | காலை | 7 மணி |
| **செவ்வாய்**- புதிய முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. | 1 மணி |
| **புதன்**- வீண் குறை கேட்டல், பிரயாண மிகுதி. | காலை | 6 மணி |
| **வியாழன்**-தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- தொழிலில் பிரச்சனை, மனக்கலக்கம். | பி.ப. | 2 மணி |
| **சனி**- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | காலை | 6 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழிலில் உயர்ச்சி, பிரயாண மிகுதி. | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- உறவினர் உதவி, பணவரவு. | காலை | 6 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் சகவாசம், கௌரவம். | பி.ப. | 1 மணி |
| **புதன்**- வீண் குறை கேட்டல், மனக்கலக்கம். | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- காரிய சித்தி, பெரியோர் உதவி. | காலை | 7 மணி |
| **சனி**- அந்நியர் பகை, பொருள் விரயம். | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1**

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- இனசன நன்மை, மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- துயர் அதிகம், பொருட் செலவு. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- வீண் மனஸ்தாபம், உயர்ந்த நிலை. | காலை | 7 மணி |
| **புதன்**- பிரயாண மிகுதி, அந்நியர் சகவாசம். | பகல் | 12 மணி |
| **வியாழன்**- வீண் கலக்கம், பொருள் செலவு. | மு.ப. | 9 மணி |
| **வெள்ளி**- இனசனப் பகை, கௌரவக் கேடு. | மு.ப. | 10 மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, பணவரவு. | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7**

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| **திங்கள்**- காரிய சித்தி, பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| **செவ்வாய்**- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | மு.ப. | 9 மணி |
| **புதன்**- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் | 12 மணி |
| **வியாழன்**- பொருள் நஷ்டம், மனப் பயம். | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- வீண் முயற்சி, அற்ப பலன். | காலை | 7 மணி |
| **சனி**- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-5**

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மீனம் | - சூரியன், புதன், செவ்வாய், கேது. |
| மேடம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| கும்பம் | - சனி. |

★ சந்திரன்- சிம்மம், கன்னி, துலாம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் உதவி, பணவரவு. | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- மன மகிழ்ச்சி, காரிய சித்தி. | மு.ப. | 9 மணி |
| **செவ்வாய்**- துயர் நீங்கும், வெளியிடப் பயணம். | பகல் | 12 மணி |
| **புதன்**- பிரயாண மிகுதி, பணச் செலவு. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- உறவினர் பகை, மனக் கலக்கம். | காலை | 7 மணி |
| **வெள்ளி**- பிரயாண மிகுதி, காரிய சித்தி. | மு.ப. | 9 மணி |
| **சனி**- மனக் கலக்கம், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5**

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் பகை, பொருள் வரவுத்தடை. | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- உறவினர் உதவி, காரிய சித்தி. | காலை | 7 மணி |
| **செவ்வாய்**- வீண் குறை கேட்டல், முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| **புதன்** - மனக் கலக்கம், அந்நியர் பகை. | காலை | 8 மணி |
| **வியாழன்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- விண் முயற்சி, பொருட் செலவு. | மு.ப. | 9 மணி |
| **சனி**- தொழில் விருத்தி, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8**

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | மு.ப. | 9 மணி |
| **திங்கள்**- பயனுள்ள செயல், பணவரவு. | பகல் | 12 மணி |
| **செவ்வாய்**- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | காலை | 7 மணி |
| **புதன்**- துயர் நீங்கும், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**-வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- பொருள் செலவு, காரியத்தடை. | மு.ப. | 9 மணி |
| **சனி**- அந்நியர் உதவி, பிரயாண மிகுதி. | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4**

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- முயற்சி பலிதம், பொருள் வரவு. | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- பிரயாண மிகுதி, பணச் செலவு. | காலை | 7 மணி |
| **செவ்வாய்**- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | மு.ப. | 9 மணி |
| **புதன்**- மனக்குறை நீங்கும், பயனுள்ள செயல். | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**-வீண் மனஸ்தாபம், தொழில் கேடு. | காலை | 7 மணி |
| **வெள்ளி**- புதிய முயற்சி, பணச் செலவு | பகல் | 12 மணி |
| **சனி**- பொருள் நஷ்டம், காரியத் தடை. | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-2**

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- தொழில் சிறப்பு, பணச் செலவு. | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 மணி |
| **செவ்வாய்**- பிரயாண மிகுதி, மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| **புதன்**- இனசன நன்மை, முயற்சி பலிதம். | காலை | 8 மணி |
| **வியாழன்**- தொழில் மந்தம், அந்நியர் உதவி. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- உறவினர் பகை, பணக் கஷ்டம். | காலை | 8 மணி |
| **சனி**- தொழில் நஷ்டம், கடன் படல். | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4**

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வீண் கலக்கம், காரியத்தடை. | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- உயர்ந்த நிலை, பொருள் வரவு. | காலை | 6 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் உதவி, மனமகிழச்சி. | காலை | 7 மணி |
| **புதன்**- பிரயாண மிகுதி, பொருட் செலவு. | மு.ப. | 9 மணி |
| **வியாழன்**- புதிய முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- வீண் குறை கேட்டல், அந்நியர் உதவி. | காலை | 7 மணி |
| **சனி**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8**


### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மன மகிழ்ச்சி, காரிய சித்தி. | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை | 7 மணி |
| **செவ்வாய்**- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. | 2 மணி |
| **புதன்**- தொழில் விருத்தி, முயற்சி தடை. | காலை | 6 மணி |
| **வியாழன்**- வீண் குறை கேட்டல், மனக் கலகம். | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- செல்வாக்கு மேன்மை, கௌரவம். | காலை | 7 மணி |
| **சனி**- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**





## எங்கள் பள்ளிக்கூடம்

அன்புத் தம்பி தங்கையர்
ஆசையாகச் சென்றிடும்
இன்பமான ஓரிடம்
எங்கள் பள்ளிக்கூடமே!

ஒன்றுகூடிப் பாடல்கள்
ஒற்றுமையாய்ப் பாடுவர்
கண்ணைப் போல சூழலை
காத்து இன்பங் கொள்ளுவர்!

இனிய காவில் பூக்கள் போல்
இயற்கை அழகில் செல்லுவர்
பணிந்து ஆசான் சொற்படி
பாடந்தன்னைச் சொல்லுவர்!

நாளை உலகின் நாயகர்
நாமே என்று உணருவர்
தோளைக் கொடுக்கும் பள்ளிக்கு
தொடர்ந்து நன்றி கூறுவோம்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

நீதி நூல் பயில்! நுனியளவு செல்!
நூலினைப் பகுத்துணர்! நெற்றி
-சுருக்கிடேல்!
நேர்படப் பேசு! நையப் புடை!
நொந்தது சாகும்! நோற்பது
கைவிடேல்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# உயர்ந்த செயல்



ஒரு தடவை மகாத்மா காந்தியைச் சந்தித்துப் பேச ஒரு ஆங்கிலேயர் அவரிடம் வந்தார்.

அவரை வரவேற்று, அவரது மனம் சந்தோஷப்படும்படி அவரை உபசரித்தார் மகாத்மா காந்தி.

அந்த அங்கிலேயர் சில நாட்கள் அவருடன் தங்கியிருக்க வேண்டும் என்று விரும்பினார். பொதுவாக அவர்கள் ஆடம்பரப்பிரியர்களாகையால் எந்த வேலைக்கும் உதவி செய்ய ஆட்களை வைத்துக் கொள்வார்கள்.

அது போல அந்த ஆங்கிலேயரும், தனது அறையைச் சுத்தம் செய்ய, சாப்பிடும் பாத்திரங்களைச் சுத்தம் செய்ய ஒரு ஆள் வேண்டுமென்று விரும்பினார். உடனே மகாத்மா காந்தியிடம் தன் விருப்பத்தைக் கூறினார். காந்தியும் மறுநாளே ஒரு வேலைக்காரனை ஏற்பாடு செய்வதாக அந்த ஆங்கிலேயரிடம் கூறினார்.

அவரின் விருப்பப்படியே மறுநாளில் இருந்து அவரது அறை நன்கு சுத்தம் செய்யப்பட்டது. அவரது உணவுப் பாத்திரங்களும் நல்ல முறையில் சுத்தம் செய்யப்பட்டன.

"நான் உறங்கி எழுவதற்கு முன்னேயே நீங்கள் அமர்த்திய வேலைக்காரன் என் அறையையும் பாத்திரங்களையும் நல்ல முறையில் சுத்தம்செய்து விடுகிறான்." என்று அந்த வேலைக்காரனைப் பற்றி காந்தியிடம் மிகவும் பெருமையாகச் சொன் னார் அந்த ஆங்கிலேயர்.

ஒரு நாள்......

அந்த ஆங்கிலேயர் மற்ற நாட்களில் எழுந்திருக்கும் வழக்கமான நேரத்திற்கு முன்பாக எழுந்து விட்டார். தனது சமையலறையில் பாத்திரங்கள் சுத்தம் செய்யப்படும் சத்தம் கேட்டு அங்கு சென்று பார்த்தவர், பெரிதும் அதிர்ச்சி அடைந்தார்.

அங்கே மகாத்மா காந்தி அவரின் பாத்திரங்களை மிகவும் சுறுசுறுப்புடன் சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

ஆங்கிலேயர் பெரிதும் பதறிப்போய் வேகமாக உள்ளே போனார்.

"ஐயா! என்ன கொடுமை இது? என் பாத்திரங்களை நீங்கள் சுத்தம் செய்வதா? இந்த இழிவான வேலையை இத்தனை நாள் செய்தது நீங்கள்தானா? கூடாது. கூடவே கூடாது. இந்த வேலையை இனி நீங்கள் செய்ய நான் அனுமதிக்க மாட்டேன்!" என்றார் அந்த ஆங்கிலேயர்.

அவரது பேச்சைக் கேட்ட மகாத்மா காந்தி,

"ஐயா! நீங்கள் என் விருந்தாளி. உங்களது தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டியது என் கடமை. விருந்தினர்களுக்காகச் செய்யும் வேலை எதுவாக இருந்தாலும் அதை இழிவாகக் கருதக்கூடாது. என்னைப் பொறுத்தவரை எந்த வேலையும் எனக்கு இழிவானதல்ல. சுத்தத்தையும், சுகாதாரத்தையும் நான் மிகவும் விரும்புவேன். வேலையில் ஏற்றத்தாழ்வு என்று எதுவுமேயில்லை என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்!" என்று புன்னகை தவழச் சொன்னார் மகாத்மா காந்தி.

இது, அந்த ஆங்கிலேயரின் மனதில் ஒரு உண்மையான நீதியை ஆழமாகப் பதித்து விட்டது. அன்றிலிருந்தே, தன்னுடைய வேலைகள் அனைத்தையும் தானே செய்து கொள்ளப்போவதாக காந்தியிடம் கூறினார் அந்த ஆங்கிலேயர்.

## வாரம் ஒரு நாடு

## மால்டா



**தலைநகர்**– வல்லேட்டா
**பரப்பு**– 316 சதுர கிலோ மீட்டர்
**மக்கள் தொகை**– 400,000
**மொழி**– மோல்டீஸ், ஆங்கிலம்
**எழுத்தறிவு**– 90%
**சமயம்**– கிறிஸ்தவம்
**நாணயம்**– லிரா மோல்டிஜா
**தனி நபர் வருமானம்**– 7000 டொலர்

**அமைவிடம்:**

மத்திய தரைக்கடலில் அமைந்துள்ள மால்டா தீவு, சிசிலியில் இருந்து 59 மைல்களும், ஆபிரிக்கக் கடற்கரையில் இருந்து 180 மைல் தொலைவிலும் உள்ளது.


**வரலாறு:**

1964 இல் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்றது. ஜனநாயகக் குடியரசு நாடு. கூட்டுச் சேராக் கொள்கை தொடர்கிறது.

**பொருளாதாரம்:**

பாறைகள் நிறைந்த இந்நாடு இயற்கை வளமில்லாதது. நெசவுப் பொருட்கள், மிதியடிகள், இறப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் போன்றவற்றை ஏற்றுமதி செய்கிறது. வெங்காயம், உருளைக் கிழங்கு, தக்காளி ஆகியன முக்கிய விளைபொருட்கள், சுற்றுலாத்துறை இந்நாட்டின் முக்கிய தொழிலாகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 06.04.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 135
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 133

பரிசுக்குரியவர்:
செல்வி பி. நித்தியா
ஹேக்கித்த, வத்தளை.

### பாராட்டுக்குரியவர்கள்:


| | |
|---|---|
| அசன் குத்தூஸ். கல்பிட்டி வீதி, பாலாவி,புத்தளம். | எவ். பரீதா. சுமித் புர, கொழும்பு-15 |
| நந்தகுமாரசர்மா கிருத்திகா. பிள்ளையார் கோவில், மாத்தளை. | செல்வன். ப. ருசான். நாமகள் வித்தியாலயம், கல்குடா. |
| எம். எம். முஹம்மது ருமைஸ். புன்னக்குடா வீதி, ஏறாவூர்-03. | சோ. நரேஸ் குமார். உதயபுரம் தமிழ் வித்தியாலயம், பெரியகல்லாறு03. |
| செல்வி. அ. சரண்யா ஏஞ்சல். மட்/ தாளங்குடா-03, ஆரையம்பதி. | செல்வி. துஸ்யந்தி கருப்பையா. அப்புத்தளை தமிழ் மத்திய கல்லூரி, அப்புத்தளை. |
| எம். எஸ். பாத்திமா முபினா. பாத்திமா மத்திய கல்லூரி, புத்தளம். | த. சுலோச்சனா. கல்வலை, மாவத்தகம. |

## கடலில் ஆழம் எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

கடலியல் வல்லுநர்களுக்கு கடலில் வாழும் தாவர, விலங்கின வகைகளைப் பற்றி அறிந்துகொள்ள ஆர்வமுள்ளது போல அதன் ஆழத்தையும் அறிய ஆவலுண்டு. சில இடங்களில் கடல் அதிக ஆழமில்லாவிட்டாலும் பசிபிக் பெருங்கடல் போன்றவைகளில் ஆழம் காண்பது மிகவும் கடினம். ஆழ்கடலில் குளிர் மிகுந்தும் ஒரே இருட்டாகவும் இருப்பதனால் எதுவும் அறிந்து கொள்ள முடிவதில்லை. நீர் மூழ்கிக் கப்பலின் பக்கங்களில் அமைந்துள்ள கண்ணாடி யன்னல்கள் மூலமாக ஒரு சில இடங்களில் கடல் தரையைப் பார்க்கலாம். ஆழ்கடல் கமராக்கள் மூலமாகவும் பார்க்கலாம். ஆனால் கடலியல் வல்லுநர்கள் வெறும் ஆழத்தை மட்டும் அறிய விரும்புவதில்லை. கடலில் மலைகளும் குன்றுகளும் ஆழ்பள்ளத்தாக்குகளும் உள்ளன. இவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

பழங்காலத்தில் ஓர் எடை கட்டிய கயிற்றை ஆழத்தில் விட்டு அளந்தனர். பின்னர் பியானோ கம்பி போன்ற மிக மெல்லிய கம்பியைப் பயன்படுத்தினர்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் எதிரொலிப்பான் (ECHO SOUNDER) எனும் கருவியை விஞ்ஞானிகள், முதன் முதலில் கண்டு பிடித்ததன் விளைவாகக் கடலின் ஆழத்தை வெகு எளிதாகக் கண்டு பிடிக்கிறார்கள். ஒலியை எதிரொலிக்கும் இக் கருவியின் உதவியால் கடல்தரை ஆய்வுகள் வெகுவாக முன்னேறியுள்ளன.



கப்பலில் உள்ள ஒரு கருவியிலிருந்து ஒலிக் குறிப்பு நீரில் செலுத்தப்படுகிறது. வினாடிக்கு ஒரு மைல் வேகத்தில் ஒலி நீரில் பாய்கிறது. உள்ளே செல்லும் ஒலி மீண்டும் கப்பலில் உள்ள மற்றொரு கருவியில் எதிரொலிக்கிறது. கடல் ஒரு மைல் ஆழமிருந்தால் ஒலி சென்று எதிரொலிக்க இரண்டு வினாடிகள் ஆகின்றன. ஆழம் அதிகரிக்க ஆதிகரிக்க எதிரொலி கப்பலை அடைய நேரம் அதிகரிக்கும்.

தொழில் நுட்பம் மிகுந்த தற்காலத்தில் புதுமாதிரியான எதிரொலிப்பானை உபயோகிக்கிறார்கள். உயர் அதிர்வெண் (HIGH FREQUENCY) ஒலி அலைகள் கடலிலிருந்து நீரில் அனுப்பப்படுகின்றன. கருவியில் உள்ள ஒரு தனிச்சிறப்புள்ள காகிதத்தில் எதிரொலிகள் கறுப்புப் புள்ளிகளாகப் பதிகின்றன. பேப்பரில் ஆழத்தின் அளவுகள் அச்சிடப்பட்டிருக்கும். புள்ளிகள் பதிந்த கோட்டை வைத்து கடலின் ஆழத்தை உடனடியாகத் தெரிந்து கொள்ளலாம்.

எதிரொலிப்பான் கடலின் ஆழத்தை மட்டும் கணிப்பதில்லை; கடல் மேற்பரப்பிலிருந்து கடல்தரை வரை தொடர்ந்து அங்குள்ள நிலைகளைத் துல்லியமாகத் தெரிவிக்கிறது. இதனால் கடலில் ஒவ்வொரு மீட்டர் ஆழத்திலும் உள்ளவைகளைத் தெரிந்து கொள்ள முடியும்.

கப்பல் சென்று கொண்டிருக்கும்பொழுது கடலடியில் மலைகள் தென்பட்டால் இக்கருவி அம்மலையின் அமைப்பை மிகத் துல்லியமாக அளவெடுத்துவிடுகிறது. கடலடி சமமாயிருந்தால் அதையும் தெரிவித்து விடுகிறது. சுருங்கச் சொன்னால் கடல் தரையில் ஒரு சில அடிகள் கொண்ட மேடு இருந்தாலும் எதிரொலிப்பான் துல்லியமாகத் தெரிவித்து விடுகிறது.

## கைவிளக்கேந்திய காரிகை



**★ புளோரன்ஸ் நைட்டிங்கேல் என்பவர் யார்?**

தாதிச் சேவையை உலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்.

**★ இவர் எப்போது வாழ்ந்தார்?**

நைட்டிங்கேல் 1820ல் பிறந்து, 1910 ஆண்டு இறந்தார்.

**★ நைட்டிங்கேல் எந்த இடத்தில் தனது தாதிப் பணியைச் சிறப்பாகச் செய்தார்?**

இங்கிலாந்திற்கும் கிரிமியா நாட்டிற்கும் இடையே நடைபெற்ற போரில் இலட்சக் கணக்கான வீரர்கள் காயமடைந்தார்கள். அப்போது இந்த முகாம்களில் இரவு, பகல் என்று பாராது நோயாளர்களைக் கவனித்தார். இவரது சேவையின் பலனாக 40 வீதமாக இருந்த இறப்பு வீதம் 2 வீதமாகக் குறைந்தது.

**★ இவருக்கு 'கை விளக்கேந்திய காரிகை' என்ற பெயர் எப்படி வந்தது?**

படுகாயமடைந்த வீரர்களை இரவு பகலாகக் கண் விழித்து, சின்னக் கை விளக்கொன்றை கையில் ஏந்தியபடி ஒவ்வொருவருக்கும் சிகிச்சை அளிப்பார். இதனால் தான் இவருக்கு இப்பெயர் வந்தது.

**★ இவர் மருத்துவ சேவையைப் பற்றி ஏதாவது புத்தகங்கள் எழுதியிருக்கிறாரா?**

ஆம். 'நோட்ஸ் ஒன் நேர்ஸிங்' என்ற இவரது புத்தகம் இன்றும் மருத்தவத் துறையில் ஒரு வரப்பிரசாதமாக விளங்குகிறது.

## மீன் பிடி சிலந்தி



அருகில் இருப்பது 'ஃபிஷ்ஷர் ஸ்பைடர்' (மீன்பிடி சிலந்தி) ஆகும். சிலந்தி வகையைச் சார்ந்தது. இது நீரின் மேலேயே நடக்கும். மூழ்கவே மூழ்காது. ஏனென்றால் இது மிகவும் பாரம் குறைந்தது. இதன் உணவு என்ன தெரியுமா? மீன் குஞ்சு மற்றும் பூச்சிகள். அதனால் இது நீர் நிலைகளுக்கு அருகிலேயே வாழும். இந்த ஃபிஷ்ஷர் ஸ்பைடர் தண்ணிருக்குள் மூழ்கியபடி சிறிது நேரம் இருக்கக் கூடியது. பெண் ஃபிஷ்ஷர் ஸ்பைடர் தான் இடும் முட்டைகளை பாதுகாப்பதற்காக விதம் விதமான கூடுகளைக் கட்டும்.

திகில் 7

# நீ! நீயா!

மர்மக் கதை மன்னன் ராஜேந்திரகுமார்



சின்ன அரைப் பவுன் சங்கிலியில் மெல்லியதான சிலுவை, அந்த சாலமனின் வெள்ளை மார்பில் பளிச்சென்றது. அடிக்கடி ஆங்கில ஆபாசம் பேசினான். (அதில் குறைந்த பட்ச ஆபாசவார்த்தை 'அப் யுவர்ஸ்')

ராம் வீட்டுத் தோட்டத்தில் உலாவிக் கொண்டிருந்தார்கள்.

வரதராஜன் சொல்லிக் கொண்டே வர 'நம்புவதா வேண்டாமா?' என்ற யோசனையுடனேயே கூட நடந்தார்கள்.

"போன் வந்த நேரத்தில தூங்கிட்டிருந்தாள்னா, ஜோதி என்கிற பெயரால எனக்கு போன் பண்ணின பெண் யாராக இருக்கும்? அப்படியே இருந்தாலும் கூப்பிட்டுத் சுட்டுத் தள்ளுமளவுக்கு என்மேல் அவளுக்கென்ன கடுப்பு?"

"ஷிட்" சாலமன் சொன்னான். "ராத்திரி பார்ட்டிக்கு வந்தவங்கள்ல விஷயம் தெரிந்த யாராவதிருக்கும். இல்லையானா நீ அவளோட இளிச்சதும், இழுத்துக்கிட்டு கிளம்பினதும் வேற யாருக்கும் எப்படி தெரியமுடியும்?"

"ஆனாலும் அங்கே வந்த மேட்டுக் குடி பெண்கள்ல வேற யாரையும் எனக்குத் தெரியாது."

"என்னடா இது குழப்பம்? ஏண்டா முண்டம்! பப்ளிக் பார்க்கில ஒருத்தி குறி பார்த்து சுடறா. நீ ஏண்டா அங்கே நின்னே? மரம் செடி கொடி எல்லாம் எதுக்கு இருக்கு? பின்னால ஓடி ஒளிஞ்சுக்க வேண்டியதுதானே?"

அவர்களின் பேச்சு நின்றதும் சைக்கிளில் வந்த யாரோ ஒரு பையன் தோட்டக்கார ஆளிடம் எதையோ கொடுப்பதும், அவன் ஏதோ சொல்ல முயலும் முன் சைக்கிள் ஏறிப் பறப்பதும் தெரிந்ததும் புரியாமல் பார்த்தார்கள்.

"மாலி" என்றான் ராம்; "வா இங்கே?"

"தம்பி! நீங்க இங்கேயாயிருக்கீங்க? தெரிஞ்சிருந்தா பயலை இங்ஙன அனுப்பியிருப்பேனே?"

"யாரவன்? என்ன சொன்னான்!"

"நீயே கொடுத்துடு, இவன் தான் வரதராஜன்."

வாங்க நிரம்பத் தயங்கினான் வரதராஜன். "நான் இங்கே இருக்கிறது யாருக்குத் தெரியும்? தவிர எனக்கு வருகிற கடிதம் ஏன் இந்த வீட்டுக்கு வருது? நான் என்ன விலாசமில்லாத ஆளா?"

"வந்துடுச்சு. படிச்சுத்தான் பாரேன்."

உறையை ஓரம் கிழித்து 'உப்'பென்று ஊதி உள்ளேயிருந்த சீட்டை உருவி எடுத்துப் படித்தான்.

இரண்டே இரண்டு வரிகள் எழுதியிருந்தன.

"இந்த முறை தப்பி விட்டாய். அடுத்த முறை சாவைச் சந்தித்தே தீருவாய்!"

அதிர்ந்தார்கள்!

"யார்ரா இது?" ராம் கேட்டான். "சாலமன்! என்னடா இது நிஜமாகவே ஏதோ விபரீதம் மாதிரிபடுதே."

"புல் ஷிட்! எவனோ வெளையாடறான் பாஸ்டர்ட். இருங்கடா அவன் எதுவரை தான் போயிடறான்னு பார்த்துடுவோம்!"

"ஏய் யப்பா! உனக்கென்னடா போச்சு? அவள் என் உயிரோடதானே விளையாடறாள்? உனக்கென்ன போச்சு?"

"சரி. இப்ப என்ன பண்ணணும்ங்கறே?"

"நீங்களே யோசிச்சு முடிவெடுங்க, என்னால எதையும் நினைச்சுப் பார்க்க முடியல."

"நான் சொல்றதைக் கேளு. இப்ப இருக்கிற நிலையில உனக்குப் பாதுகாப்பு தேவை. ஏதாவது துப்பறியும் நிறுவனமாகப் பார்த்து உதவி கேட்கலாம். உன்னைப் பாதுகாக்க ஒரு பாடிகார்ட் ஏற்பாடு பண்ணச் சொல்லிவிடலாம். என்னங்கறே?"

"என்னமோ செய்ங்கப்பா. எனக்கு-என்னை ஒண்ணும் கேட்காதீங்க."

"எனக்கொரு ஐடியாடா இவன்களே!" ராம் சொன்னான். "எங்க சித்தப்பாவோட மச்சினர் ஒருத்தர்- பேர் திருக்குமரன். போலீஸ் இன்ஸ்பெக்டராயிருந்தார்."

"அதுக்குள்ளே போலீஸ் எல்லாம் கதையிலே வேணாம்டா. அப்புறம் விசாரணைக்குன்னு அடிக்கடி போலீஸ் நடமாடும். அது வேற வம்பாயிரும். வீடு முழுக்க விருந்தாளிங்க வேற."

"அதான் இருந்தார்னு சொன்னேனில்லே? இப்ப அவர் அங்கேயில்லே. தனியாக துப்பறியும் நிறுவனம் ஒன்றிலே வேலை செய்யறாராம். அவரை பாடிகார்டாக கூப்பிட்டா என்ன?"

"என்ன யோசனை? கூப்புடேன். எங்கே இருக்காராம்?"

"என்னமோ ராஜா துப்பறியும் பாக்டரியாம். சொன்னாங்க."

"போன் நம்பர், அட்ரஸ் எல்லாம் தெரியுமா?"

"தெரியாதே."

"டெலிபோன் டைரக்டரியில இருக்கும் கம்பனி பெயர்ல போன் இருந்தால் டைரக்டரியில கண்டு பிடிக்கிறது சுலபம். இல்லே செத்தோம்."

ஆரம்பத்திலேயே பயமுறுத்தாதேடா முண்டம்."

கனமான டைரக்டரியில் முயன்றார்கள். நம்பர் கிடைத்தது!

"வாவ்" என்றார்கள் கோரஸாக.

முயன்றபோது திருக்குமரனே லயனில் வந்தான். "என்னடா ராமா! என்ன திடீர்னு போனில வரே? பி.காம் பாஸ் பண்ணிட்டியா?"

"அங்கிள் உங்ககிட்ட ஒரு விஷயம் - அதுவும் அவசரமான விஷயம் பேசணும்."

"பி.காம் பாஸ் பண்ணிட்டியா? அதைச் சொல்லு முதல்ல."

"பண்ணிடுவேன்." இடைவெளிவிட்டுச் சொன்னான் "பண்ணிடுவேன்னு தான் நினைக்கிறேன்."

"சரி என்ன விஷயம் சொல்லு. எனக்கு நேரமில்லே ஐயாம் பிஸி."

"அதான் சொன்னேனே. உங்களை அவசரமா பார்க்கவரணும்னு."

"அப்பசரி. அரைமணிக்குள்ளே வா. ராஜாவும் ஜென்னியும் வெளியே போயிருக்கிறாங்க. வந்துட்டா, அப்புறம் என்னைப் பிடிக்க முடியாது."

"பத்தே நிமிஷத்தில அங்கே இருப்போம்." இருந்தார்கள்.

"சொல்லுங்க!" என்ற திருக்குமரன் நாற்காலியில் சாய்ந்து கைகளை மடக்கி வயிற்றின் மீது வைத்துக் கொண்டு கேட்கத் தொடங்க-

"நேற்று ஒரு பார்ட்டிக்கு போனோம் சார்" என்று ஆரம்பித்தான் ராம். "கொடுத்து அனுப்பியிருக்கிறாங்க," என்று வரதராஜன் நீட்டிய கடிதத்தை வாங்கிப் பார்த்தான். வைத்தான்.

"யார் மேலே சந்தேகப்படறீங்க?"

"அது தெரியாமத்தான் சார் உங்ககிட்ட ஓடி வந்திருக்கோம்" என்று முடித்தான் வரதராஜன்.

**ஜோ**தியின் பங்களாவில்-

"அந்த வைர நெக்லஸ் பற்றி கொஞ்சம் சொல்லுங்கம்மா" என்று ஜென்னி கேட்டாள். "அதாவது யாராவது அதன் மேலே கண் வைச்சிருந்த மாதிரி தெரிந்ததா?"

"அப்படி யாருமில்லையேம்மா. ஆனா யாரையும் கவரக் கூடிய நகை அது. அசல் வைரம். இப்போதைய சர்வதேச விலைக்கு பல கோடி ரூபாய் பெறும். அதனால யாருக்கு வேணுமானாலும் அதன் மேல் கண் இருக்கலாம்."

"அதை ஏன் அவளை பார்ட்டிக்கெல்லாம் போட்டுட்டு போக விடறீங்க? அவ்வளவு விலையுயர்ந்த பொருள். அதுவும் நிதானம் தவறும் பெண்ணாச்சே. அதனால் கேட்டேன்"

"மிஸ்டர் ராஜா." அந்த ராஜி சொன்னாள். "பொண்ணைப் போர்த்தி வளர்க்கணும் என்கிறது இங்கே யாருக்குமே தெரியாது. அவ இஷ்டத்துக்கு போகவிட்டு இவ்வங்க இஷ்டத்துக்கு திரிஞ்சாங்க. இப்ப அவளை கட்டுப்படுத்த நினைச்சா அது நடக்கிற காரியமாயில்லை. பிடிவாதக்காரியா யிட்டா."

"அது சரிம்மா."

"அதனால இவ்வளவு காஸ்ட்லி நகையை ஏன் அவ கண்ணில காட்டினீங்கன்னு கேட்கறீங்க. அது தானே? இப்ப இருக்கிற சொத்து கணக்குகளை எல்லாருக்கும் கொடுத்தாங்க. அந்தப் பிரதியில இதைப்பற்றித் தெரிஞ்சிட்டு அடம் பிடிச்சு வாங்கிப் போட்டுட்டுப் போகிறாள். சட்டப்படி அவளைத் தடுக்க முடியாது. வாரிசு உரிமை அவளுக்கும் உண்டு."

"உபதேசமாவது-அதாவது எச்சரிக்கையாவது செய்திருக்கலாமே."

"அதனால தான் கைப்பைக்குள்ளே போட்டுக்கச் சொன்னோம். அவளும் குடிக்க ஆரம்பிச்சதும் ஞாபகமா கழற்றி பைக்குள்ளே வைச்சிடுவா."

"அது சரிம்மா. நகை காணோம் என்கிற சமாச்சாரம் உங்களுக்கு எப்ப தெரியவந்தது?"

"ராத்திரி நீங்க கூட்டிட்டு வந்து விட்டுட்டுப் போனதும் அம்மா அவளை எங்கிட்டே தான் ஒப்படைச்சு, கொண்டு போய் படுக்க வைக்கச் சொன்னாங்க. படுத்தவள் திடீர்னு நினைச்சு எழுந்து "அண்ணி. கைப்பையில நெக்லஸ் இருக்கு. அதை எடுத்து பத்திரப்படுத்திட்டு தூங்குங்கன்னு சொன்னா...

"எடுத்துக் கொடுன்னு சொன்னேன் அவளே கைப்பையை எடுத்து துழாவி "காணோமே... ஐயோ காணலியே"ன்னு கத்திட்டு தூங்கிட்டா...

நானும் தேடிப்பார்த்தேன். இல்லே. சரி. ராத்திரியில கலாட்டா வேண்டாம்னு விடிஞ்சதும் மாமியார் கிட்ட சொன்னேன். அப்புறம் தான்..."

"...தெரியும். உடனே எங்களுக்கு போன் பண்ணி செமடோஸ் விட்டாங்க. குற்றம் சாட்டினாங்க."

"ஸாரி. அவங்க இருக்கிற நிலையில யாருக்கும் சந்தேகம் வரும். காரணம். காணாமல் போனது பத்து ரூபா சமாச்சாரமில்லே."

பெரிசு பெரிசா பூப்போட்ட நைட்டி ஒன்றை அணிந்து கலைந்த தலையும் கலையாத போதையுமாய் இறங்கி வந்தாள் அந்த ஜோதி.

"ஹல்லோ. அண்ணி! யார் இவங்க?" என்றாள்.

"இவங்கதான் ராத்திரி உன்னை பத்திரமாக கூட்டிட்டு வந்து விட்டவங்க."

கொட்டாவி விட்டாள். "ஐ.ஸீ."

"மிஸ் ஜோதி" ஜென்னி கேட்டாள்-"ராத்திரி நடந்ததைக் கொஞ்சம் ஞாபகப் படுத்தி சொன்னால் எங்களுக்கு உதவியாயிருக்கும்!"

அலட்சியமாகப் பார்த்தாள். "அது எதுக்கு உங்களுக்கு? என் ராக்கால நடவடிக்கைகளை யாருக்கும் சொல்கிறதுக்கில்லே. ஸாரி."

"இத பாருங்க மிஸ். உங்க வைர நெக்லஸைக் காணலியாம்-அதை"

"இருங்க." கேட்டாள். "அப்படியா அண்ணி?"

"ஆமாம். அவ்வளவு பெரிய நகையைத் தொலைச்சிட்டு வந்து நின்னு கொஞ்சம் கூட பதறாம இருக்கியேடி முண்டமே."

"பதறினால் உடனே கிடைச்சிடுமா?" சுட்டு விரலால் ராஜாவைக் காட்டி கேட்டாள். "நீங்க யாரு?"

"ராஜா! ஐயாம் ராஜா. ராஜா துப்பறியும் பாக்டரி எம்.டி.அவ்விடம் அனைத்தும் துப்பறிந்து கண்டுபிடிக்கப்படும்."

"பின்னே என்ன? இந்த வைர நெக்லஸைக் கண்டு பிடிக்கிற வேலையை உங்களுக்கே தரேன். அவ்வளவு தானே?" எழுந்து நின்று கும்பிட்டாள். "குட்பை"

"இரும்மா. வழக்கை கொடுத்துட்டா சரியா போச்சா? விவரம்-அதன் பின்னணி எல்லாம் சொல்ல வேண்டாமா?"

"ஓஹ்ஹோ" என்று சரிந்து சோபாவில் விழுந்தாள். "என்ன தொல்லை இது? சீக்கிரம் கேளுங்க. என்ன விவரம் வேணும்?"

"நேற்று ராத்திரி பார்ட்டிக்கு போனதிலேர்ந்து நடந்ததை ஞாபகப் படுத்திச் சொல்லுங்க. அது முக்கியம்."

"சொல்றேன். பார்ட்டி ஆரம்பிச்சதுமே நான் ஏழாவது சொர்க்கத்துக்கு போயிட்டேன். கவனமாக நகையைக்களட்டி கைப்பையில் போட்டு தோளில் மாட்டிக்கிட்டேன். என்னை தொட்டாலும் மன்னிப்பேன். பையை தொட்டால் ஓங்கி அறைஞ்சு தள்ளிடு னேன். அப்புறம் தான்....

அந்த மூன்று சினேகிதங்களை சந்திச்சேன். அவங்க காரிலேயே திரும்பினேன். அப்புறம் கார்லேயே தூங்கிட்டேன். அப்புறம் கண் விழிச்சப்ப ஏதோ யார் கட்டில்லேயோ சேதாரமில்லாம கிடந்தேன்... அப்புறம் எங்க வீட்டுக் கட்டில்ல கிடந்தப்ப நகையை தேடினதும் தான் தெரியும்...

அப்புறம் வேற எதுவுமே கவனமில்லே. ஸாரி."

"எங்களுக்குத் தெரிஞ்சதை நாங்க சொல்றோம்." என்ற ராஜாவின் பார்வை ஜென்னி பக்கம் போகவே அவள் சுறுசுறுப்பாக ஆரம்பித்தாள்.

"எங்களுக்கு தெரிஞ்ச அரசன் என்கிற பையன் ராத்திரி போன் பண்ணினான்" என்று ஆரம்பித்தாள்.

"கொஞ்சம்கூட நாகரீகமில்லாம உங்கம்மா கத்தியதை பற்றி திட்டிகிட்டே வீடு திரும்பிட்டோம். அப்புறம் காலையில உங்கம்மா சொல்லித்தான்



நகை காணாமல் போனது எங்களுக்குத் தெரியும்."

"நீங்கதான்-நீங்கதான் திருடியிருக்கணும்" என்று கத்திய சரஸ்வதியம்மாளை அதட்டல் போட்டு அடக்கினாள் ஜோதி.

"உளறாதேம்மா, திருடினவங்களைக் கண்டு பிடிக்கிறவங்க அவங்க. நீ அவங்களையே திருடங்கன்னு சொல்றியா? ஸ்டுப்பிட்! சார்! நீங்க உங்க ஆராய்ச்சியைத் தொடரலாம். அம்மா அவங்களுக்கு அஞ்சாயிரம் ரூபாய் அட்வான்ஸ் கொடு."

"அஞ்சாயிரமா? எதுக்குடி?"

"காரணமாத்தான். அட்வான்ஸ் பணம் பார்த்தால் தான் அவங்களுக்கு வேலையில ஒரு.. இது வரும்."

"எது?"

"உற்சாகம். நீங்க கிளம்புங்க சார்."

காரில் வரும் போது ராஜா சொன்னான்.

"நேத்து நடந்த பார்ட்டிக்கு வந்தவங்க அத்தனை பேரையும் சந்தேகப்படணும்.


"நடக்கிற காரியமா அது? அந்த மூன்று பேரை மட்டும் கண்டு பிடிச்சா போதும். நகை கையோட கிடைச்சுடும்."

**ராஜா** துப்பறியும் பாக்டரிக்குள்ளே இவர்கள் போன போது அங்கே அமர்ந்திருந்த வாலிபர்கள் எழுந்து நின்றார்கள்.


"ராஜா! நம்ம புது கிளையண்ட்டுங்க." திருக்குமரன் சொன்னார். "இவங்க உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கு. நாம உதவி செய்யப் போகிறோம்.

(தொடர்ந்து வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: கே. கதிரேசன்.
வயது: 22
முகவரி: பீற்றூ எஸ்டேட், நுவரெலியா.
பொழுது போக்கு: கிரிக்கெட், உதைபந்து.




பெயர்: எம். அமீர் கான்.
வயது: 29
முகவரி: கற்பிட்டி வீதி, ஏத்தாலை.
பொழுதுபோக்கு: நண்பர் தொடர்பு, பத்திரிகை.




பெயர்: கே. ராஜன்.
வயது: 28
முகவரி: ZENTRAL STR-8, 6003, LUZERN, SWITZERLAND.
பொழுது போக்கு: தொலைகாட்சி, வீடியோ.



பெயர்: எம். அன்வர்.
வயது: 24
முகவரி: 64/44, அல்-ஹிலாஸ் மாவத்தை, வெலிபிட்டிய, வெலிகாமம்.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எஸ். சங்கீதா.
வயது: 15
முகவரி: கிராம நீதிமன்ற வீதி, ஆரையம்பதி.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: பி. டீன்.
வயது: 24
முகவரி: P.O.BOX-17061, JEDDAH- 21484, K.S.A.
பொழுதுபோக்கு: பத்திரிகை.

பெயர்: ரம்ழான் ஹமீட்.
வயது: 22
முகவரி: P.O.BOX-977 AL-JAHRA KUWAIT.
பொழுது போக்கு: பேனா நட்பு, பத்திரிகை, புத்தகம்.

பெயர்: ரி. இஸ்மாயில்.
வயது: 19
முகவரி: தேனீர் கடை, பொத்துவில்-01.
பொழுது போக்கு: பத்திரிகை.

பெயர்: எஸ். ஆனந்தராஜ்.
வயது: 19
முகவரி: 115/4, கடற்கரை தெரு, நீர்கொழும்பு.
பொழுது போக்கு: வானொலி, பத்திரிகை, பேனாநட்பு.

பெயர்: பி. நாகராஜன்.
வயது: 17
முகவரி: விநாயக புரம், வாழைச்சேனை.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.

பெயர்: எஸ். ராஜன்.
வயது: 26
முகவரி: 212-414 EAST 10TH AVE. VANCOUVER. BC. V5 T1Z8 CANADA.
பொழுது போக்கு: ரீ.வி, வானொலி

பெயர்: எம், நியாஸ்.
வயது: 23
முகவரி: டி.44, ஹபுகஸ்தலாவ, நாவலப்பிட்டி.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி.

# தாய்

இந்த மாதிரியான கொந்தளிப்பைக் கண்டு, பெலகேயா மனம் புரிந்து கொண்டு அவளைத் துக்கத்தோடு தழுவியணைத்துக் கொண்டாள்.

"அடி, என் கண்ணே!" என்று அவள் மிருதுவாகச் சொன்னாள். "அவன் தன்னைத் தவிர வேறு யார் பேச்சையுமே கேட்க மாட்டான்-எவர் பேச்சையும் கேட்க மாட்டான்!"

அவர்கள் இருவரும் ஒருவரையொருவர் இறுகத் தழுவியவாறே மௌனமாக நின்றார்கள். பிறகு சாஷா தாயின் கரங்களைத் தன் தோள் மீதிருந்து மெதுவாக விலக்கிவிட்டு, நடுக்கத்துடன் சொன்னாள்:

"ஆமாம், நீங்கள் சொல்வது சரி. இதெல்லாம் வெறும் பைத்தியக்காரத் தனம், என்னவோ உணர்ச்சியில்..."

திடீரென அவள் அமைதி பெற்று சாவதானமாகச் சொன்னாள்:

"ரொம்ப சரி, வாருங்கள் நோயாளிக்கு உணவு கொடுக்கலாம்."

அவள் இவானின் படுக்கையருகே சென்று அமர்ந்தபோது, அவனை நோக்கித் தலையை வலிக்கிறதா என்பதைப் பரிவோடு கேட்டுக் கொண்டாள்.

"அதிகம் இல்லை. எல்லாமே கொஞ்சம் மங்கலாகத் தெரிகிறது. பலவீனமாய் இருக்கிறது" என்று கூறிக்கொண்டே அவளது முன்னிலையில் ஏற்பட்ட உணர்ச்சிக் குழப்பத்தால் இன்னது செய்வதென்று தெரியாமல் போர்வையை மோவாய்க்குக் கீழாக இழுத்துவிட்டுக் கொண்டான் இவான். அமிதமான ஒளியைக் கண்டு கூசுவது மாதிரி கண்களைச் சுருக்கிக்கொண்டான். அவளது முன்னிலையில் சாப்பிடுவதற்கே அவனுக்கு வெட்கமாயிருக்கிறது என்பதை சாஷா உணர்ந்து கொண்டாள். எனவே அவள் எழுந்து வெளியே சென்றாள். இவான் எழுந்து உட்கார்ந்து அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அ.. ழ.. கி தான்" என்று முணுமுணுத்துக் கொண்டான்.

களிப்பு நிறைந்த நீலக்கண்களும் நெருக்கமாக வளர்ந்திருந்த சிறு பற்களும் ஆண்மை குடிபுகாத பாலியக் குரலும் பெற்றிருந்தான் அவன்.

"உனக்கு என்ன வயதாகிறது?" என்று ஏதோ நினைத்தவாறே கேட்டாள் தாய்.

"பதினேழு."

"உன் பெற்றோர்கள் எங்கே?"

"கிராமத்தில். பத்து வயதிலிருந்து

## மக்சீம் கார்க்கி

நான் இங்குதான் இருக்கிறேன். பள்ளிக்கூடப் படிப்பை முடித்தவுடனேயே நான் நகருக்கு ஓடிவந்து விட்டேன். உங்கள் பேரென்ன, தோழரே!"

அந்த வார்த்தையை சொல்லி அவளை அழைக்கும்போது அந்த வார்த்தை எப்போதும் அவள் உள்ளத்தைத் தொடும், அவள் குழப்பமடைவாள்.

"நீ ஏன் தெரிந்து கொள்ள விரும்புகிறாய்?" என்று புன்னகையோடு கேட்டாள் அவள்.

சிறிது நேரம் தத்தளித்துத் தயங்கிவிட்டு, அவன் விளக்கினான்:

"கேளுங்கள். எங்களோடு கல்விக் குழாத்தில் பங்கெடுத்து வந்த ஒரு மாணவன்- அதாவது எங்களுக்கு வகுப்பு நடத்திய ஒரு மாணவன்- பாவெல் விலாசவின் தாயைப் பற்றி எங்களுக்கு எடுத்துக் கூறினான். மேதினக் கொண்டாட்டம் ஞாபகமிருக்கிறதா?"

தாய் தலையை அசைத்துக் கொண்டே தன் காதுகளைக் கூர்மையாக்கிக் கேட்டாள்.

"அவன் தான் முதன் முதல் நமது கட்சியின் கொடியைப் பகிரங்கமாக ஏந்திப் பிடித்தவன்" என்று அந்தப் பையன் பெருமையோடு கூறினான். அந்தப் பெருமையுணர்ச்சி தாயின் உள்ளத்திலும் எதிரொலி எழுப்பியது.

"நான் அப்போது இல்லை. அந்த மாதிரி நாங்களும் தனியாக கொண்டாட விரும்பினோம். ஆனால் அது நடக்காமல் போய்விட்டது. நாங்கள் கொஞ்சம் பேர்தான் இருந்தோம். இருந்தாலும் வருகிற வருஷத்தில் நாங்கள் கட்டாயம் நடத்தித்தான் பார்க்கப் போகிறோம். பாருங்களேன்!"

எதிர்காலச் சம்பவங்களைக் கற்பனை செய்து பார்க்கும் உத்வேகத்தால் அவனுக்கு மூச்சுக் கூடத் திணறியது.

"சரி . நான் விலாசவின் தாயைப் பற்றித்தானே சொல்லிக் கொண்டிருந்தேன்." என்று கையிலிருந்த கரண்டியை ஆட்டிக் கொண்டே பேசத் தொடங்கினான் அவன். "அவளும் அதன் பின்னர் கட்சியில் சேர்ந்துவிட்டாள். அது ஒரு பெரிய அதிசயம் என்று எல்லோரும் பேசிக் கொள்கிறார்கள்."

தாய் வாய்திறந்து புன்னகை புரிந்தாள்; அந்தப் பையனுடைய புகழுரையைக் கேட்பதில் அவளுக்கு ஆனந்தம் தோன்றியது. ஆனந்தத்துடன் கூச்சக் கலக்கமும் இருந்தது;

"நான் தான் விலாசின் தாய்!" என்று அவள் அவனிடம் சொல்ல விரும்பினாள். என்றாலும் அந்த வார்த்தைகளை உள்ளடக்கிக் கொண்டு தனக்குத்தானே ஏளன பாவத்தோடு கூறிக் கொண்டாள்.

"நான் எவ்வளவு பெரிய முட்டாள்!"

திடீரென்று அவள் அவன் பக்கமாகக் குனிந்து உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாள்.

"இன்னும் கொஞ்சம் சாப்பிடு. நீ சீக்கிரமே குணமாகி எழுந்து நடமாட வேண்டும், நாம் எடுத்துக் கொண்ட கொள்கைப் போருக்காக!"

தெருக்கதவு திறந்தது. தெருவிலிருந்து குளிர்ந்த ஈரம் படிந்த இலையுதிர்காலக் காற்று உள்ளே வீசியது. செக்கச் சிவந்த கன்னத்தோடு சிரித்துக் கொண்டே சோபியா வாசலில் நின்று கொண்டிருப்பதை, தாய் கண்டாள்.

"நான் சொல்வதைக் கேள். துப்பறிபவர்கள் எல்லாம் என்னை மாப்பிள்ளை மாதிரி வட்டம் போட்டுத் திரிகிறார்கள். நான் சீக்கிரமே இங்கிருந்து போயாக வேண்டும்..... சரி. இவான், உனக்கு எப்படி இருக்கிறது? தேவலையா? நீலவ்னா, பாவெலிடமிருந்து ஏதாவது செய்தியுண்டா? சாஷா இங்கிருக்கிறாளா?"

சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே ஏதேதோ கேள்விகள் கேட்டாள். அந்தக் கேள்விகளுக்கு அவள் பதிலை எதிர் நோக்கவில்லை. அவள் தாயையும் அந்த பையனையும் தனது சாம்பல் நிறக்கண்களால் பரிவோடு நோக்கித் தழுவினாள். தாய் அவளைக் கவனித்துப் பார்த்தவாறே தனக்குள்ளாக நினைத்துச் சிரித்துக் கொண்டாள்:

"நானும் நல்லவர்களில் ஒருவளாகக் கருதப்படுகிறேன்!" மீண்டும் அவள் இவானின் பக்கமாக குனிந்து பார்த்துச் சொன்னாள்:

"சீக்கிரமே குணம் அடைந்து, எழுந்து நடமாடு, மகனே!" பிறகு அவள் சாப்பாட்டு அறைக்குள் சென்றாள். அங்கு சோபியா சாஷாவுடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டாள்:

"அவள் இதற்குள்ளாகவே முன்னூறு பிரதிகள் எடுத்து முடித்துவிட்டாள். இந்த வேகத்தில் போனால் அவள் தன்னைத் தானே சீக்கிரம் முடித்துக் கொண்டு விடுவாள். இதுதான் வீரம்! இந்த மாதிரி ஜனங்களோடு வாழ்வதும், அவர்களோடு உழைப்பதும் அவர்களது தோழர்களாயிருப்பதும் எவ்வளவு பெரிய பாக்கியம், சாஷா!"

"ஆமாம்" என்று அந்தப் பெண் மெதுவாகச் சொன்னாள்.

அன்று மாலை அவர்கள் தேநீர் அருந்திக்கொண்டிருந்தபோது சோபியா தாயை நோக்கிப் பேசினாள்:


"நீங்கள் இன்னும் ஒருமுறை கிராமப் புறத்துக்குச் சென்று வரவேண்டும், நீலவ்னா."

"ரொம்ப சரி. எப்பொழுது?"

"மூன்று நாட்களுக்குள் உங்களுக்குப் புறப்பட்டுப் போகச் சௌகரியப்படுமா?"

"நிச்சயமாய்."

"இந்தத் தடவை தபால் வண்டியை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு வேறு மார்க்கமாக, நிகோல்ஸ்கி பிரதேசம் வழியாகப் போகவேண்டும்." என்று போதித்தான்




நிகலாய். அவன் முகத்தைச் சுழித்து உம்மென்று இருந்தான். அந்த பாவம் அவனது வழக்கமாக அன்பு நிறைந்த அமைதிபாவத்தைக் கெடுத்துக் கொண்டிருந்தது.

"நிகோல்ஸ்கி வழியாகப் போவதென்றால் ரொம்ப தூரமாச்சே" என்றாள் தாய்; "அதிலும் அவ்வளவு தூரத்துக்குக் குதிரைகளை ஓட்டிச் செல்வதென்றால்......"

"உண்மையைச் சொல்வதென்றால், நான் இந்தப் பயணத்தை ஆதரிக்கவேயில்லை." என்று பேசத் தொடங்கினான் நிகலாய். "அங்கு இப்போது நிலமை சரியில்லை. பல பேரைக் கைது செய்திருக்கிறார்கள். யாரோ ஓர் உபாத்தியாயரைக் கூடக் கொண்டுபோய்விட்டதாகத் தெரிகிறது. எனவே நாம் மிகுந்த ஜாக்கிரதையோடிருக்க வேண்டும். இன்னும் கொஞ்ச நாள் பொறுத்திருந்தால் கூட நல்லது தான்....."

"ஆனால் நாம் அவர்களுக்கு எந்தவிதத் தங்குதடையுமின்றிப் பிரசுரங்களை அனுப்பியாக வேண்டுமே" என்று மேஜைமீது விரலால் கொட்டிக்கொண்டே சொன்னாள் சோபியா. "நீங்கள் போகப் பயப்படுகிறீர்களா, நீலவ்னா?" என்று அவள் திடீரெனக் கேட்டாள்.

அந்தச் சொல் தாயின் உள்ளத்தைச் சுட்டுவிட்டது.

"நான் என்றாவது பயந்திருக்கிறேனா? முதல் தடவை போகும் போதே நான் பயப்படவில்லையே..... இப்போது மட்டும்..... நீங்கள் இப்படித் திடீரென்று......" அவள் அந்த வாக்கியத்தை முடிக்காமலேயே தலை குனிந்து கொண்டாள். "நீ பயப்படுகிறாயா, உனக்குச் சௌகரியமிருக்குமா? உன்னால் இந்தக் காரியத்தைச் செய்ய இயலுமா?" என்றெல்லாம் யாராவது, அவளைக் கேட்கும் போது அவர்கள் அவளிடம் ஏதோ தயவு நாடிக் கேட்பதைப்போல அவள் உணர்ந்தாள். மேலும் அந்தக் கேள்விகளால் அவர்கள் தம்முள் ஒருவரையொருவர் நடத்துகிற மாதிரி தன்னையும் நடத்தாமல் தன்னை ஒதுக்கி வைத்த மாதிரி வித்தியாசமாக நடத்துவது போலத் தாய்க்குத் தோன்றியது.

"நான் பயப்படுகிறேனா என்று ஏன் கேட்கிறீர்கள்?"என்று அடைத்துப்போன குரலில் கேட்டாள் அவள். "நீங்கள் மட்டும் ஒருவருக்கொருவர் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கக் காணோமே!"

நிகலாய் பதறிப்போய்த் தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றினான்; மீண்டும் போட்டுக்கொண்டு, தனது சகோதரியை ஆழ்ந்து நோக்கினான். அங்கு நிலவிய அமைதியைக்கண்டு தாய் குழம்பிப் போனாள். அவள் மேஜையை விட்டு எழுந்து நின்று, குற்றம் செய்துவிட்டவளைப் போல் ஏதோ சொல்ல விரும்பினாள். ஆனால் அதற்குள் சோபியா அவளது கரத்தைப் பற்றிப் பிடித்து மெதுவாக் கூறினாள்:

"என்னை மன்னித்துவிடுங்கள். இனி மேல் நான் இப்படி நடந்து கொள்ள மாட்டேன்."

இந்த வார்த்தையைக் கேட்டதும் தாயின் முகத்தில் புன்னகை அரும்பியது. சில நிமிஷ நேரங்களில் மீண்டும் அவர்கள் மூவரும் அந்தப் பயணத்தைப் பற்றி உற்சாகத்தோடு விவாதித்துக் கொண்டிருந்தார்கள்.

●○●

அருணோதயப் பொழுதில், இலையுதிர் காலத்து மாரியால் அரித்துச் செல்லப்பட்ட பாதை வழியாகச் செல்லும் தபால் வண்டியில் தாய் ஆடியசைந்து சென்றுகொண்டிருந்தாள். ஈரம் படிந்த காற்று வீசியது; எங்கும் சேறு தெறித்துச் சிதறியது. வண்டிக்காரன் தனது பெட்டியிலிருந்து லேசாக முதுகைத் திருப்பி வளைத்துத் தாயைப் பார்த்துப் பேசத் தொடங்கினான்:

"நான் என் சகோதரனிடம் சொன்னேன். தம்பி, நாம் பாகம் பிரித்துக் கொள்ளுவோம் என்றேன். ஆமாம், நாங்கள் பாகம் பிரிக்கப் போகிறோம்....."

திடீரென்று இடது பக்கத்துக் குதிரையைச் சாட்டையால் சுண்டியடித்துவிட்டு, அவன் கோபத்தோடு கூச்சலிட்டான்:

"இடக்கா பண்ணுகிறாய்? மாய்மாலப் பிறவியே!"

இலையுதிர் காலத்தின் கொழுத்த காக்கைகள் அறுவடையான வயல் வெளிக்குள் ஆர்வத்தோடு இறங்கின; அச்சமயம் எங்கு பார்த்தாலும் குளிர் காற்று ஊளையிட்டு வீசிற்று. காற்றின் தாக்குதலைச் சமாளிப்பதற்காக அந்தக் காக்கைகள் தம்மைச் சுதாரித்துக் கொண்டன. அந்தக் காற்றோ அவற்றின் இறக்கைகளை உலைத்து விரித்துப் பிரித்தது. எனவே அந்தப் பறவைகள் தமது இறக்கைகளையடித்துக் கொண்டு வேறொரு இடத்துக்கு மெதுவாகப் பறந்து சென்றன.

"ஆனால் என் தம்பியோ என் உயிரை எடுக்கிறான். என் சொத்து முழுவதையும் உறிஞ்சிப் பிடுங்கிவிட்டான். ஆகக் கூடி, இப்போது நான் அடையக்கூடிய சொத்துப் பத்துகள் எதுவுமே இல்லை....." என்று பேசிக் கொண்டே போனான் வண்டிக்காரன்.

அவனது பேச்சைக் கனவில் கேட்பது போலக் கேட்டுக் கொண்டிருந்தாள் தாய். அவளது நினைவு மண்டலத்தில், கடந்த சில வருஷ காலமாக நடந்தேறிய சம்பவங்கள் வழிந்தோடின; அந்த நிகழ்ச்சிகள் அனைத்திலும் தானும் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்வதையும் அவள் கண்டாள். இதற்கு முன்பெல்லாம் வாழ்க்கை எங்கோ வெகு தொலைவில், யாருக்கும் காரண காரியம் தெரியாத எதற்காகவோ நிர்ணயிக்கப் பெறுவதாக இருந்தது. இப்போதோ வாழ்க்கையின் பெரும்பாகம் அவளது கண்முன்னாலேயே அவளது சம்பந்தத்துடனேயே உருவாக்கப்பட்டு வருவதை அவள் உணர்ந்தாள். இந்த எண்ணம் அவளது உள்ளத்தில் பல்வேறு விதமான உணர்ச்சிக் கலவைகளை எழுப்பின: தன்னம்பிக்கையின்மை, தன்மீதே ஒரு திருப்தி, முடியாமை, அமைதியான சோகம்.....

சுற்றுச் சூழ்நிலை கண்பார்வையை விட்டு லேசாக மாறிச் சுழன்று மறைந்து கொண்டிருந்தது. வான மண்டலத்தில் சாம்பல் நிறமான மேகக் கூட்டங்கள் ஒன்றையொன்று விரட்டிக் கொண்டு அடர்ந்து சென்றன. ரோட்டுக்கு இருமருங்கிலும் நிற்கும் நனைந்த மரங்கள் தங்களது மொட்டைக் கிளைகளை அசைத்துக் கொண்டிருந்தன. வயல் வெளிகளில் காலக் கிரமத்தில் கரைந்தோடும் சிறுசிறு மண் குன்றுகள் எழும்பியிருந்தன.

வண்டிக்காரனின் மூங்கைக்குரல், மணிகளின் கிண்கிணியோசை, ஊதைக் காற்றின் பரபரப்பு, அதன் ஊளைச் சத்தம் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து படபடக்கும் ஒரு நாதவெள்ளமாக, அந்த வயல் வெளிகளுக்கு மேலாக ஒரேசீராய் வழிந்தோடிக் கொண்டிருந்தது.

"பணக்காரனுக்குச் சொர்க்கம் கூடப் பற்றாக்குறைதான்." என்று தன்னிருப்பிடத்திலிருந்து ஆடிக்கொண்டே சொன்னான் வண்டிக்காரன். "எனவே அவன் என் உயிரைப் பிழிந்து எடுக்கிறான். அதிகாரிகள் அனைவரும் அவனுக்குச் சினேகிதம்....."

ஊர் வந்து சேர்ந்ததும் அவன் குதிரைகளை அவிழ்த்துப் போட்டு விட்டுத் தாயிடம் கெஞ்சுங் குரலில் சொன்னான்:

"நீ எனக்குக் குடிக்கிறதுக்கு ஓர் அஞ்சு கோபெக் கொடேன்."

அவள்காசைக் கொடுத்ததும் அவன் அதைத் தன் உள்ளங்கையில் வைத்து நகத்தால் கீறிக் கொண்டு அதே குரலில் பேசினான்;

"மூன்று காசுக்கு ஒட்கா. இரண்டு காசுக்கு ரொட்டி!"

மத்தியான வேளையில், தாய் நிகோல்ஸ்கி என்னும் அந்தச் சிறிய நகரத்துக்கு அலுத்துச் சலித்துக் களைப்போடு வந்து சேர்ந்தாள். அவள் கடைக்குச் சென்று ஒரு கோப்பைத் தேநீர் அருந்தப் போனாள், போன இடத்தில் ஜன்னலருகே உட்கார்ந்தாள். தனது கனத்த டிரங்குப் பெட்டியை ஒரு பெஞ்சுக்கடியில் தள்ளி வைத்துவிட்டு ஜன்னலின் வழியாகப் பார்த்தாள். ஜன்னலுக்கு அப்பால் நடந்து பழுத்துக் கருகிப்போன ஒரு சிறு சதுரப் புல்வெளியும், அதில் முன்புறங் கூரை இறக்கிய ஒரு சாம்பல் நிறக் கட்டிடமும் தெரிந்தன. அந்தக் கட்டிடம்தான் அந்தக் கிராமச் சாவடி. வழுக்கைத் தலையும் தாடியும் கொண்ட ஒரு முஜீக் தனது சட்டைக்கு மேல் கோட்டு எதுவும் அணியாமல் அந்தக் கட்டிடத்து முகப்பில் உட்கார்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்தான். அந்தப் புல்வெளிச் சதுக்கத்தில் ஒரு பன்றி மேய்ந்து கொண்டிருந்தது. தனது காதுகளைப் படபடவென்று குலுக்கியாட்டிவிட்டு, அது தன் மூஞ்சியைத் தரையில் மோதி, தலையை அசைத்தாட்டியது. (தொடர்ந்து வரும்)

---

# அவலம்

## ஆத்மராஜா றூத் சந்திரிக்கா

ரவூப் மோதினார் வளங்கொழிக்கும் வடக்கு மண்ணிலிருந்து வெளியேறி... அங்குமிங்கும் அலைந்து இறுதியாக இந்த மண்ணில் குடியாகி இரண்டரை ஆண்டுகள் ஓடிவிட்டன. அகதிப்பட்டம்; பள்ளிவாசல் மோதின் கடமையில் ஓராண்டு நிறைவு; மையத்து ஊட்டு வருமானம்; பத்ர் மௌலீது, சுபுஹான மௌலீது அது இது வென்று மாதம் இரண்டாயிரத்தைந்நூறு தேறும். நான்கு உருப்படிகள் ஜீவனம் பண்ண வேண்டிய நிர்ப்பந்தம். இரண்டு குமர்களோடு தானும் மனைவியும் வாழ வேண்டும். ஹினாயா மீண்டும் நினைவு படுத்தினாள்: "வாப்பா இந்தாங்கோ மறக்கோணா.. நாளைக்கி இன்டவ்யூ. வரச்சலம் ஜிஎஸ்ஸிட்ட கடிதம் வாங்கி யாங்கொ." தலையசைத்து தெருப் படலை திறந்தார்.

'அல்லாஹ்வே... நாளைக்கி இன்டவ்யூல எடுபடுவனா?' அவள் மனவெளியில் மீண்டும் பசுமையான எதிர்பார்ப்புகள். சரிந்து விழுந்து விழுந்து போன கனவுகளை மீண்டும் மீண்டும் சரிக்கட்டிப் பார்க்கிறது உள்ளம். இனி வேலை கிடைக்கும். இந்த அவல வாழ்க்கைக்கு விரைவாய் முடிவு வரும். பரீட்சையில் அவள் தானே முதலிடம். மீண்டும் திருப்தியுணர்வு வியாபிக்கிறது. மஃரிபு (மாலை) ஆகியும் வாப்பாவைக் காணவில்லை.

'ஜீயெஸ் என்னத்த செல்லீக்குமோ... ஏன் வாப்பா வராயீக்கும்?' வீட்டுக்கும் வாசலுக்குமாக நடந்தாள். தொங்கிய முகத்துடன் மோதினார் வந்தார்.



"வாப்பா... எங்க கடிதம்?"

"ஜீயெஸ் ஊட்ல இல்ல, பொறகு ஒபீஸ்ல தேடிப் பாத்தன் அங்கினயும் இல்ல" குழம்பிப் போனாள் ஹினாயா.

"வாப்பா... நான் நாளைக்கி என்ன செய்ற?"

"நாளைக்கி ஸுபஹுக்கு பொறகுதான் அவர் நிக்கிய, பெயித்து பாக்கியனன்."

"வாப்பா... நாளைக்கி எனத்தியன் கொண்டு போற...? ஜீயெஸ் கடிதம் அவஸ்யம்" மீண்டும் நச்சரித்தாள்.

"மகேள் வெள்ளணை பெயித்து கடிதம் கொண்டாரன். பத்து மணிபோல ஒங்களுக்கு இன்டவ்யூ போகேலும்" யோசனையோடு திண்ணையில் சாய்ந்தார்.

➡✓✌

'எத்தின வரிஷமா இருக்கீங்க?" ஜீயெஸ் புதிதான பாவனையில் கேட்டார்.

"ரெண்டர"

"நெக்கு ஒரு வருஷந்தான் ஒங்கள தெரியும் மோதினார்" விதிர்விதிர்த்துப் போனார். நெஞ்சுக்குள் உலகம் குலுங்கிய உணர்வு.

"நாளைக்கி இன்டவ்யூ ஈக்காக்கும். நம்ம நானாட பஸீனாவும் போறா, ஒங்களுக்கு வாக்காளர் டாப்பு இங்கில்லியே மோதினார்" சுருக்கென்று தைத்தது. கடிதம் ஒரு வருட வதிவிடத்தை உறுதிப்படுத்தியது. அப்படியானால் ஒன்றரை வருடங்கள் எங்கு இருந்தோம்.. இங்குதானே. கண்கள் பனிக்க வெளியேறினார். நம்பிக்கை கருக ஆரம்பித்தது.

'அல்லாஹ்... இப்ப நான் எனத்தியன் செய்ற?' வடகிழக்கின் யுத்தக் கசிவு போல மனதில் குருதி கசிந்தது. மோதினார் கால்கள் வேகமெடுத்தன. தெருமுனையில் ஹினாயா வருவது தெரிந்தது. "மகள்! றெஸிடன் செட்டிபிக்கேற் ஒரு வருஷம் தான் தந்தீக்கார் ஜீயெஸ்"

"அல்லாஹ்வே.. இதென்ன அக்ரமம்!"

எவ்வளவு அதிகமான புள்ளிகள் பெற்றிருந்தாலும் வதிவிட அத்தாட்சியே தொழிலுக்கான தகைமையாக கணிக்கப்படும் நிதர்சனம் தெரிந்த ஹினாயா.. ஆடிப் போனாள். மனம் சுக்கு நூறாக உடைந்து போனது.

"மூண்டு வரிஷமா இங்க இருக்கம். அந்நிய ஊர்லேர்ந்து நாம இடம்பெயந் தீக்கிறது நெஸந்தானே வாப்பா.." மோதினார் மௌனமாய் நின்றார். உண்மைகள் ஊர்ஜிதப் படுத்தப்படாத உலகில் மௌனம் ஒரு மகத்தான ஆயுதம்தான்.

"வாப்பா... ஒங்களுக்கு தெரீமா சேதி... நடக்கிற சங்கதி, காசி குடுத்திக்காங்களாம், நாம பேருக்குத்தான் போற, லிஸ்ற்ல பேரு வந்தப்பொறகும் சில்மியாட பேரு காணாமப் போயிருக்கி. நாம என்ன செய்யேலும்" விரக்தியாய் பெருமூச்செறிந்தார்.

"அகதிக்கு பொறந்த மண்லயும் இடமில்ல. வாழ்ற மண்லயும் இடமில்ல எங்க போகேலும் அல்லாஹ்வே?" மோதினார் கசிந்த கண்களுடன் நின்றார்.

"காசு இருக்குமெண்டா கல்வியையே வாங்குற ஓலகம்" மனம் ஓலமிட்டது. சலிப்பு மேலோங்கியது. நிராசையாய் போன கனவுகளிலிருந்து விடுபட்டு ஹினாயா நிதர்சனங்களைப் புரிந்து கொண்டாள்.

"என்னத்துக்கு இன்டவ்யூ போற?? போனாப்ல கிடைக்கப் போதா வாப்பா" மோதினார் கன்ன மேடுகளில் நீர்த்திவலைகள் சிதறிற்று. தெருவில் நிற்பதை மறந்து.

"ஆ... வாப்பா ஏன் அழுற? அல்லாஹ் இரிக்கான்" அருகே வந்து அவர் கன்னங்களைத் துடைத்துவிட்டாள். கரம் பிடித்தாள்.

"வாப்பா ஊரிப்பட்ட பள்ளிவேல ஈக்கும் வாங்கொ.. நம்மிட நஸீபு இதாய்யீக்கும். அவனவன் செய்ற ஞாயமெல்லாம் மெய் தான்னு அல்லாஹ் பாத்துக்குவான்" இருவரும் சமாந்தரமாய் வீடுநோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். வானமும் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது.

# விதி

-சுவர்ணா-

உட்கார்ந்து கொண்டான் சிவா.

சுட்டிபுரம் அம்மன் கோயில் வீதியெங்கும் மனிதக்கூட்டங்கள்... ஒவ்வொரு மனித முகங்களிலும் ஒவ்வொரு சோகங்கள்... எத்தனை நாட்கள்.. எத்தனை இடங்களில்... இருப்பிடத்திற்கும்... சோத்திற்கும்... அரிசிக்கும் அலையிறது.... மனிதர்களெல்லாம் சமத்துவமாகி அகதி என்ற ஜாதிக்குள் ஏற்றத் தாழ்வு அற்ற வாழ்வுக்கு வந்து விட்டார்கள்.

பழமை பேசி பரம்பரை வரலாறு படைத்து... கௌரவங்களில் வாழ்ந்தவர்கள்... உறவுகளைத் தொலைத்து, இழந்து– எதிர்காலமே சோகமாகிப்போன முகங்களை அணிந்திருக்கிறார்கள்.

சிவாவின் மனசு யோசனைகளில் பலவாறு ஓடிக்கொண்டிருக்கிறது.

செல்வத்தின் கடிதம் வந்ததில் இருந்து அப்பாவும் ஆடிப்போய்விட்டார்... 'செல்வம் உயிரோட எங்கேயாவது நல்லா இருக்கட்டும், என்று மனதை தேற்றிக் கொண்டிருந்தவருக்கு கடிதம் பேரிடியாகப் போய்விட்டது.

பத்து நாட்களாக படுத்த படுக்கையாகக் கிடந்தவர்... எழுந்து நடமாடத் தொடங்கிய



வேளை... 'முன்னேறிப்பாய்ச்சல்' நடவடிக்கை ஆரம்பமானது... எவ்வளவோ வற்புறுத்தியும் ஆள் வீடை விட்டு வர மறுத்துப் போட்டார். "என் சொத்து மண்ணாகிப் போவதை என்னால் பொறுக்க முடியாது. என்னுடைய கடைசிக் காலம் இங்கேயே முடியட்டும்" என்று இருந்து விட்டார்.

அக்கம் பக்கத்துச் சனங்களும் போய் விட்டார்கள்... எவ்வளவோ கேட்டுப்பார்த்தும் மனிசன் மறுத்துப் போட்டுது... எங்களப் போகச் சொன்னார்... எங்களுக்கு என்னெண்டு விட்டிட்டு போறதெண்டு மனசு வரயில்ல... அம்மா செத்த பிறகு எங்களுக்காக வாழ்ந்த மனிசன்... அப்படி எங்கண்ட உயிர் போறதெண்டா அப்பாவின்ர உயிரோடு சேர்ந்து போவட்டும் என்று இருந்திட்டம்.

வெடிச்சத்தம்... ஷெல்சத்தம் பெரிசாகக் கிட்டடியில கேட்டுக் கொண்டு வந்திச்சி... என்னண்டு மனிசனுக்கு மனம் மாறிச் சோண்டு தெரியாது போவமெண்டு சொல்லி வெளிக்கிட்டுவிட்டார்.... நீர்வேலியில தங்கச்சியின்ர வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தம்.

"டேய் சிவா என்ன யோசிச்சிக் கொண்டு இருக்கிற... வடக்கால சாமான் கொடுக்கினமாம், எடுத்திட்டு வா"... என்ற தகப்பனின் குரல் கேட்டு சிந்தனையில் இருந்து விடுபட்டுக் கொண்டான் சிவா.

எங்கும் குழந்தைகளின் அழுகுரல்கள்... குழந்தைகளை... வயதானவர்களை தவற விட்டவர்கள் குரல் கொடுத்துத் தேடிக் கொண்டிருந்தார்கள். எல்லோருடைய கைகளிலும் ஒவ்வொரு பொட்டலங்கள்... ஓடிவருகின்றபோது கொண்டு வந்த பொருட்கள்... இன்று இதுதான் இவர்களின் சொத்து.

"அப்பா! வடமராட்சிப் பக்கத்திற்கும் ஆமி வரப் போகுதென்று கதைக்கினம். கிளிநொச்சிக்குப் போறதிற்கு சில பேர் கிளாலி துறைக்குப் போயினம்.. அங்கேயும் பெருங்கூட்டமாம்."

"அப்ப, என்னடாப்பா செய்யிறது? இங்கே இருக்கிறதெண்டாலும் சின்னக் கொட்டிலச்சரி போடத்தானே வேணும்.... எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியல்ல" என்ற சிவத்தார் முகத்தில் துளிர் விட்ட வெண் தாடியை ஆறுதலாகத் தடவிக் கொண்டார்.

"எதுக்கும் நாங்க கிளிநொச்சிக்குப் போறது நல்லதப்பா. வீடு தோட்டமெல்லாம் எல்லாத்தையும் விட்டிட்டு வந்திட்டம் எங்கு இருந்தாலும் ஒன்றுதானப்பா."

"ஓமடாப்பா... ஆடுமாடுகளைத் தான் என்ன செய்யிறதென்டு தெரியல்ல... அதுகள நெனச்சாத்தான் பாவமா இருக்கு... நீ இதுலேயே இரு நான் போய் ரெத்தினாவையும்... சிறியையும் கூட்டிக்கொண்டு வாறன்... எதுக்கும் கிளாலிப்பக்கம் போவம்" என்று சொல்லி விட்டு... பெருமூச்சொன்றை விட்டபடி நடந்தார் சிவத்தார்.

பொறந்து வளர்ந்து ஆளான சொந்த மண்ணை விட்டு, பிள்ளையைப்போல ஆசையா வளர்த்த ஆடுமாடுகள விட்டு தோட்டம் துரவுகளை இழந்து... இதெல்லாத்தையும் நினைச்சு தங்கச்சி வீட்டில இருக்கேக்க அப்பா அழும்... செல்வம் அண்ணையின்ர நினைவு வரும் போது... முகட்டைப் பார்த்து மௌனமாக உட்கார்ந்திருப்பார்.. கண்களில் இருந்து கண்ணீர் வழியும்.

"ஊருக்கு ஆமி வாறதுக்கு ஒரு மூன்று மாதங்களுக்கு முன்பு... கையில காச வச்சு என்ன செய்யிறது.. காணி பூமிய வாங்கிப் போட்டா அப்படியே இருக்கும் எண்டு சொல்லி, புதுக்கிணத்தடி ஐம்பது பரப்பு காணியை வாங்கிப் போட்டார்!... எவ்வளவு சொல்லிப்பார்த்தன், "நாடு நல்ல மாதிரி இல்ல, ஆமி வாறதா பேசிக் கொள்றாங்க, பார்த்துவாங்குவ"மெண்டு கேக்கயில்ல. இந்த மண்ணுதான்டாப்பா எங்களுக்கு சோறு போடுதெண்டு சொல்லி எங்கட வாயை அடச்சிப்போட்டார்... கடைசிகாலம் மனத நோகடிக்கக்கூடாதெண்டு விட்டுட்டம்... அது கூட ஆளுக்கு மனதில பாதிப்ப ஏற்படுத்தியிருக்கு.. கையில இருந்த காசப்போட்டுத் தானே வாங்கினது.. செலவுக்கு மற்றவர்கிட்ட கையை நீட்டவேண்டியதாப் போயிட்டுது என்று கவலையில வீட்ட விட்டு வெளிய வரயில்லை.'

"டேய் சிவா! நானே யோசிக்கயில்ல. நீ ஏன்டாப்பா பெரிசா யோசிக்கிற?... இதான் எங்கட விதியெண்டா நாங்க என்ன செய்ய முடியும்?" என்ற சிவத்தாரின் குரல் கேட்டு சுய நினைவுக்கு வந்தான்.

"போறதெண்டா நேரத்திற்கு வெளிக்கிட்டாத்தான் போய்ச்சேரலாம்." என்ற சிவா சைக்கிளை எடுத்துக் கொண்டு "அண்ண நீங்க ரெண்டு பேரும் சாமானையும் கட்டிக் கொண்டு முன்னாலபோங்க. நான் அப்பாவ ஏத்திக்கொண்டு வாறன்... அப்பா கெரியலில ஏறுங்க" என்ற சிவா பின் கெறியலில் சாக்கை மடித்துப்போட்டான் .

ரோட்டு முழுக்க சனங்களாகவே காட்சியளித்தது.. கோடை வெயிலையும் பொருட்படுத்தாமல்... தலையில மூட்டமுடிச்சும்... நாரியில குழந்தையுமா.. வயதானவர்களை சைக்கிள்களிலும்... மாட்டு வண்டிகளிலும் ஊரைவிட்டு... நகரைவிட்டு இடம் பெயர்ந்து அகதியாக மக்கள் சென்று கொண்டிருந்தார்கள்.

வயித்து வலியினால் துடிக்கின்ற பெண்... நாட்டு நிலவரம் புரியாமல் மண்ணுக்கு வர ஆசைப்படும் சிசு... தெருவோரங்களில் பிறக்கின்ற குரல்... சிவாவின் மனசு... அவன் கண்கள் கலங்கின! ஒருத்தருக்கு ஒருத்தர் பரிதாபப்பட்டுக்கொள்ள முடியுமே தவிர வேறு என்ன தான் செய்யமுடியும்?..., சிவாவின் மனசு யாரையோ திட்டித்தீர்த்தது.

"டேய் சிவா ஆடு மாடுகள அவுட்டு விட்டுத்தானே வந்த நீ... வீடு பூட்டிட்டு தானே வந்த நீ..." பின் கெரியலில் இருந்து சிவத்தார் கேட்டார்.

"எல்லாம் அவிட்டு விட்டிட்டுதான் வந்தநான். பழச திரும்பவும் கேக்கிறீங்க... நிலம தெரியாம கதைக்கிறீங்கப்பா... நாம உயிர கையில புடிச்சிக்கிட்டு ஓடுற நேரத்தில இதுகளப்பற்றி யோசிச்சி என்ன செய்ய...?" என்று மெல்லிய கோபமாய் கேட்டான் ஆர்மேலயோ இருந்த கோபத்தை தகப்பனில் காட்டிவிட்டு மனதுக்குள் வருத்தப்பட்டுக் கொண்டான் சிவா.

நீண்ட தூர மௌனத்தின் பின்... பின் கெரியல்ல இருந்த சிவத்தார்... "டேய் சிவா சைக்கிளை கொஞ்சம் நிறுத்து. மூத்திரம் வருது"... என்றவரை இறக்கிவிட்டு நின்ற சிவா, தகப்பனை திரும்பிப் பார்த்து "ரோட்டில சனமா இருக்கு கொஞ்சம் தள்ளிப் போங்கோ" என்றவன் காலை ஊன்றிக் கொண்டு சைக்கிளில் நின்றான்.

வந்த சிவத்தாருக்கு இடுப்பில் பிடித்துக் கொண்டது. கொஞ்சம் தள்ளிப் பத்தை மறைவில் உட்கார்ந்துகொண்டார்.

அப்போதுதான் அந்தச் சத்தம் கேட்டது. ஷெல் வெடித்த சத்தம்-நிலம் அதிர்ந்தது.

சத்தம் கேட்டு திரும்புமுன் படாரென்று நிலத்தில் விழுந்தான் சிவா... அவனின் காலில் வலி ஏற்பட்டது...

காலைப்பார்க்கிறான், முழங்காலுக்கு கீழ் இல்லை.

தகப்பன் நினைவு வர.. தகப்பன் இருந்த பற்றை மறைவைப் பார்க்கிறான்...

பற்றை இருந்த இடம் பெரிய பள்ளமாகித் தெரிந்தது.

"அப்...அ.அப்பா!"

தனது காலை இழந்த வலியைவிட, நெஞ்சில் தாக்கிய சோகவலியால் சிவா மூர்ச்சையானான். (கற்பனை அல்ல....)

# அம்மா அம்மாதான்

ஜெய்பு

சுந்தரிக்கு அம்மாமீது எரிச்சலும், கோபமும் பொங்கியது.

'துபாய்' செல்லும் மாப்பிள்ளையை வேண்டாம் என்று சொல்லிவிட்டு, சாதாரண சைக்கிள் கடை வைத்திருக்கும் மாப்பிள்ளையை பேசியிருக்கிறாளே? ஏன்? கேட்க முடியவில்லை. மனதுக்குள் தவித்தாள்.

வெட்கத்தைவிட்டு எப்படி அவளால் கேட்க முடியும்? நம் மண்ணில் இன்னமும் ஒட்டியிருக்கும் சம்பிரதாயம் பெண்ணின் வாயை மூடி வைத்துவிடுகிறதே.

அம்மா ஏன் இப்படிச் செய்தாள்?

எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைவதை ஏன் முறித்தாள்?

வெளிநாட்டு மாப்பிள்ளை கிடைத்தால் போதும்! எப்படியாவது அமுக்கிவிடவேண்டும் என்று ஒவ்வொருத்தரும் பறக்கிறார்கள்.

கைநிறையப் பணம். கணிசமான தங்கநகை. வசதிக்கு மேல் வசதி.

ஆனால் இந்த அம்மா என்னை இப்படி தள்ளிவிட ஏன் முடிவு செய்தாள்.

சுந்தரி குழம்பினாள்.

சீதனம் கொடுக்க வேண்டுமே என்று அஞ்சுகிறாளா?

அப்படித் தெரியவில்லை.

தன்னுடைய இரட்டை வட சங்கிலியை அழித்து சுந்தரிக்காக 15 பவுணில் புது ரகத்தில்



நகைகள் செய்து வைத்திருக்கிறாள்.

காணியை விற்று மூன்று இலட்சம் வரை வங்கியில் திருமணத்திற்காகப் போட்டு வைத்திருக்கிறாள்.

பின்னர் ஏன் இந்த மாப்பிள்ளையை எனக்கு நிச்சயித்தாள்?

கேள்விக்குறியோடு குளித்து முடித்து விட்டு வந்தவளுக்கு, பக்கத்துவீட்டு மாமிக்கு அம்மா சொல்லிக்கொண்டிருப்பது காதில் விழுந்தது.

அப்படியே நின்றாள்.

"துபாய் செல்லும் மாப்பிள்ளைக்கு செய்துவைச்சா ரெண்டு மூன்று வருஷம் புருஷனைப் பிரிந்திருக்க வேண்டும். சின்னஞ் சிறிசுகள் பிரிஞ்சிருக்கும் வயசா இது? தவிர அதொன்றும் நிரந்தரத் தொழிலில்லை.

ரெண்டு மூன்று வருஷத்துக்கு பின்னர் செலவு செய்து மறுபடி வேலை தேடவேண்டும். கிடைப்பதும் சந்தேகம்தான்.

ஆனால் சைக்கிள் கடை மகாலிங்கம் இங்கேயே நல்லா சம்பாதிக்கிறான். வருமானத்திற்கு குறையில்லை. ஆடம்பரம் நமக்கு தேவையில்லை.

வருஷக்கணக்கா கணவனை விட்டு பிரிஞ்சு வாழும் வாழ்க்கையில் சுகம் இருக்காது. காசு பணம் மட்டுமா வாழ்க்கை. அதுதான் இங்கேயே நல்ல மாப்பிள்ளையா பார்த்திருக்கிறேன். சுந்தரி கணவனோடு பிரியாமல் வாழலாமே."

அம்மா சொல்லச் சொல்ல கேட்டுக்கொண்டிருந்த சுந்தரி நெகிழ்ந்து போனாள்.

அம்மாவை ஓடிப்போய் கட்டிக் கொண்டு கொஞ்சவேண்டும் போல் இருந்தது.

# கண்எதிரே தோன்றினாள்

அதிகாலை பொழுதில், அந்த பஸ் அவனை, அந்த கிராமத்தில் இறக்கி விட்டுச் சென்றது.

கும்மென்ற பச்சை மணம். சுழித்துக் கொண்டு ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. செப்பு மாதிரியான வீடுகள். கட்டுக்கோப்பான மக்களும், அவர்களின் கள்ளங்கபடமற்ற சிரிப்புகளும்... தழையத் தழைய நடந்து தண்ணீர் எடுக்கப் போகும் பெண்கள்..

அந்தப் பெண்ணில் ஒருத்தி திவ்யாவைப் போல் இருந்தாள்.

கேசவனின் மனது 'பட்'டென்று அடித்துக் கொண்டது.

அந்தப் பெண் போய்விட்டாள்.

ச்சே! பாழும் திவ்யாவின் நினைப்பு.

'அது ஏன் மறைவதில்லை?' – அவனுள் அவனை நினைத்தே வெறுப்பு வரும். அவள் அவனின் கிராமத்து கரதலி. அவன் அவளை காதலித்தான். கிராமத்தின் எதிர்ப்புக் கூச்சல்களை மீறி இரகசியமாக தொடர்ந்து வளர்ந்த காதல்தான். அவள் இல்லாமல் அவனால் மூச்சுக் கூட விடமுடியாது என்ற நிலை.

அவளோ, "ஓடிப்போய் விடலாம் கேசவா. இல்லையேல் நம்மைக் கொன்று விடுவார்கள். என் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் ஜாதியும், பெருமையும், பெருமதிப்பும்தான் முக்கியமே தவிர, பெண்ணின் ஆசையோ, மனமோ, அவளின் உயிரோ முக்கியமல்ல... வா ஓடிப்போகலாம்... உனக்கு அம்மாதான் சப்போர்ட் பண்றாங்களே.. வா எல்லாருமா போயிடலாம்..." என்று நச்சரித்தாள்.

ஆகவே தன் பிரியமான பச்சையூர் கிராமத்தை விட்டு, ஒரு நள்ளிரவு பிரியத் தீர்மானித்தான். பட்டப்படிப்பு என்ற சொத்தை நம்பி, திவ்யாவையும், அம்மாவையும் கண்கலங்காமல் பார்த்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை விளக்கை மனதில் ஏத்திக்கொண்டு நடக்க ஆரம்பித்தான்.

ஆனால், அந்த இரவு பயங்கரமான இரவாக இருந்தது.

அவர்களை வழிமறித்த திவ்யாவின் உறவுக் கும்பல், அவன் கண்ணெதிரேயே அவன் அம்மாவை அடித்துக் கொன்றது. அவனுக்கும் மண்டை உடைந்து இரத்தம் கொட்டியது. கண் மயங்கி மூடும் முன்னர் அந்தக் கொலைக் கும்பல் திவ்யாவையும் மூர்க்கத்தனமாக தாக்கி, காருக்குள் ஏற்றியது தெரிந்தது.

அப்பப்பா... வருடங்கள் ஓடிவிட்டன.

ஆஸ்பத்திரியில் இருந்து நடைப்பிணமாக வெளியே வந்த கேசவனுக்கு வாழ்க்கை இருண்டு போய்விட்ட மாதிரி இருந்தது.

'ஒன்றுமறியாத அம்மாவை, என் காதலுக்கு பெருந்தன்மையாக பச்சைக்கொடி காட்டிய அம்மாவை சிவப்பு கொடியால் போர்த்திய மாதிரி இரத்தம் வழிய கொன்றார்களே..., நினைக்க நினைக்க அழுகை வரும். அதே சமயம், திவ்யாவின் மீது ஒரு இனம்புரியாத வெறுப்பு. 'இவளால்தானே என் அம்மாவை இழந்தேன். ச்சே!'

'பாவி... அவள் என்னடா பாவம் செய்தாள்? அவளை ஏன் வெறுக்கிறாய்? உனக்காக அவளும் தானே அடிவாங்கினாள்...' மனச் சாட்சி குரல் எழுப்பும்.

"ஐயா... ஊருக்குப் புதுசா...?"

திடுக்கிட்டுத் திரும்பினான் கேசவன்.

ஒரு கிராமத்தான் தன் முத்துப் பற்கள் காட்டி சிரித்தவாறு நின்றிருந்தான். கையில் வேப்பங்குச்சி. மினுமினுக்கும் அவன் கறுத்த மேனி காலை நேர சூரிய கிரகணத்தில் மேலும் பளீரிட்டது.

"யாரப் பார்க்க வந்தீக?" மீண்டும் அவன்.

"விவசாய அதிகாரி. மண் வள ஆராய்ச்சி செய்ய வந்திருக்கேன். ஆறு மாசம் இருப்பேன்... இங்க தங்க ஏதாச்சும் இடம் கிடைக்குமா?"

"தங்கணுமா...? கவலைய விடுங்க, வாங்க தருமர்ட்ட கூட்டிட்டு போறேன்..."

"என்ன தருமரா?"

"ஆமாய்யா. ஊர்ல பெரிய மனுஷன். தங்கமான குணம். அதான் பட்டப் பெயரே தர்மர்ன்னு ஆச்சு.. வாங்க... பெட்டிய கொடுங்க..."

தருமனைப் பார்த்ததும் 'ஷாக்'.

காரணம் இளைஞனாக இருந்தான். நல்ல தூய வெள்ளைச் சட்டை, எட்டுமுழ வேஷ்டி. அழகான கிராப். கவர்ச்சியான புன்னகை.

"வணக்கம்... நான் கேசவன். விவசாய அதிகாரி. கொஞ்ச நாள் இருப்பேன். அதுவரை சாப்பாடு, தங்கறதுக்கு இடம்..." கேசவன் முடிப்பதற்குள் தர்மன் சிரித்தான்.

"அந்த ஆளு உங்ககிட்ட சொன்னது மாதிரி நீங்க இங்க எந்தவித சங்கோஜமும் இன்றி தங்கலாம். அரண்மனை மாதிரி வீடு. ஏகப்பட்ட அறைகள். சாப்பாடு தயார் பண்ணித் தர வேலையாள். உங்க டேஸ்ட்ட மட்டும் சொல்லிட்டா போதும்... சைவமா, அசைவமா?"

"இரண்டும்...!" என்று சொன்ன கேசவனுக்கு தர்மனை ரொம்பப் பிடித்துப் போயிற்று!

சில நாட்களிலேயே தர்மனின் நல்ல குணங்கள் கண்டு வியந்து போனான் கேசவன். கிராமத்தின் நலன்களில் பெரும் பங்கு வகித்தான். சாதிச் சண்டைகள் வராமல் தடுப்பது; மருத்துவ உதவிகள் செய்வது; திருமணங்களுக்கு பணம் கொடுப்பது.. என்று பணத்தை தண்ணீராய் இறைத்தான்.

"என் அப்பா. அம்மா கற்றுத்தந்த பாடம். அவங்க இல்லை. ஆனா, சொத்து பத்து




கே.ஜி. ஜவஹர்

ஏகமா இருக்கு. பணத்தை வச்சுகிட்டு என்ன பண்ணப் போறோம்..? அத மத்தவங்களுக்காக செலவிடறதுல உள்ள ஆத்ம திருப்பதியே தனி..!' என்பான் தர்மன்.

கேசவனுக்கு, தர்மனின் பங்களா நிரம்பவே பிடித்து விட்டது! ஏகப்பட்ட அறைகள். வராந்தாவின் கோடியில் இருக்கும் ஒரு அறையில் மட்டும் எப்போதாவது சில கலாட்டாக்கள் நடப்பதும், சில பெண்கள் ஓடுவதுமாய் மர்மமாய் இருக்கும். தர்மனும் அதைப்பற்றி இதுவரை கேசவனிடம் பேசியதில்லை. எனவே, அதைப் பற்றி கேசவன் கேட்காமலேயே இருந்தான்.

ஆனால், ஒரு பெரும் அதிர்ச்சி தரும் சம்பவம் ஒன்று ஒரு நாள் ஏற்பட்டு விட்டது.

கிராமத்து பஞ்சாயத்துக்கு தர்மன் போய்விட்டான். தெருவில் நடமாட்டம் கூட இல்லை. அறையில் உட்கார்ந்து எழுதிக் கொண்டிருந்த கேசவனின் செவியை கிழிப்பது மாதிரி அந்த அறையில் இருந்து கூச்சல். 'திறந்து விடுங்கடா... என்னைத் திறந்து விடுங்கடா..' என்ற அலறல்.

கேசவன் 'சட்'டென்று எழுந்தான்.

ஓடியே போனான். அதற்குள் சில பெண்கள் ஓடி வந்துவிட்டனர். ஜன்னல் அருகே போன கேசவன் அப்படியே அதிர்ச்சியில் நிலை குலைந்தான்.

தலைவிரி கோலமாய் ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நின்றவள்...

அவனின் திவ்யா.

அப்போது ஒரு பெண் ஓடி வந்தாள்.

"ஐயா... ஆம்பளைங்க இந்த இடத்துக்கு வரக்கூடாது... போயிருங்க..." என்று அவனை பணிவாக விரட்டி விட்டாள்.

உடம்பு தெப்பமாக வியர்க்க, தலை 'கிறுகிறு' வென சுழன்றது கேசவனுக்கு. அறைக்குள் வந்து அப்படியே விழுந்தான். கண்ணீர் விட்டழுதான். அப்படியே மயங்கிப் போனான்.

தோளை யாரோ தொட்ட மாதிரி இருந்தது. விழித்தான். தர்மன் நின்று கொண்டிருந்தான்.

"கேசவன்... என்னாச்சு...?" என்று பதட்டமாய் உட்கார்ந்தான். டாக்டர்கள் நின்று கொண்டிருந்தனர்!

"நோ! எனக்கு ஒன்றுமில்லை... நத்திங்...."

ஆனால், தர்மன் விடவில்லை. டாக்டர்கள் கேசவனை சோதித்தார்கள். மருந்து கொடுத்து விட்டுச் சென்றனர்.

"பயந்துட்டீங்களா?" என்றான் தர்மன்.

"பயமா?"

"ஆமா, அந்த அறைக்கு போனீங்களாமே...?"

"ம்... வந்து..."

"பாவம். ஒரு நாள் மயக்கமாக ஆற்றில் மிதந்து வந்தாள். கரையில் ஒதுங்கினவளை இங்க கொண்டு வந்தாங்க. பைத்தியமாய் இருந்தாள். இன்னும் தன் பெயர் தெரியல. ஏழு மாசமா தீவிர சிகிச்சை நடந்துகிட்டு இருக்கு.."

"டாக்டர்கள் என்ன சொல்றாங்க..?"

"தலையில தாக்கப்பட்டு இருப்பதால், மூளை பிசகியிருச்சுன்னாங்க... பைத்தியம் தெளியறதுக்கு எத்தனை நாளாகும் என்று சொல்வதற்கில்லையாம்..."

கேசவனுக்கு அந்தப் பயங்கர இரவு நினைவுக்கு வந்தது. அவர்கள் கம்பால் திவ்யாவை தாக்கியதும் நினைவுக்கு வந்தது. மவுனமாய் அழுதான்.

"கடவுள் மிகக் கொடியவன் தர்மன்!" என்றான் கேசவன்.

"ஆம். கொடியவன்தான். பாருங்கள். இப்படிப்பட்ட அழகான பெண், தங்கச் சிலை மாதிரி, இளமையின் வாசலில் நின்று கொண்டிருப்பவள்... ஏன் இப்படி ஆனாள்..?" தர்மன் கலக்கமாய்ச் சொன்னான்.

"கேசவன்... பெண் எப்படி... அப்ஸசரசா இல்லே!"

மவுனம்.

"இவளுக்கு சரியாகணும். இவளையே நான் கல்யாணம் செய்துக்கணும்.."

திடுக்கிட்டான் கேசவன். மனசுக்குள் தீ பாய்ந்தது.

"தர்மன் இவள் யாரோ? என்ன ஊரோ? டாக்டர்கள் ஏதோ தோல்வி அதிர்ச்சியால் கூட இப்படி சித்த சுவாதீனம் வந்திருக்கலாம் என்று சொன்னதாக சொன்னார்கள். அது ஒரு வேளை காதல் தோல்வியாக இருந்தால்?" கேட்டுவிட்டு தர்மனை கூர்மையாக பார்த்தான் கேசவன்.

"காதல் தோல்வியாக கூட இருக்கலாம்," என்றான் தர்மன்.

"அப்ப நீங்க அவளை மனைவியா அடைய நினைக்கிறது.......?"

"நினைக்கிறதில் தப்பில்லையே.. ஆனா ஒன்னு, இவளுக்கு சுய நினைவுவந்து தன் பெயர் எல்லாம் சொல்லி, அவளின் காதலன் பெயரைச் சொன்னால் உடனே அவனைக் கண்டு பிடித்து தாலி கட்டச்சொல்வேன்..."

"அப்படி சரியாகாமல் இவள் பைத்தியமாகவே இருந்துவிட்டால்..?"

"நான் வாழ்நாள் முழுவதும் இவளை நன்கு கவனித்துக் கொள்வேன். அதுதான் சொன்னேனே.. இவளை என் மனம் பரிபூரணமாக விரும்புகிறது.."

"இவளை காதலித்தவன் திடீரென்று வந்து நின்று இவளை கூட்டிப் போவேன் என்றால்?"

"அது எப்படி முடியும்? இவள் அவனை தன் காதலன் என்று சொல்ல வேண்டாமா? இவள் அழகு உடலுக்கு ஆசைப்பட்டு பொய் சொல்லி யாராவது வரமாட்டான் என்பது என்ன நிச்சயம்?"

அப்போது ஒரு பெண் பணிவாய் வந்து சொன்னாள்: "ஐயா, சின்னம்மாவை பார்க்க வரீங்களா? இன்றைக்கு பரவாயில்ல!"

"வரேன். கேசவன் வாங்க. நீலாவ பார்த்துட்டு வரலாம்..."

"நீலாவா?"

"ஆம். நான் வைச்ச பெயர். வாங்க!"

"வரல. நீங்க போயிட்டு வாங்க..!"

"அட வாங்க..!"

கால் நடுங்க தர்மனைத் தொடர்ந்தான் கேசவன்.

கட்டிலில் திவ்யா உட்கார்ந்திருந்தாள். அருகே சில பெண்கள். தர்மனை பார்த்ததும் மரியாதையாய் எழுந்தனர்.

"நீலா.." என்றான் தர்மன்

ஆனால், நீலா அவனைப் பார்க்காமல் கேசவனைப் பார்த்தாள். மறுகணம் 'குபீர்' என்று எழுந்து வந்து, பாய்ந்து சென்று கேசவனின் கன்னத்தில் 'பளார்' என்று அறைந்தாள். கேசவன் நிலை குலைந்தபடி விழ, தர்மன் அவனைத் தூக்கினான். பரபரப்பு. பெண்கள் திவ்யாவை பிடித்துக் கொண்டனர்.

"சரி கேசவன். வாங்க வெளியே போயிடலாம்.. புது ஆளப் பார்த்தா நீலா சில சமயம் இப்படி ஆயிடறா," என்றான் தர்மன்

கேசவன் கண்கள் கலங்கின.

# தருவது ரசிகன்

# இலக்கிய நயம்

# முயன்றாலும் முடியாது

சிரித்தால் அதற்கு ஒரு அர்த்தம். சிணுங்கினால் அதற்கும் ஒரு விளக்கம். முறைத்தால் அதற்கும் ஒரு குத்தல். முகம் மூடிக்கொண்டால் அப்போதும் ஒரு சீண்டல்.

புவனா தோழிகளின் முற்றுகையில் கேலி அம்புகளால் துளைக்கப்பட்டுக் கொண்டிருந்தாள்.

காலையில் தான் திருமணம். மாலை மாற்றிக்கொண்டாகிவிட்டது. மாலையானதும் நெருங்கிவரும் இரவை நினைத்து நெஞ்சு கிடந்து துடித்தது.

போதாக்குறைக்கு தோழிகளின் முற்றுகை. இயல்பாக இருப்பதாகக் காட்ட ஒப்புக்காகச் சிரித்து வைப்போமே என்று சிரித்தாள்.

"நினைக்கும்போதே சிரிப்பு வருகிறது பாரடி! என்ன நினைத்துச் சிரித்தாளோ? எதை நினைத்து நகைத்தாளோ?" என்றாள் ஒருத்தி.

"போங்களடி" என்று சிணுங்கினாள் புவனா.

"பாருங்களடி! சிற்றிடையில் தொட்டோமா? சில்லென்று ஒரு முத்தம் இட்டோமோ? கனியுடல்மீது பட்டோமா? ஏனடி சிணுங்கல்?" என்றாள் ஒருத்தி.

"பள்ளியறை நாடகத்திற்கு ஒத்திகை பார்க்கிறாள்! கள்ளியடி நீயெனக்கு என்று அவர் அள்ளியெடுக்க, மனதை கொள்ளையிடும் சிணுங்கலுக்கு பயிற்சி பெறுகிறாள்." என்றாள் மற்றொருத்தி.

பொய்யாக அவளை முறைத்தாள் புவனா.

"சிப்பிக்குள் இருக்குமடி முத்து! முறைப்புக்குள் இருக்குமடி மோகம்! மறுப்புக்குள் இருக்குமடி விருப்பு! கரும்புக்குள் இருக்குமந்த சுவைபோல், நெஞ்சுக்குள் இருக்குமடி கொஞ்சுகின்ற ஆசை!"

"போங்களடி, உங்களுக்கு வாய் நீளம்!"

"வாய் நீளம் யாருக்கென்று விடிந்த பின்னர் விடை சொல்லு! செவ்வாய் நீளமோ? அதனை சிறையிட்டு கொய்தவாய் நீளமோ என்று சொல்வாய், நீ காலையில் விடை சொல்வாய்!" என்றாள் ஒரு குறும்புக்காரி.

"இதற்காகத்தான் வந்தீர்களோ? வேறு வேலையே இல்லையோ உங்களுக்கு?" கேட்டாள் புவனா.

"கசக்கிறதோ நம் பேச்சு! பேசிக் கொண்டே இருப்பதெல்லாம் கசக்கும்தான்! உதட்டு மொழியை ஒதுக்கிவிட்டு, உடல் பேசும் மொழி கேட்க இனிக்கும்தான்! கையிலே கரும்பிருக்க, கதை பேசி பொழுதைப்போக்க மனம் மறுக்கும்தான்!" என்றாள் மற்றொருத்தி.

"எல்லாமே உங்கள் நினைப்புத்தான்." என்றாள் புவனா.

"பாவமடி புவனா! ஆசையே இல்லை இவளுக்கு! பள்ளியறையில் கட்டிலுக்கு பதிலாக தொட்டிலிட்டு வைத்திருக்கிறார்களாம்?"

"ஏனடி?" "தாலாட்டி இவளை உறங்க வைக்கத்தான்!" கொல்லொன்று சிரித்தனர் பாவையர்.

முகத்தை மூடிக்கொண்டாள் புவனா.

"ஆசையிலே திறந்துகொள்ளும் அகம்! அதை மறைக்க கரத்தால் மூடிக்கொள்ளும் முகம்! நமக்கோ தெரியாது இந்த மதன



நாடகம்!" என்றாள் அனுபவப்பட்ட தோழி ஒருத்தி.

தோழிகளின் கேலி அம்புகளால் வெட்கப்பட்டாலும், மனதில் ரசிக்கத்தான் செய்தாள் புவனா.

"ஒரேயடியாக அறுசுவைவிருந்தையும் முடித்துவிடாதே! நாளைக்கும் தேவை என்று மீதிவை!" என்றாள் ஒருத்தி.

"தேக்குமர கட்டில்தானே, அதனால் முறிந்துவிடுமோ என்று பயந்துவிடாதே!" என்றாள் செவிக்குள் இன்னொருத்தி.

"பன்னீரில் குளித்த உடல். வாசனை நம்மையே வாட்டுகிறதடி! பாவம் அவர் என்ன பாடுபடப்போகிறாரோ?"

"சந்தன உடல் கண்டதும் சிந்தனை மறந்து பார்த்துக் கொண்டே இருக்கப் போகிறார்! இரவு நீளமில்லை, இப்படியே இருப்பதனால் இலாபமில்லை என்று நினைவூட்ட நாணாதே!" என்று எச்சரித்தாள் ஒரு தோழி.

"வெளியேதான் நாம் இருப்போம்! உள்ளே நடக்கும் போர் ஓசை நம் செவியில் எட்டாதிருக்கட்டும்! அதனால் நமக்கும் இன்ப அவஸ்தை கிட்டாதிருக்கட்டும்! தோழி உனக்கு சகல கலைகளும் எட்டுவதாயிருக்கட்டும்" என்று நகைத்தனர் பூஞ்சிட்டுக்கள்.

கேலியால் புரட்டி எடுக்கப்பட்ட பூவுடலை, ஆசைக் கரத்தால் புரட்டி எடுக்க காத்திருந்தான் மாறன்.

மருதாணி பூசிய கால் விரல்களை கண்நோக்க, கொஞ்சம் அச்சத்தில், மீதி வெட்கத்தில் கால்கள் தடுமாற, நெற்றியில் வியர்வைத் துளிகள் எட்டிப்பார்க்க, பால் குவளையோடு பருவ நிலவு பள்ளியறை வந்தது.

"தாமதமாய் நிலவு வந்தது. தவிப்பாலே நெஞ்சு காய்ந்தது!" என்றான் மாறன்.

புவனா பேசவில்லை.

"சிலை பேசாது தெரியும்! உடல் அழகு சிலையின் வண்ணம்! உதட்டழகு கலையின் வண்ணம்! கலை பேசும் என்பது என் எண்ணம்!"

. உளறுகிறான் என்று தெரிந்தது. கையைத் தொட்டான்.

"முதலில் பால்" என்றாள்.

"தேனோடு கலந்த பால் என்றால். குடிக்கச் சம்மதம்?"

பால் கிண்ணத்தை பெற்று அருகே வைத்தான். புவனா இப்போது அவன் கையில் கிண்ணமானாள்.

வாயிதழில் வண்டு தேன் குடித்தது. மலருக்கு மனது சுகமானது.

கொடுப்பது சுகமே என்று வாயிதழ் வள்ளலானது. கொடுத்து 'கொடுத்து சிவந்த கரம் என்பர் வள்ளல்களின் கரத்தை. வண்ணப் பெண் இதழுக்கும் தந்து தந்து சிவக்கும் இதழ் என்று உவமை சொன்னால் என்ன?' என்று நினைத்தான் மாறன்.

ஆடைகளுக்கு விடைகொடுக்கத் துடித்த கரங்களை மெல்லத் தடுத்தாள் புவனா.

"புவனா!"

"ம்"

"ஆட்களுக்கு ஓய்வுண்டு. பாவம் ஆடைகள் அவைகளுக்கு ஓய்வு வேண்டாமா?"

புவனா மனதுக்குள் சிரித்தாள். புவனா மனதுக்குள் அவன் கரம் செய்யும் செயலை ரசித்தாள்.

ஆசையை மறைக்கத்தான் நினைத்தாள். இன்ப வேள்வியில் தனக்குள்ள நாட்டத்தை மூடிவைக்கத்தான் துடித்தாள்.

அவன் கரம் செய்த விஷமமும், உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை அவன் பொழிந்த இச் ஒலி முத்தமும், பொத்தி வைத்த ஆசையை, அணையுடைத்த வெள்ளம்போல் ஆக்கிவிட்டது. தீ பற்றிக் கொண்டது.



தழுவினான், அவளும் தழுவினாள். அவன் கொடுத்த முத்தங்களுக்கு பதிலாக வட்டியோடு திருப்பிக் கொடுத்தாள். மாறன் தேரானான். அந்தத் தேரை நகர்த்தும் வடமானாள் புவனா.

மாறன் மனம் மகிழ்ந்து சொன்னான்: "இந்தப் பூனையும் பால் குடிக்குமோ என்று நினைக்க வைத்துவிட்டாய்! பொல்லாத கள்ளியடி நீ!"

அப்போதுதான் புவனா வெட்கப்பட்டாள். மறைக்க முயன்றும் ஆசை வெளிப்பட்டுவிட்டதே என்று நினைத்ததால் வந்த வெட்கம் அது.


**"மறைப்பேன்மன் காமத்தை யானோ**
**-குறிப்பின்றித்**
**தும்மல் போல் தோன்றி விடும்."**

**"தும்மலை மறைக்க முடியுமா? வராதே நில் என்று தடுக்கத்தான் முடியுமா? அதுபோலத்தான் நான் மறைக்க முயன்ற ஆசையும்"**

மனதுக்குள் சொல்லிக் கொண்டாள் புவனா!

குறள்:- 1253, அதிகாரம்:- 126

## குறுக்கெழுத்துப் போட்டி இல—146



### இடமிருந்து வலம்

01. சுகம் தரும் காற்று.
02. சிலந்தி இரை தேடி இதை விரிக்கும்.
03. வீதி விபத்துக்கள் சில பார்ப்பதற்கு இப்படி இருக்கும்.
06. ஒருவர் பிறந்த கால நேரத்தை சீராக இது எடுத்தால்தான் சரியான பலனை அறியலாம்.
09. வழிபட வேண்டிய மும்மணிகளில் ஒருவர்.
10. வில்ஸ் உலகக் கிண்ண அரை இறுதிப் போட்டி ஒன்று இந்நகரில் தான் நடைபெற்றது.

### மேலிருந்து கீழ்

01. கர்நாடக இசைக்கு உயிராக விளங்கும் பல கீர்த்தனங்கள் இம்மொழியில்தான் உள்ளன.
02. பாரம்பரியம் என்றும் கூறலாம்.
03. பாத்திரத்திலிருந்தால்தான் இதனிலும் வரும்.
04. அலுவலகங்களில் ஊழியர்களை விட இதுதான் அதிகம்.
05. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியின் சாதனை பலருக்கு இதனை ஏற்படுத்தியுள்ளது.
07. சில ஆண்களின் முக அழகினை இது மேம்படுத்திக் காட்டும்.
08. இது இல்லாவிட்டால் சிரிப்பு விகாரமாகிவிடும்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 06.04.1996 'இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-146
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

இதற்கான சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-144ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ப | ல் | 2 ல | க் | கு | ■ | 3 கொ |
| ரு | ■ | 4 வ | ன | ம் | ■ | வ் |
| த் | ■ | ங் | ■ | 5 மி | 6 த | வை |
| 7 தி | 8 யா | க | ம் | ■ | க் | ■ |
| ■ | த | ம் | ■ | ■ | கா | 9 நோ |
| 10 தா | வ | ■ | 11 ம | க | ளி | ர் |
| 12 து | ர் | வா | ச | ர் | ■ | வே |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 144இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. எஸ். நந்தினி, நாரகென்பிட்டிய.
2. எச். பீவி பாத்திமா, மடவளை.
3. கே. ஜெகநாதன், வவுனியா.
4. எம். காலித், திருகோணமலை.
5. திருமதி. சோதி சிவநாதன், ராகம.
6. எஸ். ஷர்மிளா, கல்முனை.
7. ஐ. ராஜாப்தீன், அகுங்கல்ல.
8. ஏ. ரகுலேந்திரன், மடுல்கெல.
9. திருமதி. மணிமேகலை வரதராஜன், கல்குடா.
10. கே. சங்கரதாஸ், பண்டாரவளை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

---

# சிந்தியா பதில்கள்

✉ **இந்திய கிரிக்கெட் அணியில் இடம் பெற்றுள்ள தமிழர்களுள் யாராவது ஒருவரின் முகவரியைத் தருவீர்களா?**

தர்ஷினி சுப்பையா- மட்டக்களப்பு.


*பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும்! என்ன புரியவில்லையா? இந்திய அணியில் தமிழர்கள் யாருமே இல்லையே தர்ஷினி!*

✉ **தமிழ் மக்களின் மௌனம் கலைய வேண்டும் என்று சொல்லியிருக்கிறாரே ஜனாதிபதி?**

எஸ். தனஞ்செயன்- கொழும்பு-13.

*தமிழ் மக்கள் புலிமக்களோ என்று ஜனாதிபதியே சந்தேகப்படத் தொடங்கி விட்டார் என்று தெரிகிறது.*

## டெண்டுல்கருக்கு கார்





✉ **'வில்ஸ்' உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை அணி அவுஸ்திரேலிய அணிக்கு கொடுத்த அடியை எப்படிக் கூறுவது?**

என்.ரி. அமீன்-அக்கரைப்பற்று-06.

*அதுதான்(டா)அடி. சாத்துப்படி. அவுஸ்திரேலியாவில் அவுஸ்திரேலிய அணிக்காக 13 பேர் ஆடியதால் வாங்கிய அடியை, வட்டியோடு திருப்பிக்கொடுத்த அடி.*

✉ **இந்திய அணிக்காக அருமையாக விளையாடிய டெண்டுல்கர் தோல்வியால் மனமுடைந்திருப்பாரோ?**

பா. கேசவன்- கண்டி.

*"தோல்வியை மறந்துவிட்டு இனிவரும் போட்டிகளில் விளையாடவேண்டும்" என்று டெண்டுல்கர் பேட்டி கொடுத்திருக்கிறார். ஏசியா கிண்ணம், சார்ஜா இரண்டிலும் வெற்றிபெறுவதே நோக்கம் என்று சுறுசுறுப்பாக பேட்டி கொடுத்திருக்கிறார் இளம்புயல்.*

✉ **உலகக் கிண்ணப் போட்டியில் 523 ரன்கள் குவித்தும் சச்சினுக்கு விருது கிடைக்கவில்லையே?**

கே. மகேந்திரன், புத்தளம்.

*நீங்கள் சச்சின் டெண்டுல்கரின் பரம இரசிகர் என்று தெரிகிறது. ஒரு மகிழ்ச்சியான செய்தி. தனியார் நிறுவனம் ஒன்று டெண்டுல்கருக்கு மாருதிக்கார் ஒன்றைப் பரிசாகக் கொடுத்துள்ளது.*



✉ **டியர் சிந்தியா! அஸாருதீன், சங்கீதா விவகாரம் என்னாச்சு?**

எம். அல்பேர்ட்- கொழும்பு-06.

*கர்நாடகா மாநிலத்தில் உள்ள எழில் மிகு உல்லாசபுரியொன்றில் சங்கீதாவோடு சந்தோசமாக இருக்கிறார் அஸார் என்பதுதான் லேட்டஸ்ட் செய்தி.*

✉ **இந்திய கிரிக்கெட் அணியில் மாற்றம் வருமா?**

வி. சர்மிளா, ஹட்டன்.

*ஏசியா கிண்ணப் போட்டியில் வினோத் காம்ளி தவிர்க்கப்படலாம் என்று ஒரு செய்தி. எனக்கென்னவோ அது சரியான முடிவாகப்படவில்லை. வில்ஸ் கிண்ணத்தை இந்தியா தவறவிட்டதற்கு அணி முழுவதும் தான் பொறுப்பு.*

✉ **ரஜினிக்கு அரசியலில் ஈடுபடும் விருப்பம் குறைந்தது எதனால்?**

மு. ஜோதி சங்கர்- சிலாபம்.

*இந்தியப் பிரதமர் நரசிம்மராவ்தான் காரணம் என்கிறார் சோ. ரஜினியோடு நெருக்கமாகவுள்ள சோ சொல்வது பொய்யாக இருக்காது.*

✉ **சிந்தியா! தமிழர்கள் தலை நிமிர்ந்து வாழும் காலம் எப்போது வரும்?**

எஸ். பாலு-நில்லம்ப

*வானமே எல்லை என்று ஆனந்தக் கூத்தாடும் காலம் என்று வருமோ அன்றுதான்.*

✉ **கற்பூரம், மெழுகுவர்த்தி, தீக்குச்சி இம் மூன்றிலும் எதன் தியாகம் பெரிது?**

கந்தையா கணேஷமூர்த்தி-வெதமுல்லை.

*மெழுகுவர்த்தி! இருளைவிரட்ட போராடி உயிர்விடுவது அதுதானே!*

✉ **காதலை சொல்லத் தவிக்கும் காதலர்களுக்கு கூறும் அறிவுரை?**

ஏ.சி.எம். முஸம்மில்-குளியாப்பிட்டிய.

*'இலவு காத்த கிளி' கதை தெரியாவிட்டால் தெரிந்தவர்களிடம் கேட்டறிந்து கொள்ளவும்.*

✉ **மேற்கிந்திய கிரிக்கெட் அணி வீரர் லாரா கப்டனாவாரா?**

எஸ். சூரியகுமாரி, நுவரெலியா.

*ஆகலாம்தான்; அடிக்கடி சர்ச்சைகளில் மாட்டாமல் இருக்க வேண்டும். அவுஸ்திரேலிய அணியுடன் ஏற்பட்ட தோல்வி தொடர்பாக தமது பயிற்சியாளருடன் விமானத்தில் வைத்தே மோதியிருக்கிறார் லாரா. விசாரணை நடக்கப்போகிறது. இந்த இலட்சணத்தில் எப்படி கப்டனாவது?!*

✉ **ஆண்கள் தைரியசாலிகளா? பெண்கள் தைரியசாலிகளா?**

ப. ஜெயப்பிரகாஷ்- பசறை.

*எந்த விடயத்தில் என்று குறிப்பிடவில்லையே!*

✉ **சினிமாவைத் தேடிப் போகும் அரசியல் தலைவர்கள்...?**

செல்வராணி சுப்பிரமணியம்
கொட்டகலை.

*தங்கள் நடிப்பு அனுபவத்தில் நம்பிக்கையுள்ளவர்கள்!*

✉ **டியர் சிந்தியா! என் காதலி அரே அரவிந்தசாமி என்று உளறுகிறாளே என்ன செய்யலாம்?**

பிரணவன், மட்டக்களப்பு.

*அரே பிரேமானந்தசாமி என்று உளறாமல் விட்டாளே என்று நினைத்து திருப்திப்படும்.*

✉ **இலங்கையில் இனப்பிரச்சனை தோன்றியதற்கான அடிப்படைக் காரணம் என்ன?**

சேகர் மணிசேகரம், இரட்டைப் பாதை.

*இனங்கள் இருப்பதும், அந்த இனங்களை மூட்டிவிட்டு, லாப மூட்டை கட்டும் அரசியல்வாதிகளும்.*

✉ **டியர் சிந்தியா! உலகில் அனுபவிக்க முடியாதது எது?**

எம். நியாஸ்- ஓட்டமாவடி.

*மரணம்.*

# இராமாயணம் அங்கம் 26

## பாதுகை சுமந்த பரதன்

இராமர் பரதனைப் பற்றிக் கூறிய வார்த்தைகளைக் கேட்ட இலக்குவன் உண்மையில் நிலை குலைந்து போனான். ஆத்திரத்தில் அறிவிழந்து போய்விட்டமையை நினைத்து வேதனைப்பட்டான். அண்ணன் முன் நிற்கவே நாணமுற்றான்.

நான்கு சகோதரர்களும் மூன்று வெவ்வேறு அன்னையர்க்குப்பிறந்தபோதும், பிறந்ததிலிருந்து நால்வரும் ஒரே வயிற்றுப் பிள்ளைகள் போல் வளர்ந்த முறை, ஒன்றாகக் குருகுலத்தில் கல்வி முதலான வித்தைகளைக் கற்றபோதிலும் விளையாட்டுக்களின் போதும் மிக நெருக்கமாக வாஞ்சையுடன் பழகிய முறையெல்லாம் இலக்குவன் எண்ணிப் பார்த்தான். பரதன், அண்ணன் இராமரிடம் கொண்டிருந்த பக்தியை எண்ணிப்பார்த்தான். இத்தகைய எண்ணங்கள் அலைமோத அவன் கண்கள் பனித்தன. பாசமிகு சகோதரனை 'படையெடுத்து வரும் பாதகன்,' என்று கருதி விட்டோமே என்று கவலையடைந்தான்.

### இராமரைக் கண்ட பரதன்

பரதனும் பரிவாரங்களும் சித்திரகூட மலைச்சாரலை நெருங்கிவரும்போது, வான் நோக்கி புகை கிளம்பும் ஓரிடத்தைக் குறிப்பால் கண்டு, இராமரும் சீதையும் இலக்குவனும் தங்கியிருக்கும் பர்ணசாலை அதாகத்தான் இருக்கவேண்டும் என்று கருதினான் பரதன். தன்னுடன் வந்திருந்த படைகளையும் பரிவாரங்களையும் அங்கேயே தரித்திருக்கும்படி பணித்துவிட்டு, சத்துருக்கனை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டு ஓட்டமும் நடையுமாகப் புறப்பட்டான்.

மரம் செடி கொடிகளால் அமைக்கப்பட்ட அழகிய பர்ணசாலையின் முன்புறமுள்ள ஒரு மரநிழலில் இராமர் அமர்ந்திருந்தார். அருகே சீதை இருந்தாள். இவர்களின் ஒரு புறத்தே அடக்க ஒடுக்கமாக இலக்குவன் நின்றிருந்தான். இவர்களைக் கண்டதும் பரதன் வேகமுடன், பாய்ந்தோடும் ஒரு மான்குட்டி போல் ஓடிச்சென்று இராமரின் காலடியில், கூப்பிய கரங்களுடன் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்தான். "அண்ணா" என்று ஒரே ஒரு சொல்மட்டும்தான் அவனுடைய வாயிலிருந்து வெளிவந்தது. அதே குரல்தான், இராமருக்கு, அங்கு வந்து தன் காலடியில் விழுந்தவனை 'பரதன்' என்று காட்டியது.



கானகத்தில் தவம் செய்யும் முனிவர்கள் அணியும் மரவுரி உடலில் காணப்பட்டது. தலைமுடி ஒழுங்காக வாரி அமர்த்தப்படாமல்-அலங்கோலமாகக் கிடந்தது. முகத்திலும் தாடி மீசையெல்லாம் அடர்ந்து வளர்ந்திருந்தன. தேகம் மெலிந்து சோபை இழந்திருந்தது. எவ்வளவு தான் உருமாறியிருந்த போதும், 'பாம்பின் கால் பாம்பறியும்' என்பதற்கொப்ப, வந்திருப்பது பரதன் தான் என்பதனை இராமர் அறிந்து கொண்டார். சீதையும் இலக்குவனும் கூடத்தெரிந்து கொண்டனர்.

தன் அன்புத் தம்பியை அணைத்து உச்சிமோந்து தழுவி உடலெங்கும் தன் கரங்களால் வருடிக் கொடுத்தார் இராமர். சீதையின் கண்களிலிருந்து கண்ணீர் உருண்டோடியது. இலக்குவனும் கண்ணீர் விட்டான். இலக்குவனின் கண்ணீரில்- சகோதர பாசத்துடன், 'இத்தகைய பாசமுள்ள சகோதரனைச் சந்தேகித்தோமே' என்ற உணர்வும், மானசீகமாக, பரதனிடம் மன்னிப்புக்கோரும் தன்மையும் இணைந்திருந்தது.

பரதனால் பல விநாடிகள் பேசமுடியவில்லை. நா தழுதழுத்தது. "அண்ணா, அண்ணா" என்ற ஒரே வார்த்தை மட்டும்தான் வெளிவந்தது. பரதனின் வேகத்துடன் போட்டி போட்டு ஓடி வர முடியாத சத்துருக்கனும் அப்போது அங்கு வந்து சேர்ந்தான். அவனும் ஒரே அழுது புலம்பினான். இருவரையும் ஓரளவு தேற்றிவிட்டு இராமர், தான் பேச ஆரம்பித்தார்:

"தம்பி! வயதான அப்பாவுடன் இருந்து இராச்சிய பரிபாலனத்தைக் கவனிக்க வேண்டிய நீ, இப்படி தவக்கோலம் பூண்டு வனத்துக்கு ஏன் வரவேண்டும்?" என்று கேட்டதும் பரதன் மீண்டும் பலத்த சப்தத்துடன் ஓவெனக் கதறலானான்.

"அண்ணா! எனக்கென்ன இராச்சியம்? எனக்கென்ன ஆட்சி? மரபு முறைப்படி அயோத்திக்கு அரசனாகவேண்டியவர் தாங்களே! கொடியவளான என் தாய் செய்த சூழ்ச்சியால் ஒரு பாவமும் அறியாத நான் பெரும்பழி சுமக்க நேரிட்டு விட்டது. "அயோத்தியிலிருந்து ஆட்சிபுரிய வேண்டிய நீ" என்று தாங்களே குறிப்பிட்டு என்னை மேலும் பாபக் கடலில் தள்ளி விடுகிறீர்களே அண்ணா!" என்று தேம்பித் தேம்பி அழலானான்.

### தந்தை மறைந்த செய்தி கேட்ட தனயன்

இராமர் மேலும் இறுக அணைத்தவாறு, "குழந்தாய்! தாயை நிந்திக்கலாகாது. அது மகாபாபம். விதிப்படிதான் எல்லாம் நடக்கும். அப்பா நலமுடனிருக்கிறாரா? அவரா உன்னை இங்கு அனுப்பிவைத்தார்?" என்று இராமர் கேட்டதும் பரதன், "அப்பா" என்று பலமாக அலறியவண்ணம் மூர்ச்சித்தான். சத்துருக்கனும் தேம்பித்தேம்பி அழுதான். சற்று நேரத்தில் கண் விழித்த பரதன், "அண்ணா! மாபெரும் வேள்விகளையெல்லாம் செய்து, வெற்றிமேல் வெற்றி ஈட்டி, ஈடும் இணையுமில்லாது ஆட்சி புரிந்த சக்கரவர்த்தியான எம் தந்தை, தங்கள் பிரிவைத் தாங்காமல் பூத உடல் நீத்துப் புகழுடம்பெய்திவிட்டார் அண்ணா..." என்று வார்த்தைகளை முடிப்பதற்குள்ளாக இராமபிரானுடைய கண்கள் செருகிக் கொண்டன. இருந்த வண்ணமே சரிந்த அவரை சீதை தன் மடியில் தாங்கிக்கொண்டாள். இலக்குவன் கமண்டலத்திலிருந்து நீரெடுத்து இராமரின் முகத்தில் தெளித்தான். அக்கமண்டலத்தின் நீராலா அல்லது இலக்குவனும் சீதையும் கவலை மேலீட்டால் உகுத்த கண்ணீர் முகத்தில் பட்டதாலா என்று கண்டுகொள்ள முடியாதபடி இராமர் கண்களைத் திறந்தார்.

வேதனையால் தொண்டை வரண்டது; நாக்குத் தளதளத்தது; கண்ணீர் கடலெனப் பெருக்கெடுத்தது. பாசத்தை ஊட்டித் தன்னைப் பக்குவமாய் வளர்த்தெடுத்த தந்தை பிரிந்த செய்தி அந்தத் தெய்வீகத்திரு அவதாரத்தையே நிலை குலையச் செய்துவிட்டது.

☆★☆

கம்பநாட்டாழ்வார் இராமரின் புலம்பலை மிக உருக்கமான வரிகளில் வடித்திருக்கின்றார். அயோத்தியா காண்டத்தில் திருவடி சூட்டு படலத்தில் மொத்தம் ஏழு பாக்களில் இராமரின் புலம்பலை புலவர் வர்ணிக்கும் பாங்கு- பொருளுணர்ந்து படிப்போரின் நெஞ்சங்களை நெகிழவைக்கும்.

**தேன் அடைந்த சோலைத்**
**திரு நாடு கைவிட்டுக்**
**கான் அடைந்தேன் என்னத்**
**தரியாது காவலா நீ**
**வான் அடைந்தாய் இன்னும்**
**இருந்தேன் நான் வாழ்வு உகந்தே**
**ஊன் அடைந்த தெவ்வர்**
**உயிர் அடைந்த ஒள் வேலோய்**

*(அயோத்தியா காண்டம்-1121.)*

பொருள்:

செருக்கினை உடைய பகைவர்களை கொல்லும் ஒளி பொருந்திய வேலையுடைய காவலனே! தேன் சொரிகின்ற சோலைகளைக் கொண்ட அழகிய நாட்டை விட்டு நீங்கி கானகம் சென்றுவிட்டேன் என்று துயரம் தாங்காமல் நீ வானகம் புகுந்து விட்டாய். ஆனால் நானோ இந்த வாழ்வே சிறந்தது என்று எண்ணி இன்னமும் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறேனே!

இவ்வாறு இராமர் அழுது புலம்பிக் கொண்டிருக்கும் போது வசிட்ட மாமுனிவரும் அமைச்சர் சுமந்திரரும் குகனும் அங்கு வந்து சேர்ந்தனர். அவர்களும் பல தேறுதல் வார்த்தைகளை இராமருக்கு எடுத்துரைத்தனர். இதனைத் தொடர்ந்து அரசிகளான கோசலாதேவி, சுமந்திராதேவி ஆகியோருடன் கைகேயியும் அங்கு வந்தார். அன்னையர் மூவரையும் அடிதொழுது இராமர் வணங்கினார். தொடர்ந்து சீதையும் இலக் குவனும் வணக்கம் செலுத்தினர். கோசலாதேவியார் இராமரைவிட தனது மருமகளின் மரவுரிக் கோலம் கண்டு மனம் வருந்தினார். அரசபோகத்தில்- அரண்மனை வாழ்வில் மகிழ்ந்திருக்க வேண்டிய அரசிளங்குமரிக்கு கொடிய விலங்குகளும், கல்லும் முள்ளும் நிறைந்த கானகத்தில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டதே என்பதை எண்ணிக் கலங்கினார். சீதையோ, தான் கைப்பிடித்த கணவன் அருகில் மிக்க மகிழ்ச்சியாகவே இருப்பதாகக் கூறி மாமியாரைத் தேற்றினார்.

பரதனுடன் வந்த ஏனைய மந்திரிகளும் பிரதானிகளும் பரிவாரங்களும் சித்திரகூடத்தில் வந்து நிரம்பி விட்டனர். அனைவருக்கும் அங்கு இராமரைக் கண்டதும் பேரானந்தம் ஏற்பட்டது. அதுமட்டுமல்லாமல், அன்னையர் மூவருடன் அருந்தனையர்கள் நால்வரும் சீதையும் சேர்ந்திருப்பதைக் கண்டதும் பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. அவர்கள் இருந்த தோற்றத்தைக் கண்டதும், இராமர் மீண்டும் அயோத்தி திரும்பி அரியணையிலமர்ந்து ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுவிடுவார் என்றே எண்ணத் தலைப்பட்டனர்.

### "தந்தை சொல் மீற மாட்டேன்"

மாமன்னர் பிரிந்த துயரம் ஓரளவு தீர்ந்து சிரமபரிகாரங்களும் முடிந்த பின்னர் இராமர், இலக்குவன், பரதன், சத்துருக்கனுடன் வசிட்ட மாமுனிவரும் அமைச்சர் சுமந்திரரும் மட்டும் தனியாக இருந்து அரசியல் பிரச்சனைகளை அலச ஆரம்பித்தனர். வசிட்டரும் சுமந்திரரும், கேகயத்திலிருந்து பரதன் திரும்பிய நேரத்திலிருந்து அவையில் பரதன் எடுத்துக் கொண்ட சபதத்தையும், எவ்வகையிலும் இராமரை அயோத்திக்கு அழைத்துச் செல்லத் தாங்கள் அனைவரும் புறப்பட்டு வந்துள்ள நோக்கத்தையும் எடுத்து விபரமாக இராமருக்கு விளக்கினார்கள். ஆனால் இராமரோ, தந்தையின் கட்டளைப்படி 14 அண்டுகள் வனவாசம் முடியாமல்- நாடு திரும்பப் போவதில்லை எனறு மிகக் கண்டிப்புடன் கூறிவிட்டார்.

### பாதுகையைப் பெற்ற பரதன்

அரசர் கட்டளை பிறப்பிக்கக் காரணமாயிருந்த கைகேயி, தனது ஆசை நிராசையாகிவிட்டிருந்தமையினாலும் தன் மகன் இராச்சிய பாரம் ஏற்கப்போவதில்லை என்று திட்டவட்டமாக அறிவித்து விட்டமையினாலும் இராமரே பட்டம் சூட்டிக் கொள்வதற்குப் பூரண சம்மதமளிப்பதாகக் கூறினார். கட்டளை பிறப்பித்த சக்கரவர்த்தி மரணமடைந்து விட்டமையினால்- தற்போதுள்ள சூழ்நிலையில்-இராமர் அயோத்தி திரும்புவதில் எத்தகைய பிசகும் ஏற்படப்போவதில்லை என்று வசிட்ட மாமுனிவர் சாஸ்திரங்களிலிருந்து எடுத்துக்காட்டுக்களைக் கூறினார். ஆனால், தந்தையாரின் வார்த்தையை மீறி அவரை 'சத்தியம் தவறியவர்' என்று எவரும்- எக்காலத்திலும் எடுத்துக் கூற சந்தர்ப்பம் அளிக்கப்போவதில்லை என்று இராமர் கூறிவிட்டார்.

இராமரின் இம்முடிவினால் பரதன் மென்மேலும் வருந்தினான். அழுதழுது அண்ணனின் கால்களை கண்ணீரால் அபிஷேகம் செய்தும் பலன் இல்லாமல்போகவே, இறுதியாக அண்ணன் இராமரிடம் ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தான். இராமரின் இரு பாதணிகளையும் தந்தால் அவற்றை அயோத்தியின் அரியணையில் ஏற்றிவைத்து அதன் கீழிருந்து நாட்டைப் பரிபாலிக்கச் சம்மதம் தருமாறு பரதன் கேட்டான். இத்தகைய பெருந்தன்மையாளனான ஒரு தம்பி, ஈரேழு பதினான்கு உலகிலும், எவருக்கும் கிடைக்கப் போவதில்லை என்று வியந்தனர் அனைவரும். எல்லோருடைய கண்களும் பனித்தன.

பரதனை ஆரத்தழுவிய இராமர் அவனுடைய இருகைகளையும் பற்றி தன் கண்களில் ஒற்றிக் கொண்டார். தனது இரு பாதுகைகளையும் கழற்றி வைத்தார். அதற்கு மலர்களைத் தூவி, மலர் மாலையிட்டு தன் சிரசின் மேல் வைத்த வண்ணம் பரதன் புறப்பட்டான். அவனைத் தொடர்ந்து ஏனையோரும் அயோத்தி நோக்கிப் பயணத்தைத் தொடர்ந்தனர்.

சிறிது தூரம் வரை இராமரும் சீதையும் இலக்குமணனும் தொடர்ந்து வந்து வழி அனுப்பி விட்டுத் திரும்புகையில், இலக்குவன் இராமரின் கால்களில், வெட்டப்பட்ட பெரு விருட்சம் போல் வீழ்ந்தான்.

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

### இராமாயணப் போட்டி: 24

சரியானவிடை:- இல்லை

1. பஸ்லா.
635/2, மல்வத்தை, மல்வானை.
2. கி. கமலவேணி.
169/3, பிரதான வீதி, திருகோணமலை.
3. தெ. பராளசிங்கம்.
பாடசாலை வீதி, மகிழூர்-களுவாஞ்சிக்குடி.
4. ஜெஸ்மின் சாந்தலிங்கம்.
101/32, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.
5. வீ. கோமதி. உப தபாலகம், களுவன் கேணி.

**போட்டி இல. 26** கேள்வி:- தேன் அடைந்த சோலைத் திருநாடு என்று குறிப்பிடப்படும் நாடு எது?

ஏப்ரல்.06க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.26, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**


## கப்டன் ரணதுங்காவுக்கு பிரபா வாழ்த்து

**விடுதலைப் புலிகளின் தலைவர்– வே.பிரபாகரனிடம் சற்றலைற் தொலைபேசி இருக்கிறதல்லவா. இலங்கை அணி வெற்றி பெற்ற செய்தியறிந்து, கப்டன் ரணதுங்காவோடு பிரபாகரன் தொடர்புகொண்டால் என்ன பேசுவார்? ஒரு கற்பனை.**

**பிரபா:-** ஹலோ மிஸ்டர் ரணதுங்கா, நான் பிரபாகரன் பேசுகிறேன்.

**ரண:-** (ஆச்சரியமான குரலில்) எந்தப் பிரபாகரன்?

**பிரபா:-** (சிரிக்கிறார்) நாட்டிலே பல பிரபாகரன்கள் இருக்கலாம். அவர்களெல்லாம் தங்கள் பெயர்களை சொல்லவே அஞ்சிக் கொண்டிருக்கிறார்கள். அடையாள அட்டையைக் காண்பிக்கவே பயந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிலே சிலர் தங்கள் பெயர்களையே மாற்றிக் கொண்டிருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். பெயர் சொல்லிப் பேசும் ஒரே ஒரு பிரபாகரன் யாராக இருக்கும் என்று உமக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.



**ரண:-** புரிகிறது. புரிகிறது. மிக்க மகிழ்ச்சி.

**பிரபா:-** எதற்கு மகிழ்ச்சி.

**ரண:-** போன் செய்ததற்கு.

**பிரபா:-** (சிரித்துவிட்டு) போன் செய்ததற்கா? அல்லது கொழும்பிலும், கண்டியிலும் நடந்த உங்கள் கிரிக்கெட் போட்டிக்கு இடையூறு செய்யாமல் இருந்ததற்காகவா?

**ரண:-** இரண்டுக்கும் என்று வைத்துக் கொள்ளுங்களேன். நமது விளையாட்டு எப்படி?

**பிரபா:-** அபாரம். அபாரம். என்ன பொருத்தம், நமக்குள் என்ன பொருத்தம் என்று உம்மை நினைத்து வியந்துபோனேன்.

**ரண:-** அப்படியா, ஏன்?

**பிரபா:-** நீர் உமது வீரர்களிடம் பந்தைக் கொடுத்து விக்கெட்டை சாய்க்க அனுப்புகிறீர். நான் எனது வீரர்களிடம் குண்டைக் கொடுத்து விரோதிகளை சாய்க்க அனுப்புகிறேன்.

**ரண:-** (சிரிக்கிறார்)

**பிரபா:-** அது மட்டுமா, மேலும் கேளும், நீங்கள் பந்தோடு விளையாடுகிறீர்கள். நாங்கள் குண்டோடு விளையாடுகிறோம். நீங்கள் பந்தை அடித்து ரன்குவிக்கிறீர்கள். நாங்கள் படைகளை அடித்து ரன் குவிக்கிறோம். ஆனால் ஒன்று, நீங்கள் அடிக்கடி ஆட்டமிழப்பீர்கள், நான் ஆட்டமிழக்காமலேயே மைதானங்களை மாற்றி மாற்றி ஆடிக் கொண்டேயிருக்கிறேன். நேற்று யாழ்ப்பாணத்தில், இன்று வன்னியில், நாளை.... (சிரிக்கிறார்)

**ரண:-** அவுட்டானால் கூட அம்பயர்கள் சொல்லமாட்டார்கள். எங்கே தங்களை அவுட்டாக்கி விடுவீர்களோ என்று பயம்.

**பிரபா:-** இந்தக் கிண்டல்தானே வேண்டாம் என்கிறது. உமக்கு அரசியலில் ஈடுபடும் எண்ணம் ஏதாவது இருக்கிறதா?

**ரண:-** கிடையவே கிடையாது; ஏன் கேட்கிறீர்கள்?

**பிரபா:-** நீர் தலைவராக வேண்டும் என்றால் சொல்லும், நான் ஏற்பாடு செய்கிறேன்.

**ரண:-** அதனை மக்கள் அல்லவா தீர்மானிக்க வேண்டும்.

**பிரபா:-** (உரத்து நகைத்துவிட்டு) புலிகளே மக்கள். மக்களே புலிகள்! நான் இருப்பது வடக்கே என்றாலும், தெற்கின் அரசியல் தலைவிதியும் என்னால்தான் தீர்மானிக்கப் படுகிறது. வேட்பாளர்களை தெரிவு செய்யும் உரிமை கட்சிகளுக்கு இருக்கலாம். அந்த வேட்பாளர்களில் யார் யாரெல்லாம் போட்டியிடலாம் என்பதை இறுதியாக தீர்மானிப்பது நான் தான். நான் வடிகட்டிக் கொடுக்கிறேன். பின்னர் தான் வாக்காளர்கள் தெரிவுசெய்கிறார்கள்.

**ரண:-** அதுதான் அரசியலே வேண்டாம் என்று ஆணித்தரமாக கூறிவிட்டேன். கிரிக்கெட்டில் ".போர் அடித்தால் ரசிகர்கள் அகமகிழ்வார்கள். அரசியலில் ".போர் ".போராக அடித்தால் எதிரிகள்தான் அதிகமாவார்கள்.

**பிரபா:-** அப்படியானால் நாம் நண்பர்களாக நீடிக்கலாம் என்று நினைக்கிறேன்.

**ரண:-** நானு ம் அரசியலுக்கு வந்தால்.....?

**பிரபா:-** அரசியலில் நிரந்தர நண்பர்களும் கிடையாது. நிரந்தர எதிரிகளும் கிடையாது. நேற்று வாழ்த்துச் சொன்னவருக்கு இன்று சாய்க்கச் சொல்லி ஆள் அனுப்பவேண்டியிருக்கும். இன்று பூச் செண்டு கொடுப்பவருக்கே, நாளை பூவுக்குள் குண்டு வைத்து அனுப்ப வேண்டியிருக்கும். (சிரிக்கிறார்)

**(அத்தோடு தொலைபேசி தொடர்பு அறுந்து விடுகிறது.)**

காதிலை பூ கந்தசாமி

## தோற்பதற்காகவே தொடர்ந்து போராடினோம்

## இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் பேட்டி

**நடந்து முடிந்த உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி விளையாடிய விதம் சரியாக இல்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு. உடனே இந்திய அணி கப்டன் அசாருதீனுடன் ஒரு கற்பனைப் பேட்டியை கண்டுவிட்டார் காதிலை பூ கந்தசாமி.**

**கா.பூ.க:-** ***என்ன அசார், ரொம்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் போல இருக்கிறது. என் வாழ்த்துக்களையும் தருகிறேன். வாங்கிவைத்துக் கொள்ளுங்கள்.***

**அசார்:-** எதற்காக வாழ்த்துகிறீர்.

**கா.பூ.க:-** ***வெற்றிபெற வேண்டும் என்று விளையாடுகிற அணிகளும் இருக்கின்றன. தோல்விகண்டேயாகவேண்டும் என்று விளையாடும் அணிகளும் இருக்கின்றன. இதிலே நீங்கள் எந்த ரகம் என்று உங்களுக்கும் தெரியும். எனக்கும் தெரியும். உங்கள் அபிமானிகளுக்குத்தான் விஷய ஞானம் போதாது. வெற்றியை உதைத்துத்தள்ளிவிட்டீர்கள் என்று அநியாயமாக உளறிக் கொண்டிருக்கிறார்கள்.***

**அசார்:-** சபாஷ், அப்படிப் போடு! பவுண்டரியும், சிக்ஸரும், ஓடி ஓடி சேர்க்கும் ரன்னும் குவிப்பதால் என்ன பயன்? காதற்ற ஊசியும் கடைவழிக்கு வராது. குவிக்கின்ற ரன்னோ கூடவரும். மறுதரப்பு வெல்ல வேண்டும் என்ற நம் தரப்பின் பொதுநோக்கம் கிரிக்கெட் வரலாறு உள்ளவரை வாழும். வரலாற்றில் இடம்பிடிக்கத்தான் பிடிவாதமாக தோற்றுப் போனோம்.

**கா.பூ.க:-** ***பாகிஸ்தானுடன் மட்டும் வெளுத்து வாங்கினீர்களே அது ஏன்?***

**அசார்:-** தவறுதான். இந்த அனில் கும்ளே, வெங்கடேஷ் பிரசாத், ஸ்ரீநாத் போன்றவர்களைத்தான் கண்டிக்க வேண்டும். சொந்தஊர் முன்பாக ஷோ காட்டும் ஆர்வத்தில் பந்துகளை தவறுதலாக விக்கெட்டுக்களை நோக்கி வீசிவிட்டார்கள் கப்டன் என்றரீதியில் தவறுதலுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்.

**கா.பூ.க:-** ***இலங்கை அணியுடன் ஏற்பட்ட தோல்வி மகிழ்ச்சிதானே?***

**அசார்:-** மிக மிக மகிழ்ச்சி. இலங்கை அணி தரமான அணி என்பதால் நாங்கள் தோல்விக்காக அதிகம் போராடவேண்டி இருக்க வில்லை. இன்னமும் ரன்களை குவித்திருக்கலாம் என்பது உண்மைதான். ஆனால் அதில் ஒரு சிக்கல் இருப்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

**கா.பூ.க:-** ***என்ன சிக்கல் மிஸ்டர் அசாருதீன்?***

**அசார்:-** ரன் குவிக்கும் அர்வத்தில் நாம் விளையாட ஆரம்பிக்க தப்பித் தவறி வெற்றி பெற்றுத் தொலைத்திருந்தால், நம் இலட்சியம் பவுண்டரியோடு பவுண்டரியாக பறந்திருக்கும் அல்லவா.

**கா.பூ.க:-** ***உங்கள் இலட்சிய உறுதி புல்லரிக்கவைக்கிறது. உலகக் கிண்ணத் தொடரில் உங்கள் அணியில் சிறப்பாக ஆடி தோல்விக்கு ஒத்துழைத்த வீரர் யார் என்று கூற முடியுமா?***

**அசார்:-** மனோஜ் பிரபாகரைத்தான் உடனடியாகக் கூறமுடியும். பாகிஸ்தானுடன் நடந்த போட்டியில் மட்டும் இலக்கை மறந்து ஜடேஜா உணர்ச்சி வசப்பட்டாலும்கூட, பொதுவாகவே தோல்விகாணும் ஆர்வத்தோடு அருமையாக விக்கெட்டை பறிகொடுத்தார். பிடிக்கக்கூடிய வகையில் பந்தை அடித்தாடினார். நான்கூட குறைசொல்ல முடியாதளவுக்குத்தான் தோல்விகாணும் ஆவலோடு ஆடினேன்.

**கா.பூ.க:-** ***சச்சின் டெண்டுல்கர்.....?***

**அசார்:-** (குறுக்கிட்டு) அவருக்கு ஞாபகசக்தி சட்டுச் சட்டென்று குறைந்துபோகிறது என்று நினைக்கிறேன். ஒரு ரன் அடித்தால் நூறு ரன் அடித்தமாதிரி என்று சொல்லியனுப்பினேன், அவர் நூறுரன் அடித்தால் ஒரு ரன் அடித்தமாதிரி என்று நினைத்துக் கொண்டு இரண்டுமுறை ஆடிவிட்டார். (அசார் குலுங்கிக் குலுங்கி சிரிக்கிறார்)

**கா.பூ.க:-** ***(நானும் சிரிப்பை அடக்க முடியாமல் வெடித்துவிட்டு) வினோத் கம்ளியும் ஒரு செஞ்சரி போட்டாரே, கவனித்தீர்களா?***

**அசார்-** (மறுபடி சிரிப்பு வெடிக்கிறது) நூறுரன் எடுத்தால் போதும் என்பதுதான் அணியின் முடிவு. அவர் காதிலே கடுக்கன் அணிந்து இருப்பதால் நாம் சொன்னது அதில் பட்டுத் தெறித்துவிட்டதென்று நினைக்கிறேன். அவர் மட்டும் தனியாக நூறு ரன்கள் சேகரிக்க வேண்டும் என்று சொல்கிறோம் என்று நினைத்துவிட்டார்.

**கா.பூ.க:-** ***ஜடேஜா கூட 25 பந்தில் 45 ரன்களை குவித்து அசத்தினாரே, மறந்து விட்டீர்களா?***

**அசார்:-** ஓ.. அதுவா... பார்வையாளர் பகுதியில் காணப்பட்ட வெப்ப தட்ப நிலையால் அவர் பாதிக்கப்பட்டுவிட்டார்

**கா.பூ.க:-** ***புரியவில்லையே அசார்?***

**அசார்:-** (குறும்பாக சிரிக்கிறார்) வழக்கத்தை விட அதிகமான ரசிகைகள் பார்வையாளர் பகுதியில் இருப்பதை பார்த்துத் தொலைத்து விட்டார். இனிய இளைஞரல்லவா, அதுதான் உணர்ச்சிவசப்பட்டுவிட்டார்.

**கா.பூ.க:-** எப்படியோ தோல்வியைப் படைக்கும் இலட்சியப் பயணத்தில் எதிர்ப்பட்ட இடையூறுகளை பந்துகளாக நினைத்து சிக்ஸர்களாக அடித்துத் தூள் பண்ணி விட்டீர்கள். அதனால்தான் வெற்றிகரமாக வெறுங்கையுடன் திரும்ப முடிந்திருக்கிறது என்று நினைக்கும் போது பாராட்ட வார்த்தைகளே கிடைக்கவில்லை.

**(விடைபெற்றுக்கொண்டோம். உள்ளேயிருந்து யாரோ எட்டிப்பார்த்தார்கள்... அது.. அடசங்கீதா!)**

அருள் ஜுவலர்ஸ்
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11



படத்தில் இருப்பதுதான உலகில் மிகச் சிறிய மோட்டார் சைக்கிள். நீளம் 108 மில்லிமீட்டர். உயரம் 95 மில்லிமீட்டர். முன் சில்லு 19 மி.மீட்டர். பின் சில்லு 24 மி.மீட்டர். ஆள் இருந்து செலுத்த முடியாது. ஒரு காலால் மட்டுமே செலுத்தி 1 மீற்றர் ஓடிக்காட்டியிருக்கிறார்கள். அதுவே உலக சாதனையாகி விட்டது.

இதனை உருவாக்கியவர் புரோக்கிரஸ்ஸிவ் என்ஜினியரிங் நிறுவன உரிமையாளர் சிமன் சிம்போர்வி. உலக அதிசயத்திற்காக என்றுதான் உருவாக்கப்பட்டது.

## கையளவு பிரமாதம்

அம்மன் ஜுவல்
AMMAN JEWEL
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
29 செட்டியார் தெரு, கொழும்பு 11
332033

## கோபக்கார வீரர்



96 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியில் சிறப்பாக ஆடியவர்களில் ஒருவர் குருசிங்கா. விக்கெட்டுக்கள் சாயத் தொடங்கிவிட்டால், குருசிங்காவை இறக்கினால் போதும். விக்கெட்டை காப்பாற்றிக் கொண்டிருப்பார். தற்காப்பு ஆட்டத்தில் கில்லாடி. இணைப்பாட்டத்தில் ஒரு விளாசல் மன்னர் குருசிங்காவோடு ஜோடி சேர்ந்துவிட்டால் நிதானமும், விளாசலும் கலந்து அந்த ஜோடி புகுந்து விளையாடும்.

ஆட்டத்தில் நிதானம் இருந்தாலும் குருசிங்கா கோபக்காரர்தான். உலகக் கிண்ணத்தை வீரர்களிடம் இருந்து பறித்துவைத்திருந்தவரிடம் அதனை பறித்தெடுத்த ஆவேசம், வெற்றிக்குப் பின்னர் விக்கெட்டுக்களை நினைவுப் பொருளாக கொண்டுசெல்ல முற்றும்போது, சகவீரர்களோடு முரண்டு பிடித்தல் எனப்பலவற்றை குருசிங்காவிடம் கவனிக்க முடிந்தது. கோபமும் தேவைதான்.

## 96 இன் ஹீரோ



உலகக் கிண்ணத்தை கைப்பற்றிய பின்னர் கப்டன் ரணதுங்கா கொடுத்த பேட்டிகளில் அடக்கம் பளிச்பளிச்.

கப்டனாகிவிட்டால் ஆட்டத்திறமை பாதிக்கப்படும். கவலைகள் அதிகமாகும் என்பதெல்லாம் கப்டன் ரணதுங்காவுக்கு பொருந்தாது.

கப்டன் பதவி என்பது அனுபவம் திறமை என்பவற்றின் அடிப்படையில் கிடைப்பது. அதனை நிரூபிக்கும் கப்டனே சிறந்தவர். இல்லாவிட்டால் கப்டன் பதவி திறமையான வீரருக்கு கொடுப்பது அவர் திறமைக்கு கேடு என்றாகிவிடும். கப்டன்களுக்கு முன்னுதாரணமாகியிருக்கிறார் ரணதுங்கா. 96 இன் ஹீரோ!

மார்ச் 14, 1996.

இலங்கையின் வரலாற்றில் மறக்கமுடியாத நாள்! இலங்கையின் கையில் உலகக் கிண்ணம். ரசிகர்கள் நெஞ்சத்தில் ஆனந்த தாண்டவம்.

இரத்தமும் சகதியும் கலந்து வன்முறை இலைகவிட்ட மண்ணிலிருந்து.

அபிவிருத்தியும், ஆக்கப்பணிகளும் மறந்து, போருக்கே அனைத்தையும் தாரை வார்க்கும் மண்ணிலிருந்து.

உலகமே மூக்கின்மேல் விரல்வைத்து வியக்குமளவுக்கு ஒரு அணி உருவானதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்.

அதற்குக் காரணம், நாடு கொடுத்த உற்சாகம் என்று சொல்வது பொய்!

தினந்தோறும் பிணம் தவிக்கும் போர் நாட்டுக்கு தமது விளையாட்டு அணியை சீராட்டி வளர்க்க நேரம் ஏது?

ஆகவே, வெற்றியின் காரணத்தில் 95 வீதம் இலங்கைக் கிரிக்கெட் அணி வீரர்களுக்கே உரியது.


பல தோல்விகளைக் கண்டு, அடிவாங்கி, அடிகொடுத்து தாமாகவே தங்களை புடம் போட்டுக் கொண்டார்கள்.

உலகக் கிண்ணத்தை இலங்கை கைப்பற்றும் என்பதில் நம்பிக்கை இல்லாமல் இருந்துவிட்டு, இறுதிப்போட்டிக்கு அணி தகுதியானதும் பரிசுகள், வெகுமதிகள் அறிவிக்கப்பட்டதும் கவனிக்கப்பட வேண்டியதுதான்.

ஆனால், அணி போராடியது பரிசுகளை எதிர்பார்த்தல்ல என்பது உண்மை. அதனை கப்டன் ரணதுங்காவே சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டது தான் சோகம்!

இலங்கை அணி கிண்ணத்துடன் வந்தபின்னர் இன்ப அதிர்ச்சியாக பரிசுகளை கொடுத்திருக்கலாம். ஆசை காட்டுவது போல முன்கூட்டியே அறிவிப்புக்கள் செய்தது சரியல்ல.

## அன்புடன் உங்களுக்கு





## சீறியெழும் சிங்கம்

பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய வெற்றிக்குக் காரணகர்த்தாக்களில் மிக முக்கியமானவர் சித்து. இந்திய அணியில் உள்ள ஏனைய வீரர்களைப் போல அதிகம் விளம்பரப் படுத்தப்படாதவர். ஆனால், நிலைத்து ஆடத்தொடங்கிவிட்டார் என்றால் உற்சாகம் மடை திறந்த வெள்ளமாகிவிடும்.

பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்தியப் படை நம்பியிருப்பதும் சீக்கிய வீரர்களைத்தான். பாகிஸ்தானுக்கு எதிரான கிரிக்கெட் போரிலும் இந்தியாவை முன்னோக்கி நகர்த்தியது சீக்கியரான சித்துதான்.

அணிக்காக, நாட்டுக்காக என்று விளையாடும் உறுதிதான் சித்துவின் தனித்துவம். அதனால் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 99 ரன்களோடு திரும்பினார் சித்து. பந்து தடுப்பதிலும் ஆள் சூரர்.

ஆவேசமாய் சீறியெழும் இந்த சிங்கத்திற்கு இந்திய பத்திரிகைகள் கூட அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பதுதான் கவலைக்குரியது.

← முரசின் வாரம் ஒரு பட்டுச் சேலைப் போட்டியின் அதிஷ்டசாலிகளில் ஒருவரான திருமதி ச. ஜெயகௌரி (93/4, கன்னாரத் தெரு, கொழும்பு-13) அவர்களுக்கு பட்டுச் சேலை பரிசை வழங்கிய முரசின் உதவி ஆசிரியர்களில் ஒருவரான கலைமணி இரா பத்மநாதன் புன்னகையோடு.

## பிறந்த நாள் வாழ்த்து

### முதலாவது பிறந்த நாள்

(7. 03. 96)

### பாத்திமா ஷைஸ்னா

இலங்கை ஜுக் மன் ஜீ சதுக்கம் கிரான்ட்பாஸ் வீதி கொழும்பு 14ஐச் சேர்ந்த உவைஸ், ஷானாஸ் பதூரியா தம்பதிகளின் செல்வப் புதல்வி பாத்திமா ஷைஸ்னா தனது முதலாவது பிறந்த நாளை 7.3.96 அன்று தனது இல்லத்தில் வெகு குதூகலமாய் கொண்டாடினார். இவரை அன்பு வாப்பா, ஆசை உம்மா, அப்பாமார், வாப்பம்மா, உம்மம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமாமார், மாமிமார், சாச்சாமார், சாச்சி மற்றும் மச்சான், நானாமார், தாத்தாமார் மதினி ஆகியோர் வல்ல அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்தினார்கள்.



வாழ்க வளமுடன்